பாலபாரதி.

[illegible]

Vol. II JUNE 1925 No. 3.

JL
m211,N24BB
N25.2.3
162245

4359

பாரல் எண்—ம. ககஅ௦.

ஓம்

பாலபாரதி

புத்தகம் ௨ | ஆனி, கலியப்தம் ௫0௨௬. | பகுதி ௩.

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:
வ. வெ. ஸுப்ரமண்ய ஐயர்.

பாரத்வாஜ ஆசிரமம், சேரமாதேவி.

REGISTRAR OF BOOKS
14 SEP 25
MADRAS

"Bala Bharati"

Sheramadevi S. I. R.

Vol II. June 1925. No. 3.

"பாலபாரதி" சந்தாவிகிதம்.

வருஷச் சந்தா:
- உள் நாடு ரூ. ௩—0—0.
- வெளி நாடு ரூ. ௪—அ—0.

தனிப் பிரதி அணா ௪0.

"பால பாரதி" விஷய அட்டவணை

ஆனி, ருOஉ.ள.

—(o)—

"தவ நிலை" (ஸ்ரீ பா. ஆதிமூர்த்தி) ... கஙஉ

இசை காட்டும் பாதை (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) ... ... கஙடு

ஐஹாங்கீரின் முதல் காதல் (ஸ்ரீ வ. வெ. ஸு. ஐயர்) ... கஙஎ

ஸம்ராட் அசோகன் (ஸ்ரீமஹேச குமார சர்மா) ... ... கசo

ஓவியம் அல்லது சித்திரம் வரைதல் (ஸ்ரீ க. அமுதன்) ... கசங

புராதனகாலத்து வித்தியார்த்திகள் (வெ. ஸுப்பிரமணிய ஐயர்) கருo

வீர விளக்கான் வ. வெ. ஸு. ஐயர் கருடு

நமது சிற்பச் செல்வம் ... ... கசுரு

ஸ்ரீ வ. வெ. ஸு. ஐயர் மீது சரம கவிகள் (நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை) ... ... கசுஅ

ஆலோகன அவலோகனம் ... ... கஎக

அன்பர்களுக்கு அறிக்கை

ஸ்ரீ வ. வெ. ஸு. ஐயரின் எதிர் பாராத மரணத்தால் பத்திரிகை இம் மாதம் தாமதமாய் வெளிவர நேர்ந்தது. அன்பர்கள் இக்குறையை மன்னிப்பார்களாக. ஆடிமீ முதல் பத்திரிகை இன்னும் அழகான, முதன்மையான விஷயங்களுடன் விளங்கும். தமிழர்கள் "பாலபாரதி"க்கு எல்லா வகையிலும், ஐயரைத் தொடர்ந்து உதவுவார்களென நம்பிக்கை. பூட்டி அந்த நடத்தும் பொறுப்பை யான் ஏற்றுக் கொண்டுள்ளேன். காலஞ் சென்ற எனது நண்பரின் பெயரும், பொது ஜனங்களின் நம்பிக்கையும் ஓங்கும்படி நன்றியுடனும் திறமையுடனும் "பாலபாரதி"யை நடத்த பராசக்தி அருள் புரிவாளாக!

அன்பன், ஆசிரியன்.

உங்களுக்கு எது வேண்டும்?

18-காரட் கோல்ட் பிளேட் கேஸ்.

பொன் கில்ட் டயல் ரவுண்ட் ஷேப்

ரிஸ்ட்லெட் கடியாரம்



பக்கத்தில் கீழ்வரைவுமுள்ள பொன் கில்ட். இதனுடைய டயல்சளில் பார்ப்பவர்களுக்கு வெகு ஆச்சரியத்தை யுண்டு பண்ணும். இது பார்வைக்கு ரூ. 100-அல்லது அதற்கு மேலும் மதிப்புள்ளதாய்த் தோன்றும் உயர்தரமானதனால் சரியான காலம் காட்டும். ... காலம் போகும். ஆண் பெண் இரு பாலர்களும் உபயோகிக்கலாம். குறைந்த விலை ரூ. 7. 3 கடியாரங்கள் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூ. 20.

விலாசம்:—

உயர்ந்த ஜெர்மன் அலாரம்

டைம் பீஸ்

இது புதிதாக ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப் பட்டது. காலத்திற்கு மணியைக் காட்டுவதன்றி இதில் கண்ட அற்புதமான பொம்மைகள் ஆடவும் குதிக்கவும், கண் சிமிட்டவும் செய்யும். இது தவிர அலாரமணியும் அடிக்கும். மிக்க ஆச்சரியமானவை. முந்துங்கள். மூன்று வருஷத்துக்கு உத்தரவாதம்.

விலை ரூபா 5.

வி. எஸ். வாச் கம்பெனி,
தபால் பெட்டி 105, மதராஸ்.

"லோகோபகாரி,"

கோமளேசுவரன்பேட்டை, சென்னை.
ஓர் அரிய வாரப் பத்திரிகை.

—(o)—

சுவையுள்ள ராஜீய, சாஸ்திரீய, தார்மிக வியாசங்களைத் தாங்கிவருவது.

வருஷ சந்தா: இந்தியா பர்மா லங்கைக்கு ரூ. ச. வெளி நாடுகளுக்கு ரூ. சு

தமிழர்

ஒரு சிறந்த தனித்தமிழ் மாதப் பத்திரிகை
பத்திராதிபர்: ஸ்ரீமான் உ. க. பஞ்சரத்தினம்
வருஷ சந்தா: உள் நாடு ரூ. உ-அ. வெளி நாடு ரூ. ங. மாணவர் பதிப்பு ரூ. உ-0-0. ஆயுட்கால சந்தா ரூ. உO. கிடைக்குமிடம்:
"தமிழர்" தெப்பக்குளம், திருச்சி.

"சிந்தாமணி,"

ஒரு உயர்தர செந்தமிழ் மாதப் பத்திரிகை
பல அறிஞரின் அரிய வியாசங்களுடன் கிரௌன் 1/4ல் எஉ—பக்கங்கள் கொண்டது.
பத்திராதிபர்:— சகோதரி ...லாம்பாள்
வருட சந்தா:-உள் நாடு ரூ.-ங. வெளி நாடு ரூ.-சு. மாதிரி பிரதி அணா கO (தபால் முத்திரையாக அனுப்பவும்) கிடைக்குமிடம். காரியஸ்தன், சிந்தாமணி, விவேகாச்ரமம், மைலாப்பூர், சென்னை.

ஆரோக்கிய தீபிகை

ஆசிரியர்: யூ. ராம ராவ்

வியாதியில்லாதவர் வியாதி வராமல் காத்துக் கொள்வதற்கும் வியாதியுள்ளவர் சுய சிகிச்சை செய்துகொள்வதற்கும் சிறந்த வழிகளைக் காட்டும் ஓர் மாதப் பத்திரிகை. வருஷ சந்தா ரூ. க-அ கிடைக்குமிடம்: காரியஸ்தர், ஆரோக்கியதீபிகை, ..., தம்புசெட்டித் தெரு, சென்னை.

"பாலபாரதி" புஸ்தகசாலை சோமாதேவி.

——[*]——

நூல்		ரூ.	அ.	பை.
க.	மகாத்மா காந்தி ...	க	0	0
உ.	ஆரோக்கிய வழி ...	0	கஉ	0
௩.	நீதி தர்மம் ...	0	௬	0
௪.	இந்தியாவைப் பற்றிய உண்மை ...	0	௬	0
௫.	கிரிபாலா நாடகம் ...	0	௪	0
௬.	அர்ச்சுன சந்நியாசி ...	0	கஉ	0
எ.	வால்மீகி விஜயம் ...	க	0	0
அ.	விவேகாநந்தரின் வர்த்தமான பாரதம் ...	0	க0	0
௯.	தன்னம்பிக்கை ...	0	அ	0
க0.	ரவீந்திர டாகூரின் கதைகள் ௩-ம் தொகுதி	0	கஉ	0
கக.	௸ ௪-ம் தொகுதி ...	0	கஉ	0
கஉ.	ஸ்வபந்த ப்ரகாசம் ...	0	அ	0
க௩.	ஜாசதுஷ்டிரன் ...	0	௬	௬
க௪.	குரு கோவிந்த சிங்கன் (எ0டக்கம்)	0	௪	0
15.	V.V.S. Aiyar's English Translation of the *Kural* 2nd Edition ...	5	0	0

SOUTH INDIAN SHRINES

Describes the chief temples in all aspects. Double Crown Quarter 638 Pages: 251 Illustrations. Rs. 6/.

VAIDYANATHAN BROS.,
TRIPLICANE, MADRAS, S. E.

BUSINESSMEN!

வியாபாரிகளே!! தொழிலாளர்களே!!

இந்தியாவில் செய்யப்படும் தொழில்களின் அபிவிருத்தியை நாடி நாங்கள் ராவ்ஸ் இண்டஸ்ட்ரியல் டைரெக்தரி (Rao's Industrial Directory) என்று வெளிப்படுத்தப் போகிற புஸ்தகத்திலும், மான்யுபேக்டரர்ஸ் ஸர்வீஸ் அண்டு இண்டிஸ்டரியல் ரெவியூ (Manufacturers Service and Industrial Review Monthly) என்ற மாதாந்தரப் பத்திரிகையிலும் தங்களுடைய விளம்பரத்தை வெளிப்படுத்துவோம். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களில் செய்யும் தொழில்களும் வியாபாரங்களும் இந்த புஸ்தக மூலமாயும் எங்கள் மாதாந்தர பத்திரிகை மூலமாயும் தெரிந்துகொள்ளலாம். இவ்வளவு மகத்தான விஷயங்கள் அடங்கிய புஸ்தகத்தை (Directory) வர்த்தக மித்ரன் (Bnsiness friend) என்றே சொல்ல வேண்டும். அதனால் ஒவ்வொரு வியாபாரியும் கைத் தொழில் செய்பவரும் இப் புஸ்தகத்தில் தங்களுடைய விளம்பரங்களைச் செய்வது மன்னியில் புஸ்தகத்தையும் ! பத்திரிகைகளையும் தங்களிடத்தில் வைத்துக் கொள்வது மிகவும் அவசியம் என்பது நாங்கள் சொல்லவும் வேண்டுமோ?

விளம்பரத்தால் தான் இங்கிலாந்து, அமெரிக்கா ஜெப்பான், ஜெர்மனி முதலியமேல் நாட்டார்கள் தங்களுடைய கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் விருத்தி செய்து உலகத்திலுள்ள செல்வங்களைச் சம்பாதித்துப்போய்த் தங்களுடைய தேசங்களை மிகவும் முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள். விளம்பரந்தான் வியாபாரத்துக்கு அடிப்படை. மேல் நாட்டார்கள் விளம்பரத்திற்காக பகுதி முதலுக்கு மேல் சந்தோஷமாக செலவழிக்கிறார்கள். ஆகையினால் தான் (விளம்பரத்தினால்தான்) அவர்கள் இவ்வளவு மேன்மையான ஸ்திதியில் இருக்கிறார்கள். இதுவே உங்கள் சமயம். ஒரு போஸ்டு கார்டு அனுப்பினால் விபரங்கள் முழுவதும் தெரியப்படுத்தப்படும். நம்முடைய தொழில்களை மேல் நாட்டார்கள் தொழில் போல அபிவிர்த்திக்குக் கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் மிகவும் முயற்சி செய்துகொண்டு வருகிறோ மென்பதற்கு இந்த பத்திரிகைக்குமேல் என்ன அத்தாக்ஷி வேண்டும்? உடனே முந்துங்கள் [Our Directory advertisement Forms close with ont Prior Intimation]- முன் அறிவிக்கை செய்யாமல் டைரக்டரி ஆர்டர்கள் வாங்குவதை நிறுத்திவிடுவோம். முந்துங்கள் ! முந்துங்கள் !!

உடனே எழுதுங்கள் !

The Manufacturer's, Service, Tinnevelly Junction.
மான்யுபேக்டரர்ஸ் ஸர்வீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

பாலபாரதி

புத்தகம் உ	ஆனி, கலியுகத்தம் ௫0உஎ.	பகுதி ௩

OFF... OF THE REGISTRAR
14 SEP 1925
MADRAS

"தவநிலை."

அரவிந்தகோஷரும் சரபங்கரிஷியும்.

——[o]——

(ஸ்ரீமான் காசி பா. ஆதிமூர்த்தி பாடியது)

தேடும் தவமும், திருவும், கல்வியும்,
பீடும், புகழும், பெருகும், வலியும்,
ஓடும் பகையும், உயர்தன் அரசும்,
காடும் பெறுவான் நாடும் சமயம்.

தேவம் புவி வந் திடினும் சிலர்செய்
பாவம் தொலையப் பலன் வந் துறைக்
தாளும் தம்மேற் கொடுதன் பணியில்
மேவும், இதுவே வேதம் விதியே.

எது ஐக்கியம் ஏகம் எனத்தருளி
மது வைக்கும் மலர்பொழில் வாழுயரும்
புதுவைக் கணிருந்து தவம் புரியும்
பொது வைக்கு முளத்துயர் புத்தியினன்.

பாவுந் தவமும் பணியுந் தகையன்
உரவு அந்தமிலான் போகம் புரிவான்.
சாமந் தருவுஞ் சயவேந்த [illegible]
அரவிந் தனெனும் பெயரான் அமலன்.

211,N2488
N25.2.3
11 2245

ஞானப்படி ஏழும் நடந்து கடந்
தீனப்புவி மாயை இகந் தயரும்
தானப் புனையாம் சாபங்களை நேர்
மோனப் படிவா யெழு மறிவன்.

பூதங்கள் புரண் டிடினும் புலனின்
பேதங்கள் பிறந் திடினும் பிழையாப்
போதன் சர பங்கனையே புரையும்
நாதம் தெளி யோக நலம் நுகர்வான்.

எவ்வெத் திறமுள் ளனவவ் வுயிரும்
பவ்வத் துயரற் பலபுற் புதமே
இவ்வொத் தையிலா நிலை யென்றுணரும்
செவ்வித் திறம்நன் குதெரிந் துடையான்.

சோகம் பெருகும் அடிமைத் துயரும்
வேகும் பவமும் வினையும் பகையும்
போகும் படியும் புனிதம் பெறவும்
யோகம் புரியும் உயர்மா தவனே.

அத்யாத்ம யோக நிலைக் கதிபன்
வித்யார்த்திகள் யாரினு மே தகையன்
"சத்யாக்கிரக" சாதனையே புரியும்
நித்யாத்மிக நீதியில் நின்றுயர் வான்.

அழிவின் பதமொன் றுமிலா தழிவின்
ஒழிவின் பதமே யுறுவே னெனவே
மொழியுந் சரபங் கனைமுற் றுணர்வான்
சுழியின் முனைகண்டு சுகம் பெறுவான்.

மேனோர் பதமே வுதியந் தெனவே
வானோர் தொழுமா தவனே நிகரத்
தானே அமைபா கருதத் தலைவர்
"சேனாபதி" யாகுற சிந் தையான்.

யோகம் தவம் ஓங்கி வளர்ந் தொளிர்கப்
போகம் புவி பொங்குக போதமுறச்
சோகந் தெற நின்றருள் தந்திடமெய்ப்
பாகங்களு மெய்தக பண்டை யினே.

7
14 SEP 1925
MADRAS

கீதை காட்டும் பாதை

(ஸ்ரீமான் சுத்தானந்த பாரதியார் எழுதுவது)

மனிதன் தன்னுள் இருக்கும் தெய்வ சக்தியை அறிய வேண்டும். ஆசை, அச்சம், பொறாமை, சினம் முதலியவற்றை நீக்க வேண்டும். பொறுமையும், மன மொழி மெய்களில் தூய்மையும் அருளும், அடக்கமும் கொள்ள வேண்டும். இயற்கையில் தனக்கு ஏற்பட்ட கருமத்தை ஒரு மனத்தோடு, பலத்தில் இச்சையின்றி, உறுதியாகச் செய்ய வேண்டும். எல்லா உயிர்களிடமும் ஈசனைக் கண்டு அன்பு புரிய வேண்டும். ஈசன் இட்ட பணியைச் செய்து பிறகு ஈசனுடைய அடி மலரில் சேர வேண்டும். இவற்றிற்கெல்லாம் நற்றுணையான திருநூல்களே உலகில் கடவுள் நூல்களென ஏத்தப்படுகின்றன. உபநிடதம், கீதை, ஜெந்த வஸ்தா, பைபிள், கொரான் புத்த தர்மம், பிரம்ம சூத்ரம், சத்தியார்த்தப் பிரகாசிகை, தேவாரம், திருவாய் மொழி, திருக்குறள் முதலியன இத்தகைய புனித நூல்களாகும். இந் நூல்களே மனித வர்க்கத்தின் நாகரீகத்தையும் தர்மத்தையும் காப்பன. ஜெந்த வஸ்தா இல்லாத பாரசீகமும், பைபிள் இல்லாத எபிரேய சமூகமும், கொரான் இல்லாத அரேபியாவும், உபநிடதமில்லாத ஆரிய நாடும், உயரிய ஒழுக்கமும் சீரிய வாழ்வுமின்றி அறங்குன்றி அழிபுமென்பது சதம். ஐரோப்பியரின் நடத்தையில் ஏசுநாதர் சொன்ன ஒழுக்கநெறியில்லாததனால்தான் அவர்கள் போரிலும் போட்டியிலும், பொன்னாசையிலும், இடம்பத்திலும், வெறும் வாணிபத்திலும், மூழ்கியிருக்கின்றனர். உபநிடத வாழ்க்கையைக் கைவிட்ட பாரதநாடு என்ன கோலம் பூண்டிருக்கிறது! "கடவுள் தானே உயிர்களானான்; அவன் என்னைப் பிரியாதிருக்கிறான்; நான் அவனை நீக்காதுள்ளேன்; நான் பொன்றாதவன்; கடவுள் தன்மையுள்ளவன்," என்று மக்கள் எண்ணத்தை உயர்த்தும் சீரிய மொழிகளைப் பாரத நாடு அறிய மறந்தது. தன் நிலைமையில் தாழ்ந்தது. இப் பிறமொழிகளை அன்னிய கல்வியும் நாகரீகமும் மூடிநிற்கின்றன. தன்னறிவும் தன்னம்பிக்கையும் புகட்டி நமது அறத்திற்கு அடிப்படையாகும் உபநிடதத்தின் உண்மையை இன்று தெரியினும் பாரதர் ஆன்ம வீரராய் நிற்பரென்பதில் ஐயமில்லை. தன்னை சிம்மமென்றறிந்த அரிமா ஆடுகளுக்கு அஞ்சுமா? ஆயினும் உபநிடதங்கள் அனைத்தையும் ஆராய்ந்தறியத் தற்காலத்துச் சுறுசுறுப்புள்ள பலவீன மாந்தருக்குப் போது போதாது.

எல்லா உபநிடதங்களையும் பசுக்களாகக் கொண்டு கண்ணன் உலகிற்குக் கறந்து கொடுத்த அமுதமான பகவத்கீதையைச் சரிவரக் கற்றுணர்ந்து நின்றால் பாரதர் இழந்த ஒளியை எய்துவாரென்பதில் ஐயமில்லை. மக்கள் கடனையும் அத்யாத்ம வாழ்வையும், அறத்தையும், அறிவுறுத்தும் ஆசானே கீதை. இது தன் வினையில் தளர்ந்தவனை உயர்த்தும். பந்தப்பட்டவருக்குச் சுதந்திரம் தரும். இறந்தார்க்கும் இறவாதவர்க்கும் துணையாயிருக்கும். சந்தேகங்களைப் போக்கும். மஹாபாரதத்தின் சாறாய் அறத்தாய் தங்கும் தாமரையாய் விளங்கும் இக் கீதை 700 ஸ்லோகங்கள் கொண்டு 18 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அதிதியின் உருவான கௌரவர்கள் அறவடிவான பாண்டவர்களை, நாடு பறித்து, காடு துரத்தி அவர்கள் உயிரை யுறிஞ்சச் செய்பெருங் கொடுமைகள் செய்தனர். பாஞ்சாலியைத் துயிலுரிந்தனர். அரக்கு மாளிகையில் புகுத்தித் தீயிட்டனர். பூதங்களை ஏவினர். கொலைஞரை விடுத்தனர். குடிக்கும் நீரில் நஞ்சு கலந்தனர். உரு மறைந்திருக்க விடுத்தனர். ஆனால் பாண்டவருக்கு அறக்கடவுளே துணை நின்று துயர் தப்புவித்தான். பாண்டவர் பலவேடங்கள் பூண்டு விராடராஜனுடைய ஊழியத்தில் அமர்ந்து அஞ்ஞாதவாசமும் செய்தனர். அதற்கு முன்பு கௌர [illegible] ஆண்டுகள், எண்ணி [illegible] துயர்களைப் பொறுத்து வனவாசம் செய்தனர். பிறகு வாக்களித்தபடியே துரியோதனன் தமக்கு உரிய அரசைத் தந்துவிடுவானென நம்பினர். பொறாமையும், வஞ்சகமும் நிறைந்த கௌரவர், தமது சகோதரர்பால் சற்றும் இரங்காது, பாண்டவருக்குக் குடியிருக்கக்கூட இடந்தரோம் என்று சொல்லிவிட்டார்கள்.

சாதுக்களான பாண்டவரின் இடர் களைந்து, நாசவான்களான கௌரவர் போன்ற அரக்கரை பொடித்து நமது பாரத நாட்டின் தர்மத்தை நிலைநாட்டவே கண்ணன் பிறந்தான். அவனது தாய்தந்தையரான தேவகி வசுதேவரை அவன் மாமன் கம்ஸன் கொடிய சிறையிலிட்டிருந்தான். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளைக் கொன்றுவந்தான். காரணம், தன் செருக்கைக் கெடுக்கப் போகும் கண்ணனே. கண்ணன் சிறையிற் பிறந்தான். கோகுலத்தில் ஆயர்பாடியில் யசோதையின் செல்வ மைந்தனாய் வளர்ந்தான். தனது தெய்வத் தன்மையை முற்றும் அறிந்து, தான் உலகிற்கு வந்த வினையைத் தெரிந்து, அதைச் செய்யும் பேராற்றலுடனே, கரும போகத்தின் கட்டழகாகக் கண்ணன் பிறந்து வளர்ந்தான்.

தன்னையடையத் தவஞ்செய்த கோபியரின் ஜீவாத்மாவோடு கலந்து களிப்பித்து, அவர்களுக்கு ஆவியாய் நின்றான். தன் அழகாலும், எழிலாலும் குழலாலும், ஆத்யாத்மிக ஆடல்களாலும் உலகையே வென்றான். அவனைக் கண்டோர் காமது காமம், காயங்களை அவனுக்கே [illegible]யான மாயா லீலைகளைச் செய்தான். கம்ஸன் ஏவிய அரக்கரான பூதகி, சகடாசுரன், காளிங்கன், தேனுகாசுரன், பகாசுரன், குவலயாசுரன், அரங்க வண்ணான், சாணூரன் முதலியோரின் உயிரைக் கொய்தான். முடிவில் தன்னை இம்சித்த கம்ஸனையே கொன்றான். தன் பெற்றோரைச் சிறை மீட்டான். இதன் பிறகே உபநயனம் செய்துகொண்டு சாந்தீப முனியிடம் கல்வி பயின்றான். இத்தோடு கண்ணன் சரிதையின் முதற் கட்டம் முடிகிறது. பிரேம பக்தையான உருக்மிணியின் மனப்படி அவளை மணந்ததும், ராதையுடன் வெளிக்குச் சிற்றின்பமாகத் தோன்றும் பல ஆத்யாத்மிக சிருங்கார ஆடல்கள் புரிந்ததும், துவாரகையில் அமர்ந்து நீதி செலுத்தியதும் இரண்டாவது பாகமாகும்.

மூன்றும் பாகமே கண்ணனுக்கும் பாண்டவருக்கும் உள்ள உறவு. தன் வினையை முடிக்கவும், உலகிற்குத் தான் சொல்ல வேண்டிய வீரவேதமான கீதையை உபதேசிக்கவும் தக்க பாத்திரமாக அருச்சுனனையே கண்ணன் நேசமாக்கிக் கொண்டான். அறவடிவான தர்மபுத்திரனையும், சகலமும் கற்றுணர்ந்த சகாதேவனையும் விடுத்துக் கண்ணன், பாமர லௌகிகனும், பெண்ணாசை மிகுந்தோனுமான அருச்சுனனை ஏன் உபதேச பாத்திரமாகக் கொண்டான்? ஏனெனில் ஞானம் முற்றிய தரும சகாதேவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டியதில்லை. அவர்களோடு பேசினால் சாதாரணமானவருக்கு எட்டாத உயர்ந்த விஷயங்களைப் பற்றித்தான் பேச நேரிடும்.

அப்போது கீதை அதன் பொதுத் தன்மையை இழந்துவிடும். ஆதலின் எல்லா வகுப்பினரும் கற்றறிய வேண்டிய ஒரு உபதேசத்தைப் பெறச் சாமானியமான அருச்சுனனே தக்கவனெனத் தேர்ந்தான். அருச்சுனன், மிகவும் அழகன். அரிய வீரன். தீயரைக் காய்வதற்கு அவனே தக்கோன். இதனால்தான் கண்ணன் அவனோடு தோழமை பூண்டான். தன் தங்கை சுபத்திரையை அவனுக்கு மணம்புரிவித்தான். அவனோடு கூடிப் பல விளையாட்டுகள் செய்து மெல்ல மெல்ல அவனைப் பக்குவப்படுத்தினான். பாண்டவருடனே யிருந்து அவர்களுக்கு வேண்டிய துணை செய்தான்.

ஒரு வீடுகூடத் தரோம் என்று வஞ்சகம் புரிந்த கௌரவரால் ஏமாற்றமடைந்து, அநாதைகளாய் நிற்கும் பாண்டவரின் பக்கத்தில் நின்று அவர்களுக்காகத் தூது சென்றும் பயனில்லாது, முடிவில் போர் செய்வதே கடனெனத் தூண்டியவனும் கண்ணனே. அருச்சுனனுக்குச் சாரதியாக அமர்ந்து இப்போது போர் முனையில் கௌரவ பாண்டவ சேனைகளுக்கு நடுவே தேரை நிறுத்தித் தன் பகைவர்களான போர் வீரரை அருச்சுனன் காணச் செய்ததும் கண்ணனே.

கௌரவ சேனையில், தான் வணங்கத் தக்க பீஷ்மரும், துரோணரும், கிருபரும், அசுவத்தாமரும், விகர்ணரும், தன் பாட்டன், மாமன், குருமார்களும், பெரியோரும் போர் புரியத் தயாராகின்றனர். யுயுதானன், விராடன், துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், காசிராஜன், புருஜித், குந்திபோஜன், சைபியன், யுதாமன்யு, உத்தமௌஜா, ஸுபத்திரை மகன், திரௌபதி மக்கள் முதலிய போர் அரிகள் இருக்கின்றனர். எதிர்ப் பக்கத்தில் பல சூரர்களும், வீரர்களும், கௌரவரும், பெரியோரும், மஹாரதர்களும் உள்ளனர். யுத்தம் தொடங்கப் போகிறது. சங்குகளும், பேரிகைகளும், வான்பிளக்கத் தொலிக்கின்றன. கண்ணன் தனது பாஞ்சஜன்யத்தை ஊதினான். தனஞ்ஜயன் தேவதத்தத்தை ஒலித்தான். தருமனும் தனது அனந்த விஜயமென்னும் சங்கை ஊதினான். அச் சமயத்தில் அருச்சுனன் தனக்கு எதிர்களாய் நின்ற பெரியோரையும் பந்துக்களையும் கண்டு "இவர்களையோ நாம் கொல்லுவது? அந்தோ அந்தக் கொலை பாதகத்தையா நானே செய்வது? இவர்களெல்லாம் வணங்கத்தக்கவர்களல்லரோ? ஏ கிருஷ்ணா! இவர்களையெல்லாம் கொன்று அநித்யமான பூமியை ஆண்டு இரத்தந் தோய்ந்த போகத்தை அனுபவிப்பதைவிடப் பிச்சை யெடுத்துண்டு பிழைக்கலாம். அந்தோ என் மனம் சுழல்கிறது! காண்டீவம் கையினின்று நழுவுகிறது! ஏ கிருஷ்ணா, உன்னையே சரண் புகுந்தேன். நான் உன் சீடன். இச் சமயத்தில் எனக்குத் தகுந்த போதனையைச் சொல்லி எனது துன்ப சங்கடத்தைத் தீர்ப்பாய்!" என்று அருச்சுனன் இரக்கத்தால் வெல்லப்பட்டு, "நான் யுத்தம் செய்யேன்" என்று வில்லைக் கீழே போட்டுச் சோர்ந்துவிட்டான்.

போர் முழக்கத்துடன் பகைவர் பாண்டவரை எதிர்த்து வந்து கொண்டிருக்கையில், அருச்சுனன், ஒரு வீரன், சோர்வடைந்தது தன் பத்தினியை மானபங்கம் செய்த கயவனிடம் ஜீவகாருண்யம் பூண்டு, அவனைப் பொறுக்க ஆற்றலிருந்தும் அவனைத் தண்டியாது, தான் வீட்டைவிட்டு ஓடிப் போவதற்குச் சமானமானதன்றோ? [illegible] உலகில் [illegible]மன்றோ? களைகளைக் [illegible]விடின் நெற்பயிர் [illegible]மன்றோ? அறவடிவான பாண்டவர்களை வருத்தி, அலைத்து வதைப்படுத் தகாத [illegible] பூண்ட அரக்க குணமுள்ள கௌரவர் பாண்டவ

ரின் உரிமையான ராஜ்ஜியத்தையும் பறித்துக் கொண்டு அவர்களுக்கு இருக்க இடந் தராமல் அவர்களைக் கொல்லப் போரும் புரிய நிற்கையில் அருச்சுனன் சோருவது பேதமை யென்பதை அதிகம் விளக்க வேண்டுவதில்லை. தர்ம யுத்தங்களும், போர் வினைகளும் சாதாரணமாயிருந்த அந் நாட்களில் அருச்சுனன் நடத்தை அடாததாகும். மேலும் அரக்கத் தன்மையை யொடுக்கி 'அமரத் தன்மையைப் பெருக்கவே கண்ணன் தோன்றினான். தருமம் கௌரவர்களால் தவிர்க்கப்பட்டுப் பாண்டவரைச் சரணடைந்தது. அத் தருமத்தைக் காக்காவிடின் அருச்சுனனுக்குப் பெரும் பழியாகும். மேலும் தன் க்ஷத்திரியக் கடமையைச் சமயத்தில் கைவிடுத்து நிற்பது வீரமன்று, விதியன்று; அதுதான் செய்யவேண்டியதைச் செய்யாமையாகும். தன் வினையை மறந்ததாகும். தன் வினையை மறந்தவனைக் கண்டு தருமமும் நகுமன்றோ? தன்வினை மறப்பினால்தான் வாழ்க்கை கெட்டு, மனங் கலக்க மெய்தி, நாநாத வினைகளில் புக்கு, புகுந்து ஜன்மத்தொடர் வினைக்கிழிவினை இறப்பிற்கும் பிறப்பிற்கும் அலைகிறது.

ஆதலின், கண்ணன் கருமத்திற் சோர்ந்த நரியனை விளித்து, "ஏ அருச்சுனா, இப்படிப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில், இந்தச் சோர்வு உனக்கெங்கிருந்து வந்தது? இது அநாரியத்தன்மை மோக்ஷவிரோதி; உனது கீர்த்திக்கு இழிவு. புத்திசாலியைப் போல் பேசுகிறாய். எது வருந்தத் தகாததோ அதற்காக வருந்துகிறாய். யாரையோ நீ கொல்லப்போவதாகவும், யாரோ இறக்கப்போவதாகவும் நீ பச்சாதாபப்படுகிறாய். கொல்லப்படுவது எது? கொல்லுபவன் யார்? கொல்லக் கூடாதவற்றைக் கொல்லுவதாகப் பேதைமையால் எண்ணுகிறாய். இளமையும், முதுமையும் இவ்வுடற்கன்றோ? இவ்வுடலோ நீ இயம்புவாய் விஜயா? இறப்பது எதுவே? இவ்வுடலன்றோ? பிறப்பது எதுவே? பிரிதும் இவ்வுடல். இறக்கும் உடலையே இகலிற் சிதைப்பாய். எதனால் இவ்வுடல் உயிரோடிருப்பதோ, எது இவ்வுடலுள் மாறாதிருப்பதோ, இவ்வுடல் இறப்பினும், இறக்கினு மெந்தத் திவ்விய ஆவி சிதையாதிருப்பதோ அதுவே நீயே ஆவாய். உன்னுயிர், அதுவே யிலங்கி அமர் புரிவோராய், யாக்கைச் சட்டை யடைந்து நிற்பது. வடிவையும் பெயரையும் விலக்கி நோக்குவாய். தேடியே எங்கும் ஒன்றெனத் தெரிவாய். அத்தகை ஆன்மா அழிவதுமில்லை. அழிவது பொய்யே. அமரர்வது மெய்யே. தேகச் சட்டையே சிதையும் மாயை. மாறான், அழியான், மாயான் தேகி. கொல்வோன் கொல்லப் படுவோனென்பது, அறியாமையினால் என்பதை அறிவாய். கிழிந்த உடையைக் களைந்தே வேறொரு புதிய ஆடையைப் பூண்பதே யொப்ப, நலிந்த உடலை விடுத்தே மற்றொரு உடலிற் புகுதல் சாவென உரைப்பர். வில்லும், வாளும், தீயும், கனலும், வன்னைவல்ல தேகியை யணுக. பிறப்பது முடலே இறப்பது முடலே. சாவது செத்தால் சஞ்சலம் ஏனோ? இறந்தே திரும் இவ்வுடலுக்கோ இத்தனை வருந்தினைப் இனைப்பது வீரா! சதமது உடலின் சாவினை யெண்ணியோ, சதருமமான சமரை வெறுத்தனை? சமரம் புரிதல் தருமமுனக்கு க்ஷத்திரியர்க்குத் தருமம் சமரே. பெரும் பேறெனத்தினை விஜய! இதைப் போல் தருமப் போரொன்றரியது காணாய். தானாய் வந்த தருமச் சமரை வீணாய் விடுத்தால் உன்னறம் தவிர்வாய். தன்னறம் தவறின் சார்ந்திடும் பாவம். வீருள்வீர, வெற்றி விஜய! போரினை நீப்பின் புகழை யிழப்பாய். வானுலகுன்னை மதியா தறிவாய். அச்சத்தாலே அகன்றனை யென்றே அச்சமாயுன்னைச் சொல்லுவர் வீரர். இகழ்ப்பட்டு இருப்பினு முலகில், துயரம் எது சொல்? துணிகுவை விஜயா! சயமுந் தோல்வியுஞ் சமயமென எண்ணித் துணிவாய் போரில்

தொல்லறம் அதுவே. வீழ்ந்தால் விண்ணின் இன்பம் பெறுவாய் வென்றால் அரசின் போகம் அடைவாய்! ஆதலின் அமர்செய எழுந்திரு! அருச்சுனா!" என்றான் கண்ணன். இன்னும் கண்ணன், "பின் வரும் பலனை எண்ணிடாதுலகில் உன் பெருங் கருமஞ் செய்வ துயர்வு. கருமம் செய்வதுன் கடமையே யல்லால், பலனைக்கருதல் உன் பணியல்ல. பணியைப் போற்றுக! பலனைக் கருதேல். சித்தி யசித்தியைச் சிந்தியாதே நீ. சம நினைப்போடே தன்னறஞ் செய்வாய். யோகமென்பது சாத்துவ உணர்ச்சி. திறமையாய்க் கருமஞ் செய்தலே யோகம்! பல நினைவகற்றி ஒரு மனம் பூண்டே நிலைத்த நெஞ்சொடு நின்னறம் செய்வாய்" என்று சொன்னான். விஜயன் தன் கடமையை உணர்ந்தான். சஞ்சலம் என்னும் பனி கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது. கண்ணன் ஸ்திதப்ரக்ஞனாயிருந்து உன் பணி செய் என்றான். விஜயன் ஸ்திதப்ரக்ஞனுடைய லக்ஷணங்களைக் கேட்கக் கண்ணன் சொல்லுகிறான்:

"சினமொடு காமம் வெகுளியுமின்றி, விருப்பினும் வெறுப்பினும் வேறுபடாது, ஆமை அங்கம் அடக்குதல் போல அடங்கிய மனத்தன் நிலையறிவோனும்; தன்னை யடக்கி யமர்ந்த மனத்தோன் பாரொடு கலப்பினும் பந்தமெய்தான். அமர்ந்த சித்தமும் அடங்கிய உள்ளமும் அமைந்தோன் சாந்தம் அடைகுவன் அன்றே. ஆறுகள் பாயும் அலை கடல் போல் அவன் நிறை குறைவற்று ஆசைகளாலே தாக்க வொண்ணாது தன்னில் நிலைப்பான். அத்தகை உறுதியை யடைந்து விஜய! உன் உத்தமக் கருமம் உயர்வுறச் செய்வாய்."

வெற்றியும் தோல்வியும், வைபவமும் நஷ்டமும், இன்பமும் துன்பமும் சம புத்தியுடன் பொறுத்து, சஞ்சலப்படும் நெஞ்சை ஆமை போன்று அடக்கி, பலனைக் கருதாது, கடவுள் உனக்குக் கொடுத்த வினையில் மனதை ஊன்றி, வேறு எண்ணமின்றி உனது கருமமே கண்ணாயிருந்து அதைச் செய்வாயாக என்பதே கண்ணன் இறுவரையில் சொன்னதன் கருத்து.

கீதையின் உட்கருத்தை யறியாதவருக்கு, இதினின்று சில சந்தேகங்கள் தோன்றலாம். உலகின் துயர்களுக்குக் காரணமான போருக்கு ஏன் விஜயனைக் கண்ணன் தூண்ட வேண்டும்? கண்ணன் உலகோரைப் போர் செய்யத் தூண்டுவது போல் ஆயிற்றல்லவா? கொலைக்கும் போருக்கும் தூண்டும் நூல் ஒரு புனித நூலாகுமா? என்று இன்றும் சிலருக்குச் சந்தேகமிருக்கிறது. சில புட்சிக்காரர் இதை வாஸ்தவமாகப் போருக்குத் தூண்டும் நூல் என்று அனர்த்தம் செய்கின்றனர். கீதை போருக்கும், பலாத்காரத்திற்கும் தூண்டும் நூல் அல்ல என்பது எனது நிச்சயம். அதை முழுதும் உணர்ந்து படித்தோர் சாந்தமும், துறவும், வீரமும், கரும சித்தியும், பற்றற்ற தன்மையும், ஒழுக்கமும் உறுவார்களே யொழிய, சண்டையும் கொலையும் செய்வதில்லை. எத்தனை துறவிகள் கீதையினால் சாந்தமடைந்திருக்கின்றனர்! எத்தனை இல்லறத்தோர் கீதையினால் ஈடேறியிருக்கின்றனர்! கீதைகொடுக்கும்ஞானப் பாலை உலகெலாம் பருகட்டும் என்ற கருத்துடனேயன்றோ சங்கரர், உடையவர், மத்துவர் முதலிய தெய்விக புருஷர் அதற்குப் பாஷியம் எழுதியிருக்கிறார்கள். எட்வின் ஆர்னால்டு என்ற அறிஞர் 'தெய்விகப் பாட்டு' என்ற தலைப்புடன் அதை ஆங்கிலத்தில் பாடியுள்ளார். பாரத நாடு மட்டுமன்று, இப் பாரே பல பாஷைகளில் அதன் பொருளையுணர்ந்து வணங்குகிறது. வேதாந்தத்திற்கு அடிப்படையான உபநிடதம் பிரம சூத்திரங்களோடு கீதையைச் சிறந்த நூலாகச் சேர்த்திருக்கிறது. இக் கீதை காட்டிய பாதையிற் செல்வோர் மெய்ப்பொருளிற்றும் மோக்ஷ

இன்பத்திற்கும், சுதந்திரத்திற்கும், அமர நிலைக்கும், செல்லுகிறார்களேயொழியப் போருக்கும், கொலைக்கும் போவதில்லை. "ஈசன் உலகிற்கெல்லாம் பிதா; அவனுள் அனைத்தும் அடக்கம்; அவன் எவற்றிலும் உள்ளான், எல்லா உயிர்களுக்கும் புகலிடம் அவனே; ஒருவரையும் துவேஷிக்காதே; எல்லாரையும் சமமாக எண்ணு; சகோதரன் போல எல்லாருடனும் பழகு; மனதில் கருணைகொள், மமதையும் அஹங்காரமும் கொள்ளாதே; சுகத்திலும் துக்கத்திலும் சமபுத்தியோடிரு; பிறர் உனக்குச் செய்யும் குற்றங்களை மன்னிக்கும் தன்மையுடன் பழகு; எப்போதும் திருப்தியாயிரு; திடபுத்தியைக் கைவிடாதே. மனதையும் புத்தியையும் கடவுளுக்கு அர்ப்பணி; இப்படிப்பட்ட பக்தனையே நான் பிரியமுடன் நேசிக்கிறேன்," என்று பகவான் பக்தியோகத்தில் சொல்வதையும், அறிமையை, சத்யம், அக்ரோதம், தியாகம், சாந்தி, தயை, க்ஷமை, சுத்தம், அத்ரோகம் முதலியவற்றை தேவகுணங்களாகச் சொல்லுவதையும் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் இந்தக்கீதையானது மஹாத்மாவிற்கு மேற்பட்ட அறிமையையும், அரிச்சந்திரனுக்கு மேற்பட்ட பொறுமையையும், சுகனுக்கு மேற்பட்ட ஞானத்தையும், நாரதனுக்கு மேற்பட்ட பக்தியையும், கண்ணனுக்கு மேற்பட்ட யோகத்தையும், அர்ஜுனனுக்கு மேற்பட்ட வீரத்தையும், சிபிக்கு மேற்பட்ட தியாகத்தையும், போதிக்கும் வேதமென நன்கு விளங்குகிறது. இது அஞ்ஞான வடிவாய் விளங்கும் அறக்கடலை, ஜீவாத்மாவைப் பரமாத்மாவுடன் சேர்க்கும் தவழு. சம்ஸாரத்தைக் கடக்கும்படி செய்யும் ஞானத் தோணி. ஆத்ம ஞானத்தைப் புகட்டும் சற்குரு. நம்மை அழிவற்ற ஒளியெனக் காட்டும் கருவி. உலகைக் கடவுளிலும் கடவுளை உலகிலும் காணச் செய்யும் கண்ணாடி.

உலகில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு வினைக் கனியாய்ப் பிறந்திருக்கிறான். அவ் வினையை உறுதியுடன் செய்து உய்யும் வழியையே கண்ணன் பாரதப் போரின் சார்பாகச் சொல்லியிருக்கிறான். கண்ணன் விஜயனைப் போருக்குத் தூண்ட மட்டும் கீதோபதேசம் செய்திருப்பின் இரண்டாவது அத்தியாயம் இடைவரையோடு கீதை நின்றிருக்கலாம். அதற்குமேல் போக வேண்டிய அவசியமில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் க்ஷத்திரியனுடைய கடமைக்குக் கண்ணன் அவனைத் தூண்டுகிறான். அதுபோலவே நம்தம் கடமைகளுக்கே கீதை மாந்தரைத் தூண்டுகிறது. கர்மயோக அத்தியாயத்தில் கண்ணன் சொல்வதைக் கவனியுங்கள்:—

"மாந்தர், ஒரு கணங்கூட உழைப்பு நீங்காது கருமஞ் செய்யக் கடப்பட்டுள்ளார். கருமம் விடுத்தோர் வீட்டினைக் காணார். கருமமே ஜபமும் கருமமே யோகம். கருமம் வேதத் துதித்தது காணுப். கருமஞ்செய்தே களித்தான் ஜநகன். எனையும் வேண்டிலன், எல்லாம் ஈயும் பானும் கருமம் ஆற்றிப் பிற்பேன். என்னுடைக் கருமம் விடுக்கின் இந்த மன்னுலகெல்லாம் மடியும் கண்டாய். என்றனை பெண்ணி எல்லாம் விடுத்து, உன்னுடை வினையில் உறைப்பாய் விஜய! மற்றோர் வினையை மாண்புறச் செய்தலின் உன்வினை இழிந்து செய்பினும் னன்கே. காமம், குரோதம் என்னும் பகைவர், பரவத்திற்குக் காரணமாவர் புத்தியாலவரையடக்கி, புலனையடக்கிக் கருமம் ஆற்றுவை விஜயா."

மேற்சொன்ன வற்றினின்று ! விய னைமட்டும் அவன் அந்தச் சந்தர்ப்பத்தில் அவசியம் செய்தே தீர வேண்டிய தர்ம யுத்தத்திற்கும், பொதுவாக மாந்தரெல்லாம் தத்தம் ஸதர்மத்திற்குரிய கருமங்களுக்கும் தூண்டி மாந்தருக்கு ஒரு கடமை புரிக்கியை வெகு தெளிவாக அறிவிக்கிறார்.

உலகில் ஒவ்வொரு உயிரும் வினை செய்யவே என்பதே கீதை காட்டும் பாதை. கிருஷ்ணனே [illegible] பரமாத்மா. விஜயனே ஜீவாத்மா. கௌரவாதியரே

உண்டாயிற்று. வினையினால் உடலனர்த்தம். அவ் வினையைச் செய்தால் தான் ஈடேறலாம். அதைச் செய்யும் வரையில் மனிதன் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் அலைகிறான். ஒவ்வொருவன் இயற்கைக்குத் தக்கபடியே வினையையும் வகுத்து, அதை முடிக்க வேண்டிய ஆயுளையும் கடவுள் கொடுத்திருக்கிறார். புலன்களை அடக்கி ஒருமைப்பாட்டுடன் முயன்றால் தான் தன் வினையை அறிந்து முடிக்கலாம். அஃதின்றி புலன்களைக் கண்டபடி திரிய விட்டு, காமம், குரோதம் முதலிய தீய குணங்களைப்பற்றி, தன் வினையை மறந்து, அல்லது செய்து, மனிதன் துயர்ப்படுகிறான். இவ்வுலகிலுள்ள மாயா வஸ்துக்களில் புலன்கள் சென்றால் அவற்றில் ஒரு பற்று உண்டாகிறது. பற்றால் காமமும், காமத்தால் குரோதமும், அதனால் மோகமும் [illegible] மறதியும் [illegible] இறந்து [illegible] [illegible] மனமத அடக்கித் தன் வினைக்கே பயன் படுத்தி [illegible] மனிதன் உயர்ந்த நிலையை அடைகிறான்.

[illegible]

காமக்குரோதாதி பகைவர். என் பந்துக்கள் என் பாட்டன்மார் என்ற பாசமேலீட்டினால் ஜீவாத்மா காமக்குரோதாதிகளை வெல்லத் [illegible] வலியுட்பட்டு [illegible] மனிதனின் உண்மையான பரமாத்ம தத்துவத்தை விளக்கி, அ[illegible] தெய்வீகத் தன்மை [illegible] காட்டி, பரசக்தியாக [illegible] சொல்லப்பட்டது. நமது பரமாத்ம தத்துவத்தை நாம் அடைந்துவிட்டால், நமது கடவுள் ஜோதியை நாம் கண்டு அதுவே நாமெனவிண்டால், ஆ! நமக்குள் இருக்கும் அச்சோதி ஒளிக்கிறது! நம் [illegible] தெளிவாகக் கூறுகிற அந்த அத்யாத்மக் கண்ணை நமது நாட்டார் அடைவாராக. அதுவே இந்தியா இழந்த கண். அக்கண்ணைப் பெறுவதே [illegible] இம்மூன்றின்படி வாழ[illegible] அவ்வழியே நாமும் வாழ்வோமாக.

[illegible]

அம்மை: இந்தப் பெட்டியில் [illegible]

கடைக்காரன்: பெட்டிக்குள்ளே [illegible] அதைக் கொண்டு [illegible] எழுதிவிட்டுத் திறந்து கொள்ளலாம்.

[illegible]

காமாக்ஷி: "என்னவென்று [illegible] திறந்தால் நீ என்ன செய்வாய்?"

மீனாக்ஷி: "மாத்திரை [illegible] கேட்டேன்."

[illegible]

"பெட்டியைத் திறந்தவனுக்கு என்ன கிடைத்தது?"

"பன்னிரண்டு மாதம் கிடைத்தது."

ஜஹாங்கீரின் முதல் காதல்

ஓர் சிறு கதை

["மாடர்ன் ரிவியூ"வில் சில வருஷங்களுக்குமுன் ஆங்கில இலக்கிய பண்டிதரான ஸ்ரீமான் ப. சேஷாத்திரி இக் கதா நாயகியைப் பற்றி ஸான்னெட் என்று சொல்லப்படுகிற பதினான்கு வரிகளடங்கிய ஓர் செய்யுள் எழுதி வெளிப் படுத்தியிருந்தார். அச் செய்யுளில் கண்ட சரித்திரம் புனைந்து எழுதத் தகுதியுள்ள அழகு வாய்ந்ததாக நமக்குக் காணப்பட்டமையால் அதை நமது மனோதர்மமாகிற சிற்பியைக் கொண்டு புனைவித்தோம். இங்கு வெளிவரும் சிறு கதை அம்மனோதர்மத்தின் புனைவேயாகும். ஸ்ரீ ரவீந்திரநாத டாகூரும் இக் கதையைத் தன் மனோபாவத்தால் சித்திரித்து எழுதியிருக்கிறார் என்று அறிகிறோம்.]

இன்று நவரோஜ பண்டிகை. அரண்மனையெல்லாம் கோலாகலமாயிருக்கிறது. மொகலாய பிரபுக்களும் வீரர்களும் தில்லிக்குப் பணிந்துவிட்ட ராஜபுத்திரரும் அரச பேட்டிக்காக வந்திருக்கிறார்கள். எத்தனை விதமான உடைகள், எத்தனை விதமான தலைப்பாகைகள், எத்தனை விலை பெற்ற ஆபரணங்கள்! உலமாக்களும் பண்டிதர்களும் ஓர் புறம் தர்மத்தைப் பற்றியும் கடவுளின் தன்மையைப் பற்றியும் விவகரித்துக் கொண்டிருக்கிறார்கள். தூரத்தில் அரண்மனையைச் சார்ந்த ஓர் பரந்த வெளியில் ராஜபுத்திர வாலிபரும் மொகலாய மைந்தரும் குதிரைகள் மீதேறிப் போலோப் பந்து விளையாடிக்கொண்டிருக்கிற சத்தம் ஆஸ்தான மண்டபத்துக்குக்கூட எட்டுகிறது. மற்றொரு புறம் மல்யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. வீரர்கள் பலத்தையும் லாகவத்தையும் சாமர்த்தியத்தையும் காட்டும் போதெல்லாம், மொகலாயர், பட்டாணியர், ராஜபுத்திரர், ஆந்திரர், மறவர் என்கிற வேற்றுமை பாராட்டாமல் அனைவரும் தங்கள் சந்தோஷத்தைக் காட்டி அவர்களை உற்சாகப் படுத்துகிறார்கள். சித்திர சாலையில் பாபர் முடிசூடும் படமும், சிங்காதனத்தை இழந்து அமரக் கோட்டையில் வசித்துவந்த ஹுமாயூன் தனக்கு மகன் பிறந்தான் என்று சொல்ல வந்த தூதிக்கு இனாம் அளிப்பது போல எழுதியிருக்கும் சித்திரமும், பதினாறு வயதாக இருக்கையில் அக்பர் ஹேமுவைக் கொல்லுவது போல வரைந்துள்ள சித்திரமும், சித்தூர் பிடிபட்டதைக் காட்டும் படமும், இவை தவிர, லைலி மஜ்னூன் என்ன, உமர் கையாமின் ருபையாத் என்ன, கமருஜமான் பதூரா, குல்-ஏ-பகாவலி முதலிய கதைகள் என்ன, இவற்றின் சுவையுள்ள கட்டங்களைச் சித்திரித்து எழுதிய ஓவியங்களும் பார்ப்போர் கண்களையும் மனத்தையும் பறிக்கின்றன. சபா மண்டபத்தில் பிரதான சாமந்தர்களுடன் கொலு இருந்துகொண்டு அக்பர் தனசேனனுடைய தெய்வீகமான கானத்தில் லயித்துப் பரவசமாய்ப் போய்விட்டான்.

அரண்மனையைச் சார்ந்திருக்கிற, இந்திரனுடைய நந்தவனம்போன்ற, இந்தப் பூஞ்சோலையில் நமது கண்களை இன்னொரு காட்சி ஆகருஷிக்கிறது. சாயங்கால வேளையாகிவிட்டது. செடிகளெல்லாம் புதிய மலர்களைத் தரித்துக்கொண்டு விளங்குகின்றன. சோலை முழுவதும் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கிறது. புறாக்களும், மைனாக்களும், கிளிகளும், குயில்களும், மயில்களும், பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருக்கின்றன. இத்தனை கூட்டமாயிருந்தும் அவைகளுக்குக் கொஞ்சமேனும் பயமில்லை, எதேச்சையாய் உலவுகின்றன.

நந்தவனத்தில் புருஷர்கள் ஒருவரும் இல்லை. ஸ்திரீகளும் குழந்தைகளுமே நிரம்பியிருக்கிறார்கள். அங்கங்கே கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலும் ஸ்திரீகளேதாம் வியாபாரம் செய்கிறார்கள். மஸ்லின் துணிகள், பட்டுப் பட்டாடைகள், சித்திர வேலை செய்த ரவிக்கைகள், பொன் இழைத்த தட்டங்கள், வைர நகைகள், தந்தத்தால் செய்த பதுமைகள், தந்தத்தில் வர்ணம் சேர்த்தெழுதிய சிறிய ரமணீயமான சித்திரங்கள் இவைகளையெல்லாம் மாதர் தங்கள் குழந்தைகளுக்கும் தங்களுக்கும் தங்கள் காதலர்க்கும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பார்ஸியிலும் துருக்கியிலும், ஹிந்தியிலும் அம்மாதர் பேசும் பேச்சு மிருதுவாயும் காதுக்கு இனிதாயுமிருக்கின்றது. புருஷர் யாரும் இல்லாததால் மாதரில் ஒருவரும் முகத்தை மூடிக்கொள்ளவில்லை. "மான் இனம் வருவ போன்றும் மயில் இனம் திரிவ போன்றும், மீன் இனம் மிளிர்வ போன்றும், மின் இனம் மிடைவ போன்றும்," இருக்கிற அக்பர்ஷாவின் அந்தப்புர ஸ்திரீகளின் அழகையும் ஒயிலையும் நம்மால் வர்ணிக்க முடியுமா? ஒவ்வொருத்தியும் அழகுக்கு வரம்பு இதுதான் என்று சொல்லும்படியிருக்கிறாள். அவர்களுள் சிலர் கிளிப்பிள்ளைகளுக்குப் பேச்சுக் கற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சில யுவதிகள் கண்ணாம்பூச்சி ஆடிக்கொண்டும், ஓடிப் பிடித்துக் கொண்டும், ஒளித்துக்கொண்டு தோழிகளைக் கண்டுபிடிக்கச் சொல்லியும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் சாரங்கிகளை மீட்டிக்கொண்டு அதற்கேற்பக் கஜல்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் சோலையிலுள்ள ஏரியின் மீது படகுகளைச் செலுத்திக்கொண்டு அன்னங்களைப் போலத் தாமரை மலர்கள் நிறைந்திருக்குமிடத்துக்குச் சென்று தங்கள் கைகளைப் போலவும் முகத்தைப்போலவுமிருக்கிற அம்மலர்களைக் கொய்கிறார்கள். ஒருத்தி இளமான் கன்று ஒன்றுக்குப் பசும்புல் ஊட்டிக்கொண்டு நிற்கிறாள். ஒருத்தி மேற்கு நோக்கி நின்றுகொண்டு சாயங்கால வேளையில் தோன்றும் வர்ண வித்தாரங்களைப் பார்த்து லயித்துப் போய்விட்டாள்.

இவ்விதமிருக்கையில் ராஜகுமாரன் வருகிறான் என்று யாரோ சிறு குரலில் சொன்னார்கள். உடனே அங்கிருந்தவர்களெல்லாம் ஜரைச்சல்லாவால் செய்யப்பட்ட தங்கள் முகமூடிகளை இழுத்து முகங்களை மூடிக்கொண்டுவிட்டார்கள். அவன் நடந்து செல்லச்செல்ல வழியிலுள்ள சிறுமியர்கூட மரியாதையாலும் நாணத்தாலும் முகங்களை மூடிக்கொண்டு ஒதுங்கி நிற்கிறார்கள். ஸலீம் தன் தோழர்களோடு கூட ஒய்யாரமாக நடந்துகொண்டுவந்து கடைகளில் சாமான்கள் வாங்கிக்கொண்டும் சகோதரிகளோடும் தாய்மார்களோடும் அங்கங்கே நின்று பேசிக்கொண்டும் வருகிறான்.

சந்திரோதயமாயிற்று. ஏக காலத்தில் சோலையிலுள்ள எல்லா விளக்குகளும் ஏற்றப்பட்டுச் சோலையைப் பூலோக சுவர்க்கம் போல் ஆக்கிவிட்டன. ஸலீம் தன் தோழர்களை விட்டு நீங்கி இப்பொழுது தனியே செல்கிறான். சென்றவன் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவன் போலத் திடீரென நின்றுவிட்டான். பிறகு சற்றுத் தெளிந்துகொண்டு நடந்து சென்று ஒரு மர நிழலில் நின்று ஒரு திசையில் பார்த்தான்.

அங்கே ஒரு இளமங்கை புஷ்பங்கள் விற்றுக்கொண்டிருந்தாள். அவள் விலை கூறிக்கொண்டிருந்த மலர்களும் அவளுடைய சரீரத்தைவிட

மிருதுவான ஸ்வரமும் இருந்ததோ? அப்பொழுதே தான் புதிக்கப்பட்டது. மிருக்கும், அங்கிருந்த தாமரைக்குளத்தின் முகத்தின் ஒளியில்லை. அவள் கண்ணில் இருந்த நீலமும் எழிலும், தெளிவும் அங்கேயுள்ள [illegible] மலரில் இல்லை. கறுத்துச் செழித்து நீண்டிருக்கும் கூந்தலில் ரோஜா மலரைத் தரித்துக்கொண்டு, மலர் விரும்புவோருக்கெல்லாம் அவள் மலர்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்ததால் அவளைத் தூரத்திலிருந்து பார்த்த அரசிளங் குமாரனுக்கு அவள் பூங்கொத்துகள் பூத்துத் தொங்கும் இளம் நரும்புச் செடி போலத் தோன்றினாள்.

அந்தக் குன்றின்மேட்டில் [illegible]. எல்லோருங்கூடி விருந்து [illegible] சென்று கொண்டிருந்தார்கள். இனி [illegible] காது என்று [illegible] கன் கூட்டத்திலிருந்து மலர்களைக் கூடையில் எடுத்து வைத்துக்கொண்டு புறப்பட்டாள். அவ்வளவு கூட ஒரு நிமிஷம் தாமதிக்கவில்லை. [illegible] பேர்களோடு [illegible] அரண்மனையின் தெற்குக் கோடியை நோக்கிச் சென்றாள். அத்தச் சந்திரிக்கும் வெள்ளித் திகழ்கள் அடர்ந்த மரகத மேடை போல விளங்கும் யமுனா ஆற்றுக்கும், வீடும், இளந் தென்றலுக்கும், அவள் கையில் கொண்டுபோகும் மலர்களின் மணத்திற்கும், அவளுடைய கொடி போன்ற மேனிக்கும் அவளைப் பார்த்தால் மனிதப் பெண் போலவே இல்லை; அவள் கந்தர்வ ஸ்திரீ போலவும் மோகினி போலவும் தான் விளங்கினாள்.

அந்தப்பாதையிலே அவளுடைய இருப்பிடத்துக்குப் போக இன்னும் கால் மைல் தானிருக்கிறது. அப்பொழுது "அனார்கலீ!" என்று ஒரு மிருதுவான சப்தம் அவள் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தாள். உடனே தன் முகத்தைச் சல்லாவால் மூடிக்கொண்டாள். அங்கே அவளிடம் வந்தவன் [illegible] அரசிளங்குமாரனை ஸலீமே.

அனார்கலி ஒரு வேலைப் பெண். ஆனால் அவளுடைய அழகைப் பற்றி ஒருத்தி அரண்மனையில் தெரியாதவர்கள் இருந்தார்கள். அவள் [illegible] குடும்பபாரத்தால் அவளைச் சிறு வயதிலேயே அக்பர் தன் தாதியிடம் அனுப்பி வைத்து விட்டிருந்தான். [illegible] வளர்த்து வந்தாள். இப்படியிருக்கும் போது ஒரு நாள் திடீரென்று பெரிய அதிர்ஷ்டம் வந்துவிட்டது. பட்டத்து ராணி மகனை ஸலீமுக்கு அக்பர் அவனுடைய [illegible] நியமித்தான். அவனுக்கு இனி ஒரு குறையுமில்லை. இன்று முதல் தன்னிடமே [illegible] தனக்கு இஷ்டப் பக் [illegible] என்று [illegible] [illegible] அதிக அன்போடு [illegible] [illegible] வயதிலிருந்தே [illegible] ஸலீமும் [illegible] காலத்திலிருந்தே ஸலீமுக்கு அனார்கலி—மாதுளை மொக்கு—என்று பெயர் வைத்திருந்தான்.

ஸலீம் [illegible] அக்பர் அவனை வித்தியாப்பியாசத்துக்கு [illegible] அனுப்பிவிட்டான். ஒரு பத்து வருஷம் வரையில் ஸலீம் அரசர் கற்கும் கல்வியிலும் யுத்தப் பயிற்சியிலும் போர்த் தொழில் கற்பதிலும் கவனம் செலுத்தி வந்து அவற்றில் மிகவும் தேர்ந்துவிட்டான். கல்வியெல்லாம் முடிந்த பிறகுதான் அக்பர் ஸலீமை ஆக்ராவுக்கு வருவித்துக்கொண்டான்.

ஸலீம் ஆக்ராவுக்குத் திரும்பிவந்து ஒரு மாதம் தான் ஆகிறது. ஆகையால் இந்த வருஷத்து நவரோஜ் பண்டிகை வழக்கமாய் நடப்பதைவிட அதிக விமரிசையாய் நடந்தது. மல்லருடைய மற்போரைப் பார்த்துவிட்டும், எத்தனை தடவை பார்த்தாலும் தெவிட்டாத சித்திரங்களை அநுபவித்துவிட்டும் ஸலீம் அச்சபைக்குச் சென்றான். அங்கே தானசேனன் [illegible] சொல்லிய

படி கானமழை வருஷித்துக் கொண்டிருந்தான். லைலியைப் பார்த்து அவள் மீது மனங்கொள்ளாத காதல் ஏற்பட்டவுடன் மஜனூன் பாடியது போல் செய்யப்பட்ட ஒரு கஜலை மோகன ராகத்தில் பாடிக் கேட்போர்களுடைய இதயத்தைப் பூரிக்கச் செய்துவிட்டு உடனே லைலியை அவளுடைய தந்தை வேறொருவனுக்குக் கொடுக்க நிச்சயித்ததும் மஜனூன் துடித்துக்கொண்டு பாடுவது போலச் செய்த மற்றொரு கஜலைப் பைரவி ராகத்தில் தானசேனன் பாடியதும் அவையிலுள்ளோரெல்லாம் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகிவிட்டார்கள். ஸலீம் இளவாலிபன். இந்தக் கஜல்கள் அவன் மனதில் ஒரு புதிய உணர்ச்சியைக் கிளப்பிவிட்டன. அவற்றின் பொருள் அவனுக்குத் தெளிவாக விளங்கவில்லை. ஆனால் இரண்டு இருதயங்கள் ஒன்றோடொன்று காதலுற்றுக் கலக்குங் காலத்தில் அவை பூரணத்தையடைகின்றன; தனியாகயிருக்கும் வரையில் ஒவ்வோர் இருதயமும் குறைபட்டதாகவேயிருக்கிறது; ஓர் ஆறுபோலச்சென்று கொண்டிருக்கிறது; தன்னுடைய ஆத்மா அனைத்தையும் அர்ப்பணம் செய்யக்கூடியவேறு ஒரு இருதயத்தைச் சந்தித்ததும், அவ் இருதயம் தன்னோடு சம்மேளித்ததும் ஆறானது கடலில் கலந்தது போல இதயமும் சாந்தியை அடைந்துவிடுகிறது- என்பன போன்ற எண்ணங்களைத் தானசேனனுடைய தெய்வீகமான கானம் ஸலீமின் மனதில் எழுப்பிவிட்டது. கானத்தின் இனிமையைத் தாங்கமாட்டாமல் ஸலீம் தன் தோழரோடு சோலையில் புகுந்தான். ஆனால் அவர்களுடைய விளையாட்டுப்பேச்சுக்களுக்கும் அவன் மனதில் எழுந்த உணர்ச்சிகளுக்கும் ஒவ்வாது போகவே அவர்கள் ஒவ்வொருவரையும் விடைகொடுத்தனுப்பிவிட்டு ஸலீம் தனியே கனவுப்புலத்தில் நடப்பவன் போல நடந்துகொண்டு சென்றான். அப்படிச் செல்லுகையில் தன்னுடைய 'மாதுளை மொக்கைக்' கண்டதும் அவனுக்குப் பழைய நினைவுகளெல்லாம் கடல் மடை திறந்தது போல் வந்துவிட்டன. தான் சிறுவனாக இருந்தபோது தானும் அவளும் விளையாடிய விளையாட்டுக்களும் பேசிய பேச்சுக்களும் இருந்த அன்யோன்யமும் நினைவுக்கு வரவே அவனுக்கு அனார்கலியின் மீது காதல் பிறந்துவிட்டது.

ஆகையால் நடந்து செல்லும் பூங்கொடி போன்றிருந்த அனார்கலியின் பின் சென்று, அவள் வேறு மனிதர் ஒருவரும் இல்லாத இடத்தைப் பார்த்து அவள் பெயர் சொல்லி அழைத்தான்.

அனார்கலி முகத்தை மூடிக்கொண்டதும் ஸலீம், "என்ன, அனார், என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லையா?" என்றான்.

"அடையாளம் தெரிந்துதான் முகமூடியைப் போட்டுக்கொண்டேன்; என்- உம்—என் யுவராஜாவை நான் மறந்துவிட முடியுமா?" என்றாள் அனார்கலி.

"அதென்ன யுவராஜா என்று சொல்லுகிறாய்; என் பெயர் உனக்கு மறந்துவிட்டதா?"

"தாங்கள் இன்னும் குழந்தையா? அல்லது நான்தான் குழந்தையா? தங்கள் பெயரை நான் சொல்லலாமா?"

"நீ என்னுடைய அனார்கலி இல்லையா? அந்த நாளில் நாம் விளையாடியதெல்லாம் உனக்கு நினைவில்லையா? என்னை நீ தாங்கள் நீங்கள் என்று அழைக்கக்கூடாது. ஸலீம் என்று கூப்பிட்டால்தான் நான் உன்னை விடுவேன்.'

"என்னை இப்படி அபராதியாக்கலாமா? ஒரு காலும்நான் தங்களைப் பெயர் சொல்லி அழைக்கமாட்டேன். நீல வானத்திலுள்ள ஜோதிகளுக்கெல்லாம் அரசனாய் விளங்கும் சந்திரனை ஒரு நாள்

மலர்ந்து அன்றைக்கே வாடிப்போகும் காட்டு மல்லிகை ஏற எடுத்துப் பார்க்கலாமா?"

"வானத்தில் உயிர்த்துச் சுழன்று செல்லும் சந்திரன் அத்தனை உயர்ந்ததா? அல்லா அருள் செய்திருக்கிற ஜீவசக்தி பொங்கித் ததும்பிக் கொண்டு, பூமியின் புன் சிரிப்போ என்று சொல்லும்படி விளங்குகிற மல்லிகை மலருக்கு இச் சந்திரன் இணையாகுமா?"

"தங்களுக்கு இணையாக நான் பேச முடியுமா? அத்தை தேடுவாள் நான் போகிறேன், விடை கொடுங்கள்," என்றாள் அனார்கலி.

அவளுடைய நாணமும் பயிர்ப்பும் ஸலீமுக்கு அவள் மீது பிறந்த காதலைப் பெருக்கினவே ஒழியக் குறைக்கவில்லை.

"அனார்கலி, உனது லாவண்யத்தின் சக்தி உனக்குத் தெரியவில்லை; மலையினின்று விழும் நீரருவி போலத் தெளிவாயும் பரிசுத்தமாயு மிருக்கிற உன் சுபாவத்தின் ஆகர்ஷண சக்தி உனக்குத் தெரியவில்லை; ஆனால் நான் அவற்றை அறிகிறேன்; காந்தம் ஊசியை இழுப்பது போல அவை என்னை உன் வசப்படுத்திவிட்டன; இனிமேல் நான் ஸலீம் அல்லேன், அக்பர் ஷாவின் ஜேஷ்ட புத்திரனும் யுவராஜனும் அல்லேன், என் அனார்கலியின் குலாமாகிவிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டு அவள் கன்னத்தில் முத்தமிடப் போனான்.

அனார்கலி அவனை மெதுவாய் விலக்கிவிட்டு ஒதுங்கி நின்றுகொண்டு,

"ஸலீம் ஜீ, தங்கள் அடிமையாகிற என்மீது தங்களுக்கு இத்துணை அருள் வந்தது என்னுடைய அதிர்ஷ்டமே! தாங்கள் அந்தப்புரத்தை விட்டுப்போன நாளாய்த் தங்கள் சிந்தனையாகவே இருந்து கொண்டிருக்கிறேன்: ஆனால் தங்களை மணக்க எனக்கு அருகம் இல்லை: நான் பரம ஏழை; தாங்கள் சக்ரவர்த்தியின் ஜேஷ்ட புத்திரன்; முயற் குட்டிக்குச் சிங்கத்தை மணக்கும் பாக்கியம் வருமா? தெருவில் மிதிபடும் தும்பைப் பூ சூரியனை இச்சிக்கலாமா? ஆகையால் எனக்குத் தங்கள் மீதுள்ள காதலை இருதயத்தை விட்டுப் பறித்துவிட்டேன்: என் அத்தையின் காரியங்களைப் பார்த்துக்கொண்டு தன்னந்தனியாகவே நான் காலங் கழிக்க நிச்சயித்துவிட்டேன்: இதோ இந்த மலர்களிருக்கின்றனவே, இவைதாம் என் தோழர்; இவைகளின் தோழமையில் என்னையே மறந்து போய்விடுகிறேன்; என்மீதுள்ள காதல் தங்களுக்குச் சில நாட்களில் மறந்து போய்விடும்: அவ்விதம் மறந்துபோய்விடுவதும் நியாயமே: தங்களுக்கு இணையான மங்கையின் காதலைப் பெற்றுத் தாங்கள் சர்வ போகங்களையும் போகித்துச் சுகமே வாழ்ந்து, காலத்தில் சக்ரவர்த்தியாக வேண்டும் என்பதுதான் அடியாளுடைய கோரிக்கை!"

என்று எண்ணற்ற பெருமூச்சுகளுக்கிடையில் சொல்லி முடித்தாள்.

ஸலீமுக்குத் தாங்கவில்லை; அவளுடைய தன் மறுப்பு அவன் நெஞ்சில் முன்னைவிடத் தீவிரமான காதலை உண்டாக்கிவிட்டது.

"அனார்கலி! உன்னையும்விட எனக்கு இணையான மங்கையும் இருக்கிறாளோ? நீதான் எனக்குப் பட்டத்து ராணியாக வேண்டும்; பாதுஷாவின் உத்தரவு கிடைக்கும் வரையில் இந்த மோதிரத்தை வைத்துக் கொண்டிரு; என் நெஞ்சாகிற கடலுக்கு நீ தான் பூரண சந்திரன்; என்னைக் கைவிட்டு விடாதே!" என்று சொல்லிக்கொண்டு ஸலீம் அனார்கலியைக் கட்டி முத்த மிட்டுக் கொண்டான்.

பக்கத்திலிருந்த ரோஜாப் புதரில் ஏதோ சிறு சிலுசிலுத்தது. அனார்கலி நடுங்கினாள். ஆனால் ஸலீம் அவளை "ஒன்றுமில்லை: ஏதோ கிளிகள் ஒன்றோடொன்று கொஞ்சிக் கொண்டிருக்கும்," என்று சொல்லித் தேற்றிவிட்டுத் தன் கையிலிருந்த வைரங்களும் பச்சையும் இழைத்த மோதிரத்தை அவள் கையில் போட்டு, அந்தக் கைக்கும் முத்தமிட்டு, அவளை நடத்திக்கொண்டு சென்று அவள் வீட்டில் விட்டுவிட்டுத் தன் இடம்போய்ச் சேர்ந்துவிட்டான்.

அன்றிரவு அனார்கலி தாங்கமுடியாத இன்பக் கடலில் மூழ்கி, விழித்துக்கொண்டும் தூங்கிக் கொண்டும் இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருந்தாள். அக்பர்ஷா உத்தரவு கொடுத்துவிட்டதாகவும், ஸலீமும் தானும் விவாகம் செய்துகொண்டு பூஞ்சோலையில் உலவுவதாகவும், பச்சைப் பசும்புல் மேடையில் நானாவிதமான நறுமலர்கள் தூவிய ஆசனத்தில் இருவரும் உட்கார்ந்துகொண்டு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பேசொணாத அன்பில் லயித்துப் போயிருப்பதாகவும், தன்னுடைய ஏழையான தந்தை தாய்க்கும், தன்னை வளர்த்த அத்தைக்கும், ஏராளமான தனம் வழங்குவதாகவும், இவை போன்ற கனவுகள் அவளுக்கு உதித்தன. நடுநிசியில் நித்திரை விட்டெழுந்த அவளது அத்தை அவள் முகத்தைப் பார்க்கும் போது அதில் மலர்ந்திருந்த புன்னகையைக் கண்டு ஆனந்தபரவசையாகித் தானும் அவளுக்கொரு முத்தம் கொடுத்துவிட்டு மறுபடி தூங்கச் சென்றாள்.

காலமே விடிந்தது. ஜீவவேகம் ததும்பிக் கொண்டு நிற்கும் மலரைப் போல அனார்கலி பூரண சௌந்தரியத்தோடு விளங்கினாள். நேற்று நடந்த சம்பவங்களும் அவள் கண்ட கனவுகளும் அவளுக்கு என்றுமில்லாத பூரிப்பைத் தந்தன.

விடிந்து சற்று நேரத்திற்கெல்லாம் சில ஏவலாளிகள் வந்து பாதுஷா அனார்கலியை உடனே அழைத்து வரச் சொன்னான் என்று கூப்பிட்டார்கள். அனார்கலியின் அத்தை நடுங்கிப் போய் விட்டாள். எதற்காக என்று கேட்டதற்கு ஏவலாளிகள் ஒன்றும் சொல்லமுடியாது என்று விட்டார்கள். ஆனால் அனார்கலியை அவள் கேட்டபோது முதல் நாள் இரவு நடந்த சங்கதிகளைச் சொல்லி, பாதுஷா தன்னைப் பார்க்கிறதற்காகத் தான் அழைத்திருப்பான் என்று சொன்னாள். அவள் அத்தையின் பயம் நீங்கவில்லை. ஆனால் அரசனுடைய ஆக்ஞையானதால் அனார்கலிக்கு நல்லுடை உடுத்திச் சிங்காரித்து மற்றொரு வைகறை என்று கண்டோர் சொல்லும் வண்ணம் அவளை ஏவலாளர் பின் அனுப்பினாள்.

அனார்கலி தனக்குக் கிட்டாது என்று நினைத்த காதல் கிட்டிவிட்டதைப் பற்றிச் சந்தோஷித்துக்கொண்டு, ஸலீம் விரும்பியுள்ள மங்கையைப் பாதுஷா அவனுக்கு விவாகம் செய்துவைக்காமல் என்ன செய்வான் என்ற தைரியத்தோடு ஏவலாளர் பின் சென்றாள்.

ஐயோ பாவம்! உலகத்தின் கல்நெஞ்ச இந்தப் பேதைக்குத் தெரியவில்லையே! அக்பர்ஷா உத்தரவுப்படி அனார்கலியைக் காவலில் வைத்துவிட்டார்கள்.

தன் சேனையுடைய காவல் முடிந்ததும் ராஜசபையும் கலைந்தது. அக்பர் வழக்கப்படி சக்கிரவர்த்தி...

கொண்டு நிற்பதைக் கண்டு உன்னிப்பாய்ப் பார்க்கையில் வாலிபன், தன் குமாரன் என்று கண்டு அவன் ரோஜாப் புதரில் ஒளிந்துகொண்டு நின்றான். அனார்கலியும்ஸலீமும் புறப்படும்போது உண்டான சலசலப்பு அக்பருடைய உடைவாள் புதரில் மாட்டியதால் உண்டானது. தன் இளமைந்தனை இந்தச் சிறுமி மயக்கிவிட்டாளாகையால் அவளை இனி அந்தப்புரத்தில் வைக்கக் கூடாது என்று நிச்சயித்துக் கொண்டு தூரத்திலேயே நடந்து வந்து அவர்கள் செல்லும் இடத்தையும் பார்வையிட்டுவிட்டு அரண்மனை சென்று விட்டான். அந்த நிச்சயத்தின் பலன் தான் அனார்கலி காவலும் வைக்கப்பட்டது.

என்ன செய்வாள் பாவம், துடித்தாள்; துன்புற்றாள்; கண்ணீர் ஆறுப்சொரிந்தாள். ஐயோ, அல்லவோ, என் றலறினாள்.

“இந்தக் காதலை நான் வளர்க்க வில்லையே! என்னை என் அல்லா அந்தப்புரத்தில் கொண்டு வந்து சேர்த்தான் அல்லது ஏன் என் அத்தையை ராஜகுமாரனுக்கு தாதியாகும்படிசெய்தான்? என் நாளும் ஸலீமும் எப்பொழுதும் சந்திக்கும்படி ஏற்படுத்தினான்? மற்றவர்களைச்சந்திக்க வில்லையா அரசிளங்குமரன்? என் மீது அவனுக்குச் சிறு போழ்திலேயே ஆசை உண்டாக வேண்டுமா? எனக்கும்தான் அவன் மீது ஏன் ஆசை உண்டாயிற்று? நான் வளர வளரஎன்காதலும் நான்அதை என் இதயத்தை விட்டு அகற்றிவிடவும்முயன்றேனே! கடைசியில் குதா உர் ரஹீம் நமக்குத்தந்திருக்கிற வானத்தையும், நிலவையும், ஆறுகளையும் சோலைகளையும் பார்த்துப் பார்த்து, எனக்குக் கிட்டாத காதலை மனதினின்று களைந்து விட்டு அவைகள் தரும் ஆனந்தத்துள் மூழ்கியிருந்தேனே! நேற்றுத்தான் நான் என்ஸலீம்கண்ணில் பட்டிருக்கவேண்டும், ஆனால் ஏன் பட்டிருக்கக் கூடாது? அவர் என்னைக் கண்டு பேசியிராவிடில் அவருடைய பெருங் காதல் எனக்குத் தெரிந்திருக்குமா? வானத்தில் விளங்கும் சூரியன் தும்பைப் பூவையும் பார்த்ததே! அதற்காகவும் ஒளி வீசிற்றே! நான் கொடுத்து வைக்காத பாவி! ஆனால் அதுதான் எப்படிசொல்லலாம்? சக்ரவர்த்தியின்மகன் என்னைக் காதலித்து விட்ட போது நான் பாக்கியசாலியே! என்ஜன்மத்துக்கு இந்த ஒரு இன்ப நினைவே போதாதா?”

என்று பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தாள் அனார்கலி.

இப்படி நாட்களாயின; நாட்கள் மாதங்களாயின; மாதங்கள் வருஷங்களாயின. ஸலீம் இன்று வருவான் நாளை வருவான் என்றெதிர் பார்த்து பார்த்து அவன் வரவே வராததால் அவள்மனம் புண்ணாகிவிட்டது; கண் ஒளிகுன்றிவிட்டது உடலின் அழகெல்லாம் போய் விட்டது.

ஒரு வேளை என்னை மறந்தே போய்விட்டாரோ ஸலீம்! அவனுக்கு என்ன எத்தனையோ மங்கையர் காதல் தாக காத்திருப்பார்கள், என் ஒருத்தியைப் பற்றி நினைக்க வேண்டு மென்கிற கட்டாயம் அவனுக்கு என்ன? ஆனால் அவனுடைய பார்வையிலும் பேச்சிலும் கபடமே இல்லையே; என் பேரில் காதலில்லாமல் அவ் விதம் பேசியே இருக்கமாட்டான். நான் ஸலீம் அல்லேன், அக்பர்ஷாவின் ஜேஷ்ட புத்திரனும் யுவராஜனும் அல்லேன், என் அனார்கலியின் குலமாகிவிட்டேன்' என்றாரே; இந்த அன்பை மறக்க வழியும் உண்டோ? என் அன்பு இத்தனை வருஷங்களாகியும் மறக்கவே முடிய வில்லையே!” என்றிவ்வாறு யோசிப்பாள்.

ஆனால் வெளி உலகத்தில் நடக்கும் ஒரு சங்கதியும் அவளுக்குத் தெரிய வில்லை. அவளுடைய காவலாளிகள் அவளை எதும் வருத்துவதில்லை. அவளுக்கு வேண்டியவைஅனைத்தும்அவளுக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனால் அவள் கேட்கும் கேள்விகளுக்கு யாரும் பதில் சொல்வதில்லை.

வருஷங்கள் ஆக ஆக அனார்கலியின் சரீரம் மெலிந்து மனமும்விண்டுபோய்விட்டது. அன்புக்கும் மலர்களுக்கும் அவள் மனம் தவித்தது. அவ்விரண்டையும் தவிர மற்றதெல்லாம் அவளுக்குக் கிட்டிற்று. அவளுக்குத் தீராத நோய் வந்து விட்டது.

அவளைப் பார்த்து இரங்குவாரில்லை; ஸலீம் ஸலீம் என்று ஜபித்த வண்ணமாயிருந்தாள். ஆனால் ஸலீமையுங் காணோம்; விடுதலையும் காணோம் நோய்முற்றிவிட்டது. அவளுக்குமரணகாலம் நெருங்கி விட்டது. ஆனால்அன்றைக்கு அவள் என்றும் போலில்லாமல் மிகச் சாந்தமாய் இருந்தாள். தன்னுடைய உடைகளில் மிகவும் உயர்ந்ததாயுள்ள உடையைத் தரித்துக்கொண்டு ஸலீம் தந்த மோதிரத்தையும் கையில் அணிந்து கொண்டு படுத்துக்கொண்டுவிட்டாள். தூக்கத்தில் ஸலீமுடன் பேசுவது போலப் பேசினாள்.

பொழுது விடிந்தது. அவள் சிறையின் வெளிப்புறத்தில் பெரிய கோலாகலமாயிருந்தது. காவலாளிகளெல்லாம் வெளியில் சென்று பார்த்தார்கள். “ஜஹாங்கிர் பாதுஷாகி ஜய், ஜஹாங்கிர் பாதுஷாகி ஜய்” என்கிற சத்தம் எங்கு பார்த்தாலும் கோஷித்தது.

அக்பர் இறந்து போய்விட்டான். ஜஹாங்கிர் சிம்மாதனம் ஏறியவுடன் அனார்கலியை சிறை மீட்க வந்துவிட்டான். படுத்திருந்த அனார்கலியைப் பார்த்ததும் ஜஹாங்கிருக்குத் தூக்கி வாரிப் போட்டது. “அனார்கலி! என் காதற் கிளியே! என் செய்கிறாய்?” என்றான். ஆனால் அனார்கலியின் சித்தம் கலங்கிப் போய்விட்டது. பேதுற்றவள் போல் விழித்தாள். “நீ யார் தம்பி? ஆ, நம் அக்பர்ஷாவின் மகனா? உன்னை மங்கையர்களை மோசம் செய்கிற வஞ்சகன் என்று எல்லோரும் சொல்லுகிறார்களே! எனக்குத் தோன்றவில்லை. நீ நல்லவன் போலத்தான் தோன்றுகிறது. அனார்கலியைப் பார்த்திருக்கிறாயா? நல்லபெண் அவள்எங்கேயோ போய்விட்டாள். என்னை ரோஜா மலர்கள் எடுத்துக்கொண்டு வரச் சொன்னாள். நான் எடுத்துப் போகப் போகிறேன்! நீயும் வருகிறாயா?” என்று சொல்லிவிட்டு அப்படியே பிரக்ஞை தப்பிப் போய்விட்டாள்.

ஜஹாங்கிர் (இதுதான் ஸலீம் அரசனானதும் வைத்துக்கொண்ட பெயர்) கண்ணால் தாரை தாரையாய் ஜலம் விட்டுக்கொண்டு அவள் கையைப் பிடித்துத் தூக்கினான். அவள் கை பட்டதும் கொஞ்சம் பிரக்ஞை வந்து, ‘ஆ! ஸலீம் இன்னும் ஒரு முத்தம் கொடேன், இல்லாவிட்டால் நான் உன்னோடு சேர்த்தியில்லை போ’ என்று குழறிக் குழறிப் பேசினாள். கண்ணீர்கள் கண்களை மறைக்க, ஜஹாங்கிர் அவள் கன்னத்தில் மிருதுவாக ஓர் முத்தமிட்டான். அவள் முகம் மலர்ந்தது. ஆனால் அடுத்த நிமிஷத்தில் அவள் உயிர் சுவர்க்கம் சென்றுவிட்டது.

ஜஹாங்கிர் அவளுக்கு ஒரு பெரிய சமாதி கட்டுவித்தான். நவரோஜ் பண்டிகை யன்று அச் சமாதியின் மீது கணக்கற்ற மலர்களை விரித்து அலங்கரிக்காமல் அவன் தர்பாருக்குப் போவதில்லை. அவன் இறந்தபோது அவனுடைய இடுப்பிலிருந்த கைப்பை அனார்கலி என்று அமுதிலிருந்ததைக் அவனுடைய ஜனங்கள் பார்த்தார்களாம்.

———:(0):———

ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேச குமார சர்மா எழுதுவது)

ஒன்பதாம் அத்தியாயம்

செட்டியார் உபகுப்தனுர்

முன்னே முன்னே ஸியாமசுந்தரனும் பின்னே பின்னே இந்துமதியும் பிரணயினியுமாக மூவரும் போய்க்கொண்டிருந்தார்கள். எவ்வளவோ புலம் விசாரித்து அன்டை அயலாரைக் கேட்டுக் கேட்டு வாயும் ஓய்ந்து போக, கடைசியில் உபகுப்தனுரின் வீடு அகப்பட்டது. தன்னை யாரோ தேடிவந்திருப்பதாக உபகுப்தனுருக்குத் தெரிந்தது. அவர் உடனே அன்னுரை எதிர்கொண்டழைக்க விரைந்துவந்தார். இவர்கள் தம் பிதாவுக்குப் பரிசயமானவர்கள் என்று தெரிந்து கொண்டவுடன், அவர் மிகுந்த ஆதரத்தோடும் மரியாதை யோடும் அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

செட்டியார் உபகுப்தனுரின் வீடு, ஸியாமசுந்தரன் எண்ணியிருந்தபடி மநோஹரமான மாளிகையாக வேனும் நேர்த்தியான நிலயமாகவேனும் இல்லை. மிகச் சாதாரணமான வீடாகவே இருந்தது. சிறிதாயிருந்த முன் பாகம் பலசரக்குகளும் சுகந்தத் திரவியங்களும் விற்கும் கடையாயிருந்தது. நடுப் பாகமும் அதே அளவுள்ளதாய் இருந்தது. அதன் பின்புறத்துக்குச் செல்லும் வழியின் ஒரு பக்கத்தில் ஒரு சிறிய பூஜையறையும் மற்றப் பக்கத்தில் சமையல் அறையும் இருந்தன. எல்லாவற்றுக்கும் அப்பால் முற்றம் இதுதான் உபகுப்தனுரின் வீடு. செட்டியாரின் வியாபாரஸ்தலம் மநோஹரமான மாளிகையாய் இருக்குமென்றும் அவரது குடும்பத்தினர் பட்டணத்தில் வேறோர் இடத்தில் வசிப்பாரென்றும் ஸியாமசுந்தரன் இதுவரையில் எண்ணியிருந்தான். அப்படி எண்ணியே செட்டியார் வீட்டார் வசிக்கும் வீடு வேறொன்று உள்ளதென்று சிறிதும் சந்தேகமின்றி அவன் தன் கூட வந்தவர்களிடம் சொல்லிவிடவும் செய்தான்.

பாகசாலையில் ஒரு யுவதி சமையல் செய்து கொண்டிருந்தாள். அவள் செட்டியாரின் வேலைக்காரிகளில் ஒருத்தியென்றும், குதிரைகளைக் கட்டப் போயிருப்பவன் குதிரைப் பாகன் என்றும் ஸியாமசுந்தரன் படபடப்பாய்ச் சொல்லிவிட்டான். சற்று நேரத்துக்கெல்லாம் செட்டியார் உபகுப்தனுர் விருந்தாளிகளின் குதிரைகளைக் கட்டிவிட்டு வந்து அடக்க வொடுக்கத்துடன் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தார்.

ஸியாமசுந்தரன் உபகுப்தனுரை நோக்கிக் கேட்டான்—"நீர் யார்? உம்முடைய திருநாமம்?"

செட்டியார்—"என்னை உபகுப்தன் என்று சொல்வார்கள்."

"பேஷ்! வெகு நேர்த்தி! எஜமானன், ஊழியன், இருவருக்கும் ஒரே பேர். உம்முடைய எஜமானன் செட்டியார் உபகுப்தனுர் தமது பிதாவின் காலத்துப் பெரிய மாளிகையை விட்டுவிட்டார் போலும் அது சற்று அசௌகரியமாயும் இருந்தது. அதில் வெளிச்சம் முதலான சவுகரியம் குறைவாயிருந்தது. நந்திகுப்தன் செட்டியார் காற்று வாட்டமுள்ள சிறப்பான ஒரு புது மாளிகை கட்டவேண்டுமென்று எண்ணியிருந்தார். ஆனல் அப்படிச்செய்ய அவரால் முடியாமற் போயிற்று. உபகுப்தனுர் தம்முடைய பிதாவின் விருப்பத்தைநிறைவேற்றினரென்று தெரிந்தால் எனக்கு மெத்த சந்தோஷமும் பெருமையுமாயிருக்கும். நந்திகுப்தனுரின் குமாரன் மாளிகை இருப்பது எந்தப் பக்கம்? நாளைக்குச் செட்டியாரைப் போய்ப் பார்ப்போம்."

உபகுப்தனுர்—"பெரியவரே, செட்டியார் நந்தகுப்தனுரின் கீர்த்திப் பரிமளம் அக் காலத்தில் எப்படி எங்கும் பரவியிருந்ததோ அப்படியே இப்போதும் இருக்கிறது. அவருடைய கீர்த்தியை மட்டும் கேள்விப்பற்று, அவர் மகனுடைய நிலைமையைப் பாராதவர்களுக்கு இப்படித்தான் தோன்றும்."

"நான் நந்திகுப்தன் செட்டியாரின் கீர்த்தியை மட்டும் கேட்டிருப்பவனல்ல, அவருடைய சகவாச சுகத்தையும் அனுபவித்திருப்பதோடு அவருடைய சிநேகமும் எனக்கு உண்டாயிருந்தது."

"என் தகப்பனுரின் பழைய சிநேகிதரை நான் மனப்பூர்வமாய் வரவேற்கிறேன். இன்று பத்து வருஷம் கழித்து, தாங்கள் அவருடைய அன்பு நிறைந்த நினைவை என் நெஞ்சத்தில் எழுப்பிவிட்டீர்கள். இதன் பொருட்டுத் தங்களிடம் நான் மிக மிக நன்றி பாராட்டுகிறேன்."

ஸியாமசுந்தரன் சற்றே தயங்கினவனுய்—"உம்முடைய தகப்பனுர் யார்? அவருடன் எனக்குப் பரிசயம் உண்டாயிருக்குமென்று நான் நினைக்கவில்லை," என்றான்.

"என் தகப்பனுரின் பெயர்தான் நந்திகுப்தனுர்."

"தம்பீ, இது மகா ஆச்சரியமாயிருக்கிறது. உம்முடைய பெயர் உபகுப்தன்; உம்முடைய தகப்பனுர் பெயர் நந்திகுப்தன். உன் சிநேகிதன் பெயரும் நந்திகுப்தன்; அவருடைய மகன் பெயரும் உபகுப்தன். அத்தியாச்சரியமாயிருக்கிறதே! உம்முடைய தகப்பனுர் கூட, ஒரு வேளை செட்டியாரிடம் ஊழியனுயிருந்தாரோ?"

"இல்லை! நானும் என் தகப்பனுரும் எப்போதும் யாரிடத்தும் ஊழியம் செய்ததில்லை. இன்று தாங்கள் என் விருந்தாளியாய் இருக்கிறீர்கள். ஆகையினலேயே இந்த அவமதிப்பான வார்த்தைகளைக் கேட்டு சும்மா இருக்கிறேன். இல்லாவிட்டால், என் பேரிலும் என் தகப்பனுர் பேரிலும் ஊழிய வேலையை ஆரோபிப்பவர்களை ஒருகாலும் தண்டியாமல் விட்டிருக்கமாட்டேன்," என்று உபகுப்தனுர் ஆத்திரத்துடன் பேசிவிட்டு, பிறகு சற்று சாந்தமடைந்து சொல்லலானுர்—"இரவாகப் போகிறது. எங்கள் வீட்டில் தாங்கள் போஜனம் பண்ணுவதாயிருந்தால், தங்களுக்கும் சேர்த்து சமைக்கும்படி திட்டஞ் செய்கிறேன். இல்லையென்றால், போஜன ஸாமக்கிரிகள் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். தாங்களே சுயம் பாகம் செய்துகொள்ளலாம். என் தகப்பனுர் காலத்தின் விபவம் இப் பொழுதில்லை. காலசக்கரத்தின் வசப்பட்டு, அந்த மாளிகையும், செல்வமும், பரிவாரமும் பணியாள் கூட்டமும் எல்லாம் குலைந்து சின்னபின்னமாய்விட்டன. ஆகவே தங்கள் யோக்கியதைக்குத் தக்கபடி விடுதியையும் வேலைக்காரர்களையும் அமர்க்க முடியாமலிருக்கிறேன். இதன் பொருட்டு என்னை க்ஷமிக்கவும். அடியேன் தேவரீருக்கு அடங்கின தாஸன். என் பிரிய பத்தினி தேவரீருக்குப் பணிப்பெண்—தேவரீருக்கு இஷ்டமான பணிவிடைகளை அடியோங்களிடத்திலிருந்து ஏற்றுக் கொள்ளுங்கள். முன் இருந்த அந்தச் செல்வமும் அதிகாரமும் பரிவார

மும் நஷ்டமாய் விட்டதற்காக நான் வருந்தவில்லை. ஆனால் எம்மவர் செல்வ வாழ்வு வாழ்ந்த அக் காலத்தில் தேவரீருக்குப் பரி ஜனங்களின் மூலமாய் என்னென்ன தொண்டுகள் செய்யப் பட்டிருக்கக் கூடுமோ, அவற்றைச் செய்யும் சௌபாக்கியம் இப்பொழுது எனக்கும் என் பத்தினிக்கும் வாய்த்திருப்பதைப்பற்றி எனக்கு சந்தோஷமே உண்டாகிறது.”

இவ்வளவெல்லாம் சொல்லக் கேட்ட பிறகு சியாமசுந்தரனுக்கு விஷயம் விளங்கியது. செல்வம் நிலைபற்றதென்பது இப்பொழுது அவன் நினைவுக்கு வந்தது. இராணி இந்துமதி அங்கேயே உட்கார்ந்து இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். உபகுப்தனுடைய அத்தியந்த வினய சீலத்தையும் சாத்துவிக சுபாவத்தையும் கண்டு அவளுக்கு மிக்க ஆனந்தம் உண்டாயிற்று. அவள் கூறலானாள்:—

“உபகுப்தரே, சியாமசுந்தரருக்குத் தங்களிடம் பரிசயமில்லை. ஆகையால் அவர் பிழைபடப் பேசிவிட்டார். அதற்காக அவர் தன்னைப் பொறுத்தருளும்படி தங்களைப் பிரார்த்திப்பார். தங்களுடைய வினயசீலமும், அதிதிகளிடத்தில் இவ்வளவு சிரத்தையும், உள்ளதைக்கொண்டு திருப்தியடையும் பெருந்தன்மையும் சாத்துவிக புத்தியும் ஆகிய இவற்றின் பெருமையை நோக்கும் போது, அகில பிரபஞ்சத்தின் செல்வமும் சாக்ஷாத் குபேரனுடைய சம்பத்தும் கூடத் தங்கள் தவச் செல்வத்துக்கு ஈடாகாதென்று சொல்லவேண்டும். உள்ளபடியே தாங்கள் தங்கள் மாதா பிதாக்களின் பெயரை நிலை நிறுத்தியிருக்கிறீர்கள்.”

இராணி இந்துமதி கூறியது கேவலம் உபசாரமன்று. திருமகள் உபகுப்தனைக் கை விட்டு விட்டாள்; அவனுடைய பரிவாரம் போய் விட்டன; எல்லா வேலைகளையும் தம் கையாலேயே செய்துகொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. இது மாத்திரமன்று; வீட்டில் அஷ்டதரித்திரம் கூத்தாடத் தொடங்கிவிட்டது. அவருக்குக் கடன் கொடுத்திருந்த ஸாவ்கார்கள் அவரைப் பிய்த்துத் தின்றுவிட்டார்கள். ஆனால் அவருடைய நற்குணங்கள் மட்டும் எள்ளளவும் குறையவில்லை. ஐசுவரியவானாய் இருந்த காலத்தில் அவர் எவ்வளவு அடக்கமாயிருந்தாரோ அவ்வளவு அடக்கமாகவே இப்போதும் இருந்தார். வைபவ காலத்தில் அவரிடத்தில் யாதொரு வள்ளன்மை இருந்ததோ அது இப்பொழுதும் நிலைத்திருந்தது. ஔதாரியம், சாத்துவிக புத்தி, ஸ்வதர்ம நிஷ்டை இவை உபகுப்தனுக்குப் பிறவிக் குணங்களாயிருந்தன. தாழ்வுற்ற நிலைமையில் அவரது இருதயத்தின்—உள்ளத்தின்—உறுதி ஒரு காலும் குலையவில்லை. நல்குரவினால் அவருடைய மனத் திருப்தி சற்றேனும் குறையவில்லை. அவர் பௌத்த தர்மத்தைக் கடைப்பிடித்து இல்லறம் நடாத்தும் உபாஸகனாயிருந்தார். அவர் பௌத்த தர்மத்தின் உத்தம தத்துவங்களை நன்குணர்ந்து அவற்றின்படியே ஒழுகி வந்தார். தம் தகப்பனாரின் திரண்ட செல்வக் கடல் உபகுப்தனுடைய வள்ளன்மையினால் வறண்டு போய்விட்டது. உபகுப்தனுடைய வள்ளன்மையின் பயனாக நூறு சதாவிர்த்தி ஏற்படுத்தப்பட்டு, அதில் இல்லை யென்று வந்தவர்களுக்கெல்லாம் இல்லை யென்னாது நினைந்தோறும் அறுசுவை யுண்டி வயிறு நிறைய வழங்கப்பட்டு வந்தது. ஆனால் உபகுப்தனுக்கும் அவருடைய பத்தினிக்கும் கஞ்சியும் கூழும் கூடக் காலத்தில் கிடைப்பது அரிதாயிருந்தது. ஏழைகளின் பொருட்டு உபகுப்தனர் அமைத்த தர்மசாலைகள் அவரது சொந்தக் குடிசையை விட எத்தனையோ மடங்கு அதிக சௌகரியமுள்ளவைகளாயும் நேர்த்தியாயும் இருந்தன. இவற்றையும்விட-

மிக்கதாகிய மற்றொரு மாண்பு உபகுப்தனிடம் இருந்தது. இவ்வெல்லா நலங்களுள்ளும் தலைமை சான்றதாய் ஓர் பெறற்கரிய பெருங்குணம் உபகுப்தனிடம் சிறப்பாய் விளங்கியது. அக்குண நலத்தின் நறுமணம் மதுரையம்பதியில் மட்டுமன்று மற்றும் சுற்றுப் புறங்களிலெல்லாம் பரவியிருந்தது. உபகுப்தனர் காளைப் பருவத்தினராயிருந்தார். ஆனால் அவருடைய இந்திரிய நிக்கிரகம் பெரிய பெரிய தவமுனிவர்களுக்கும் ஆச்சரியத்தை விளைவிப்பதாயிருந்தது. ஆரணியத்தில் வசித்து, மாதர்களின் நிழலைக் கூடப் பாராது கொழுமையற்ற கந்த மூலங்களைப் புசித்து வாழ்கின்றவர்களும் துறவறத்தில் நிற்பவர்களும் முதியவர்களுமாகிய முனிவர்களுக்கும் சாதிப்பதற்கரிய இந்திரிய நிக்கிரகமானது நகரத்தில் வசித்து ரூபவதிகளாகிய ரமணிகளின் இடையே வாழும் உபகுப்தனுக்கு இடதுகை விளையாட்டாயிருந்தது.

அக் காலத்தில் வாஸவதத்தை என்னும் வேசை மதுரா நகரியின் சௌந்தரிய சக்கரவர்த்தினியாய் விளங்கினாள். அவளுடைய ஒப்பற்ற ரூபலாவண்யத்தைப் பார்க்க வேண்டி வெகு தூரத்திலிருந்து இளைஞர்கள் மதுரைக்குத் திரண்டு வந்தனர். போகப் பிரிய[illegible] களும் பார்த்திவர் [illegible] அவளுக்கு விருந்தினராயி [illegible] பெரிய வியாபாரிகள் கூட மனம்போனபடிப் பணம் [illegible] செலவழித்தும் அவளைக் காணப் பெறுவது அரிதாயிருந்தது. வாஸவதத்தை வீதியில் வரும் பொழுது அவளுடைய தரிசனத்துக்காக எத்தனையோ இளங்குமரர் பகீரதப் பிரயத்தனம் செய்வர். அத்தகைய ஜகன்மோகினியாகிய வாஸவதத்தை ஒருநாள் உபகுப்தன் செட்டியாரின் சிறிய கடைப் பக்கமாய்ப் போய்க்கொண்டிருந்தாள். உபகுப்தனரது மேனியழகைக் கண்டு அவரையே வெகு நேரம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அவளுக்கு இச்சை உண்டாயிற்று. ஆகவே வாசனைத் திரவியம் வாங்குகிற பாவனையாக அவள் அவர் கடையிற் போய் உட்கார்ந்தாள். அக்கம் பக்கத்திலுள்ள காளைப் பருவத்துக் கடைக்காரர்கள் இன்று உபகுப்தனுக்குச் சுக்கிரதசை அடிக்கப் போகிறதென்று எண்ணிக்கொள்ளலாயினர். உபகுப்தனுடைய சரச சுபாவத்தையும் உள்ளங்கவர் வடிவழகையும் யௌவனத்தையும் கண்டு அக் கணிகை அவர் மேல் மையல் கொள்ளலானாள். ஆனால் அவளுடைய ரூபலாவண்யம் அவரது உரங் கொண்ட உள்ளத்தைச் சிறிதும் அசைக்க முடியவில்லை. வாஸவதத்தை ஆசாபங்கமுற்று வீட்டுக்குத் திரும்பிப்போய்த் தன் பணிப் பெண்ணிடம் உபகுப்தனுக்கு ஒரு காதற் சீட்டு எழுதியனுப்பினாள். “தங்களுடைய சகவாச சுகம் பெறப் பெரிதும் இச்சிக்கிறாள் இந்த தாசி,” என்று அதில் எழுதியிருந்தது. அதற்கு உபகுப்தனர்—“நான் ஏழை என்னை மறுபடியும் பார்ப்பதனால் என்ன பிரயோஜனம்? என்னைச் சந்திக்க வேண்டிய சமயம் பின்னால் வரும்,” என்று பதில் எழுதிவிட்டார். இந்தக் கண்டிப்பான மறுமொழியைப் பெற்று வாஸவதத்தைக்கு மிக்க ஆச்சரியம் உண்டாயிற்று. அவள்—“எனக்குத் தங்களிடத்திலிருந்து ஒரு சல்லியாவது பெறவேண்டுமென்ற விருப்பமில்லை. கேவலம் தரிசன பாக்கியத்தையும் சகவாச சுகத்தை மட்டுமே இச்சிக்கிறேன்,” என்று மீண்டும் சொல்லியனுப்பியதோடு அவருடைய வறுமையை ஒழிப்பதாகவும் ஆசை காட்டினாள். ஆனால் உபகுப்தர் தமது ஒழுக்கம் ஒரு சிறிதும் குலைவதற்கு இடங்கொடுத்தாரில்லை. சில காலம் கழித்து அக் கணிகையிடம் அரசனுக்கு அதிருப்தி உண்டாகவே, அவன் ஆணைப்படி இராஜ சேவகர்கள் அவளுடைய மூக்கையும் காதுகளையும் கைகளையும் கால்களையும் அறுத்து அவளைச் சுடுகாட்டில் எறிந்துவிட்டார்கள். அப்பொழுது

உபகுப்தனர் அவளைக் காணப் போய் அவள் பக்கத்தில் உட்கார்ந்தார். அவரைக் கண்டவுடனே அவ் வேசைக்கு வெட்கமாய்விட்டது. அவள் கூறினள்—"பிரபுவே, இந்த தேகம் அன்றலர்ந்த புஷ்பம் போல் யௌவன லாவண்யத்துடன் சோபித்துக்கொண்டு, விலையேறிய வஸ்திராபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, காமி ஜனங்களின் சித்தங்களைக் கவர்ந்து கொண்டிருந்த பொழுது, நான் பிரார்த்தித்த பிறகுகூட, தாங்கள் எனக்குத் தரிசனம் அளிக்கவில்லை; தங்கள் சகவாச சுகமும் எனக்குக் கிடைக்கும்படி செய்யவில்லை. இப்பொழுதோ, இந்தப் பரிதாபமான நிலை எனக்கு நேர்ந்திருக்கிறது. ஆநந்தம், சுகம், சௌந்தரியம்—எல்லாம் இப்பொழுது என்னைக் கைவிட்டுவிட்டன. ஐயோ, நான் இந்த ஈனஸ்திதியில் இருக்கும்போது, இந்த சின்னபின்னமான அருவருக்கத் தக்க தேகத்தைப் பார்க்க ஏன் வந்தீர்கள்?" இவ்வாறு அவள் பேசிய நெஞ்சைப் பிளக்கும் வார்த்தைகளைக் கேட்டு உபகுப்தனர் மறுமொழி கூறினர்—"வாஸவதத்தாய், உன்னைச் சந்திப்பதற்கு ஏற்ற சமயம் இதுவேயாகும். மனிதனுடைய இம்மை வாழ்க்கை எவ்வளவு நிலையற்ற தென்பதைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கும் பொருட்டே இங்கே வந்தேன்," என்று சொல்லி, சாகுந்தருவாயிலுள்ள அந்தக் கணிகைக்கு அவர் தருமோபதேசம் செய்தார். அதனால் அவளுடைய துயருழந்த மனதுக்கு உபசாந்தி உண்டாயிற்று. உண்டாகவே, அவள் புத்தன், தருமன், சங்கம் என்னும் மும்மையைச் சரணடைந்து உயிர் துறந்தாள்.

செட்டியார் உபகுப்தனர் இத்தகைய சத்புருஷனென்று பெயரெடுத்தவர். அவர் உலகத்தில் இருந்தாலும் எப்பொழுதும் அதன் பற்றினின்று நீங்கியே இருந்தார். இந்திரிய சுகத்தில் ஆவலாவது உலக சுகதுக்கங்களின் நினைவு கூடவாவது அவருக்கு உண்டானதில்லை. இத்தகைய புண்ணிய புருஷனுடைய திரு மாளிகையில் தங்கும்படியான பாக்கியம் வாய்த்ததைப் பற்றி இந்துமதி தேவிக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. பௌத்த தருமத்தைப் பின்பற்றியவர்கள் மிருக துஷ்டர்களென்றும், அவர்கள் நீதிநெறியைப் புறக்கணித்து அக்கிரமமான தருமப் பிரசாரம் செய்கிறவர்களென்றும் பிரணயினி எண்ணியிருந்தாள். உபகுப்தனரின் சரித்திரத்தைக் கேட்ட பிறகு அவளுடைய இவ்வெண்ணம் மாறிவிட்டது. தனவந்தர்களின் மாளிகைகளில் அடைய முடியாத சுகமும் ஆதரவும் மதிப்பும் உபகுப்தனது சிறு குடிசையில் அந்த யாத்திரிகர்களுக்கு வாய்த்தன.

அடுத்த நாள் உதயமாகிய சூரியன் உபகுப்தனது சிறு குடிசையில் அமைதியுடன் நித்திரைச் சுகம் அநுபவித்திருந்த அவ் வெல்லோருக்கும் துயரத்தைத் தரும் ஒரு செய்தியைக் கொண்டு வந்தான். காலம்பெறக் கடையைத் திறந்து பெருக்கிச் சுத்தஞ் செய்வதற்காக உபகுப்தனர் வந்தபொழுது, அவருக்கு வெகுநாளைக்கு முன் கடன் கொடுத்திருந்த ஒரு ஸாவுகார் இரண்டு இராஜாங்க உத்தியோகஸ்தருடன் வாயிற்படியில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அந்த ஸாவுகார் உபகுப்தனரைப் பிடிப்பித்து அவரிடத்திலிருந்து தனக்குச் சேரவேண்டிய கடனை வசூல் செய்யும் பொருட்டு வந்திருந்தான். அவனைக் கண்டவுடனே அவன் உள்ளக் கருத்தை உபகுப்தனர் அறிந்துகொண்டார். அவர் ஸாவுகாரரையும் இராஜாங்க உத்தியோகஸ்தரையும் பணிவுடன் வணங்கி—"சற்றே உட்காருங்கள், இதோ வந்துவிடுகிறேன்," என்று சொல்லிக்கொண்டு, தம் பத்தினியிடம் செய்தி முழுதும் தெரிவிக்கச் சென்றார். அவர் இச் செய்தி தம் விருந்தினருக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்று மிக்க கவலை கொண்டிருந்தபோதிலும், கடையில் அது ஸியாம

சுந்தரன், இராணி இந்துமதி, பிரணயினி இவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தினார்கள். ஸாவுகாருக்குச் சேரவேண்டிய தொகையை அவர்கள் கணக்கிட்டுப் பார்த்ததில் முதலும் வட்டியும் சேர்ந்து இரண்டாயிரம் பொன் என்று ஏற்பட்டது. அவ்வளவு பெருந்தொகை கொடுப்பது அந்த சமயத்தில் இந்துமதிக்குக் கஷ்டசாத்தியமாயிருந்தது. இக்கிராமத்திலிருந்து ஜீவனூ— தருவிப்பதானால் ஒரு மாதமாகும். ஆகவே ஒரு மாதம் பொறுத்துக் கொள்ளும்படி செட்டியாரைக் கேட்டுக்கொள்ளச் செய்யலா மென்று அவள் நினைத்தாள். அப்பொழுது உபகுப்தனர் இன்னும் தம் பத்தினியுடன் பேசிக்கொண்டேயிருந்தார். ஆண் கோலம் பூண்டிருந்த பிரணயினியும் ஸியாமசுந்தரனும் வெளியே ஸாவுகாரிடம் சென்றார்கள். அவர்கள் அவனிடம் ஏதோ பேசிக்கொண்டிருக்கையில், அத்தியந்த விசாரமான ஒரு செய்தி அவர்கள் செவியிற் பட்டது.

அப்பொழுது வீதியில் ஒருவன் தொண்டையைக் கிழித்துக்கொண்டு உரத்துக் கூவிப் பேசலானான். அவன் பின்னே ஆயுதபாணிகளான எண்மர் பதின்மர் சைனிகர் இருந்தனர். அவர்களுக்குப் பின்னால் அவ்வூர் ஜனங்கள் வேடிக்கை பார்க்க ஆற்றுக் கணக்காய்க் கூடியிருந்தார்கள். அம் மனிதனுடைய கூக்குரல் நின்றவுடனே நெஞ்சைப் பிளக்கும்படியான பறையொலி எழுந்தது. பிறகு சற்று நேரம் அமைதியாயிருந்தது. மறுபடியும் அம் மனிதன் உரத்துக் கூவினான். இந்தக் காட்சி உபகுப்தன் செட்டியாரின் கடைக்கு வெளியே நிகழ்ந்துகொண்டிருந்தது.

இக் கூட்டம் செட்டியார் உபகுப்தனரின் கடைக்கு எதிரே வந்த பொழுது அமைதியுற்றிருந்து மறுபடியும் அம் மனிதன் தொண்டையைக் கிழித்துக்கொண்டு இரத்த குரலில் இவ்வாறு பேசலானான்—

"கலிங்க நாட்டை அசோக மஹா ராஜா ஜயித்துவிட்டார். கலிங்க நாட்டின் இளவரசாகிய ஜிதேந்திரனைப் பிடிக்கும்படி மஹா ராஜா கட்டளை பிறப்பித்திருக்கிறார். ஆனால் ஜிதேந்திரன் ஹரித்துவாரத்தை விட்டு எங்கேயோ ஓடிப்போய்விட்டான். யாராவது அவனைப் பற்றிய விபரம் தெரிந்தாலும், அவனை எங்கள் முன் கொண்டு வந்துவிட்டாலும், அப்படிச் செய்கிறவனுக்குப் பத்தாயிரம் பொன் வெகுமதி கொடுக்கப்படும்"

இப்படிப் பேசி முடிந்தவுடன் மறுபடியும் பறையொலி பிரசண்டமாய் எழுந்தது.

இந்தக் கேட்டதும் அரசிளங்குமரி பிரணயினியும் ஸியாமசுந்தரனும் அந்த ஸாவகாரைச் சமாதானப்படுத்த வேண்டிப் பேச எண்ணியிருந்ததை மறந்துவிட்டார்கள். இராணி இந்துமதிக்கு ஜிதேந்திரனைப் பற்றிய இந்தச் செய்தியைத் தெரிவிக்கும் பொருட்டுப் பிரணயினி வேகமாய் வந்தாள். வந்ததும் அவள் தாயாரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"அம்மா—அம்மா" என்று மட்டும் பிரணயினி கத்தினளேயன்றி, அதற்கு மேல் ஒன்றும் பேச அவளால் முடியவில்லை.

இராணி இந்துமதி பெருமூச் செறிந்து கூறினாள்—"நாம் எல்லாம் கெட்டாய்விட்டது. அந்த வயிற்றெரிச்சலை மறுபடியும் கேட்க வேண்டுமா?

ஸியாமசுந்தரன்—"அம்மா, நம்மைச் சோதிக்கும் சமயமாகும் இது. துக்கத்தைப் பொறுத்துக்கொண்டு ஆபத்துக்கு ஈடுகொடுக்கச் சித்தமாயிருக்க வேண்டும்."

பிரணயினி துக்கத்தை அடக்கமாட்டாமல் சொன்னாள்—"அப்பாவின் கதி என்ன ஆயிற்றோ!

"யுத்தத்தில் முதுகுகாட்ட அவர் கற்றதேயில்லை. அப்படி அவர் முக்காலும் செய்யமாட்டார். யுத்தம் செய்து கொண்டிருக்கையில் சத்துரு சைனியம் அவரைப் பிடித்துக்கொண்டு போயிருக்கலாம். அல்லது—வேறென்னவாயிருக்கலாம்?" இந்த துக்ககரமான சமயத்தில் யோசனை செய்வதுகூட இந்துமதிக்குத் தாங்க முடியாமற் போய்விட்டது.

பிரணயினி அழுதுகொண்டே கூறினாள்—"இல்லை அம்மா, அப்படியெல்லாம் அமங்களமான கொன் நம் நினைக்க வேண்டாம். அப்பா சுகமாகவே இருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை.

இராணி இந்துமதி பொங்கிவரும் துக்கத்தை அடக்கிக்கொண்டு கூறினாள்—"என் மனதும் அப்படித்தான் சொல்லுகிறது. ஆனால் காரியம் இப்படி விபரீதமாய்ப் போய்விட்டதற்கு என்ன காரணம்? நாம் இந்திரபுரத்தை விட்டுப் புறப்பட்ட பொழுது, நிச்சயமாய் நமக்கே ஜயம் உண்டாகுமென்று எல்லோரும் சொன்னார்கள். பௌத்த வேந்தன் அசோகன் சந்திசெய்து கொண்டுவிடுவானென்று வைதிக தர்மிகள் நம்பிக் கொண்டிருந்தார்கள். பின்னை யுத்தத்தின் முடிவு ஏன் இப்படி விபரீதமாய் மாறிற்று? ஜிதேந்திரனோ இன்னும் ஒன்று மறியாத சிறுபிள்ளையாகவே உள்ளான். அவனை அசோகனுடைய தூதர்கள் எப்படியும் தேடிப் பிடித்தே தீர்வார்கள். இதைத் தடுக்க என்ன உபாயம் செய்யலாம்?"

ஜிதேந்திரனைப்பற்றிய சிந்தை மனதில் உண்டானதும் இராணி இந்துமதிக்கு துக்கம் இருமடங்காய்விட்டது. அவளால் தனக்குண்டான சோகத்தின் வேகத்தை அடக்க முடியவில்லை. அவள் எவ்வளவோ தெரிந்தவளாயிருந்தும் குழந்தையைப் போல வாய்விட்டு அலறி அழலானாள். பிரணயினிக்கு ஆறுதல் சொல்வதென்பது ஒரு புறம் நின்றுவிட்டது. அவளும் விம்மி விம்மிக் கரையலானாள். சியாமசுந்தரனும் கண்களைத் துடைத்துக்கொண்ட வண்ணமாயிருந்தான். அந்த நிலைமையில் தன் சோகத்தை வெளிப்படுத்தவும் அவன் அசக்தனாயிருந்தான். நாம் ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாய்ப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறோமென்னும் கவலையே உருவெடுத்து அவனெதிரில் நின்றது.

செட்டியார் உபகுப்தனார் தம் சிந்தையிலேயே ஆழ்ந்திருந்ததும் நல்லதாயிற்று. இல்லாவிட்டால் அவருடைய விருந்தினரின் உண்மை நிலைமை அவருக்குத் தெரிந்து போயிருக்கும். புறக்கடையில் அவர்தம் இளம் பத்தினிக்குச் செய்தி தெரிவித்துக் கொண்டிருந்தார். இந்துமதி முதலானவர்கள் நடுக் கட்டில் இருந்தார்கள். அப்படியிருந்தும், இந்தசுந்தரியின் விம்மியழுகை அவர்களுக்குக் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த லாவுகாரும் துணைத்த உத்தியோகஸ்தர்களும் கடையில் உட்கார்ந்திருந்தார்கள். இராணியும் இராஜகுமாரியும் சியாமசுந்தரனும் சொட்டான நிலைமையில் அகப்பட்டுக்கொண்டு விழித்தார்கள். ஒரு பக்கம் லாவுகாருக்கு அவன் துணைவர்களும் கடன் தொகையைச் செலுத்தியே தீரவேண்டுமென்று தயாதாக்ஷண்யமின்றி உறுமுவதையும், இன்னொரு பக்கம் செட்டியாரும் அவரது இல்லாளும் கடன் கொடுக்க வழியின்றிக் கண் கலங்கிப் பரிதவிப்பதையும் அவர்கள் கண்டு அந்த தம்பதிகளின் துக்கத்தைப் போக்கும்படி வழி தெரியாமல் வருந்தினார்கள்.

கடைசியில் சியாமசுந்தரன் கண்களைத் துடைத்துக்கொண்டு ஒரு பக்கமாய் இராணியிடம் இரகசியமாய்க் கூறினான்—"அம்மா, இது துக்கிப்பதற்கேற்ற இடமல்ல. நாம் சீக்கிரம் ஹரித்துவாரம் போய்ச் சேரவேண்டும். நமக்கு நல்ல

காலம் உண்டாகிற வரையில் நாம் அஞ்ஞாதவாசமே செய்து தீர வேண்டும்."

இராணி இந்துமதி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஏக்கமுற்று மொழிந்தாள்—"இப்பொழுது நல்ல காலம் எங்கிருந்து வரப் போகிறது? இனி நற்காலம் பிறக்குமென்று எதிர் பார்ப்பது வீண் மனோரதமேயாகும். யுத்தத்தில் அவருக்கு என்ன நேர்ந்திருக்குமென்பது ஒன்றுமே நமக்குத் தெரியவில்லை. அதிகமாக இருந்தால் சத்துரு சேனை அவரைத் திடீரென்று பிடித்துக்கொண்டு போயிருக்கும். இதைவிடப் பெரிய ஆபத்து நேர்ந்திருக்குமென்று நம்பத்தக்க விதமாய்ப் பாவித்துக்கொள்வது சாத்தியமில்லை. இளங்கோ ஜிதேந்திரனைப் பிடித்துக்கொண்டு போவதே சத்துருவின் நோக்கமென்று தென்படுகிறது. இதிலிருந்து அவர்களுக்கு என்ன தீமை செய்ய வேண்டுமென்று எண்ணினாலும் அதை அப்பொழுதே சத்துருக்கள் செய்திருப்பார்கள் என்று தெளிவாய்த் தெரிகிறது".

பிரணயினி—"அம்மா, எல்லா பௌத்தர்களும் இந்தச் செட்டியாரைப் போலவே சாதுக்களாகவும் அன்புள்ளவர்களாகவும் இருந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும்!"

"செல்வமே, அப்படி இருந்தால், இந்த யுத்தமே ஏன் தொடங்குகிறது? மகதாதிபதியோ பௌத்த தர்மத்தைப் பிரசாரம் செய்யக் கங்கணம் கட்டியிருக்கிறான். இந்த மதவெறியினால் இது வரையில் எவ்வளவு தீமை விளைந்திருக்கிறதோ தெரியாது. அதை நினைத்தாலும் உடல் நடுங்குகிறது".

பிரணயினி துக்கத்தை அடக்கமாட்டாமல் கூறினாள்—"அம்மா இந்த துஷ்டர்களாகிய நரபசுக்களின் வலையில் ஒரு வேளை அப்பா சிக்கிக் கொண்டிருந்தால், அவருக்கு என்ன ஆபத்து விளைந்திருக்குமோ தெரியவில்லையே."

பிறகு சற்று நேரம் வரையில் எல்லாம் நிச்சப்தமாயிருந்தது. அச் சிறிது நேரத்திற்குள்ளும், இந்த ஆபத்துக்கு எப்படி ஈடு கொடுப்போம், ராஜாவின் கதி என்னவாயிருக்கும், இளங்கோ ஜிதேந்திரனுடைய இருப்பிட முதலிய விவரங்களை ஏன் விசாரிக்கிறார்கள் என்றிப்படி ஒவ்வியதும் ஒவ்வாததுமான பலவகைச் சிந்தைகள் அலையலையாய் எழுந்து அவர்கள் உள்ளங்களை அலைத்தன. கடைசியில் இராணி இந்துமதி தைரியத்தை விடாமல் கூறினாள்—

"என் ஜிதேந்திரன் ஒருவன் மட்டும் சுவாதீனனாயிருந்தால், அவன் இன்றில்லாவிட்டால் இரண்டு மூன்று வருஷத்துக்குள்ளாவது மறுபடியும் கலிங்க நாட்டை வைதிக தர்மத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவான்; கலிங்க ராஜ்ய சிம்மாசனத்தை இப்போது கைப்பற்றியிருக்கும் பௌத்தர்களை ராஜ்யத்திலிருந்து துரத்திவிடுவான்; அன்றியும் வைதிக தர்மமென்கிற பெயர் கூட இல்லாமற் போய்விடுமோ என்ற சந்தேகத்தையும் அகற்றிவிடுவான். ஆகவே நம்மாலான மட்டிலும் பாடுபட்டு இளவரசைப் பாதுகாப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்ய வேணும்."

இராணி இந்துமதி இப்படிப் பேசியது சியாமசுந்தரன் மனதுக்குப் பிடித்தது. அவன் தழதழுத்த குரலில் பேசலுற்றான்—"அம்மணி, இளங்கோ ஜிதேந்திரன் உள்ளபடியே நம்முடைய வருங்கால வாழ்வின் இளங் கொழுந்து; குற்றுயிராயிருக்கிற வைதிக தர்மத்துக்கு அவனே அமிர்தசஞ்சீவி; பேரிருளிற் போய் விழுவதாயிருக்கிற கலிங்க நாட்டு ராஜவம்சத்தின் குலதீபம் அவனே; அப்படிப்பட்டவனை சத்துருவின் வசமாய்ப்

31

போய்விட்டால், நம்முடைய ஆசையாகிய அழகிய விருக்ஷத்தின் மேல் பேரிடி விழுந்துவிட்டதென்றே எண்ண வேண்டும். இனி வைதிக தர்மமே அழிந்துவிட்டதென்று நேர்ந்த நம் பரலோகத்திற்குப் பயப்பட வேண்டியதாகும். துக்கிக்கத்தக்க விஷயமாயிருந்தாலும், அதுக்கடி கண்ணுக்கு முன் வந்து நிற்பதுபோல், இதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. லம்பாட் பிரதேச பூபதி சக்கரத்தின் அதிகாரம் பேரிருந்தாலுஞ்சரி, அல்லது யுத்தத்திலே விழுந்து மடிந்துவிட்டாலுஞ்சரி, வருங்கால நிலையின் சித்திரம் கண்ணுக்கு முன் தோன்றும் போது, அதைப் பற்றிப் பேசத்தான் வேண்டியிருக்கிறது. இப்பொழுதோ அவர் நம்மிடத்தில் இல்லை. பௌத்தர்களின் சிறைச்சாலைகள், மகாராஜாவுடைய நாதங்களிட கோரமானவை. பதிவிரதையாகிய சாவித்திரி தன் புருஷனை யமனுடைய பாசக்கட்டிலிருந்து மீட்டுக்கொண்டு வந்துவிட்டாள். ஆனால், அம்மணி, தாங்கள் அவ்வளவே அல்லது அதைவிட அதிகமான சக்தியுடையவர்களாயிருந்தாலும், இந்த மண்ணுலகத்து பௌத்த சமயிகளாகிய யமன்களின் கட்டிலிருந்து தங்கள் பக்தியை விடுவித்துக் கொள்வது அசாத்தியம். நம்முடைய மகாராஜா அசோகனுடைய ஆசியால் மகிமைபெற்றிருந்தால், கலிங்கநாட்டின் செல்வ வாழ்வும் வைதிக தர்மத்தின் பரிபாலனமும் சமஸ்த ஜகத்தின் க்ஷேமமும் அவருடைய அதீனத்திலிருந்து நீங்கிவிட்டதாக ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ளுங்கள். இனி நம்முடைய ஆசையெல்லாம் இராஜேந்திரனுடையவே சார்ந்திருக்கிறது."

"ஆனால் அவனைப் பற்றிய தகவல் கிடைப்பது எப்படி? மேலும் நம்மைப் போன்ற அபலைகளால் அவனை ரக்ஷிக்கத்தானும் முடியுமோ?" என்று இராணி இந்துமதி தன் துக்கத்தை வெளியிடுகிறாள்.

இவ்வாறாக இராணியின் ஸ்வரத்தில் அழுத்தியிருந்தாள். ஆனால் அக்கதையிலும் அவளுக்கு சோர்வுற்றிருந்த அவளது முகம் இப்பொழுது கம்பீரம் கலந்தொளிர்ந்த சந்திரனைப் போல் விளங்கிற்று. அவளது விழிகளில் ஒருவகை அபூர்வமான சாந்தி சோபித்தலாயிற்று. தெளிந்து நடந்திருந்த சித்தத்தின் சாயை மறைந்து போயிற்று. அவளுடைய வதன மண்டலத்தில் உற்சாகமும் உறுதிப்பாடும் ஒளி பிரகாசித்தன. அவள் இருந்தாற்போலிருந்து சொல்லுகிறாள்:—

"அம்மா, இந்த ஊரிலே இளவரசனைத் தேடும் பிரயத்தனமும் அதன் பொருட்டு இனம் கொடுப்பதாகப் பறை யறைவதும் எப்படி நடக்கிறதோ அப்படித்தானே ஒவ்வொரு கிராமத்திலும் பட்டணத்திலும் நடக்குமே?"

இராணி ஆச்சரியத்துடன் மொழிந்தாள்—"பிரணயினி, ஒவ்வொரு கிராமத்திலும், பட்டணத்திலும் மட்டுமல்ல, மற்றும் மனுஷ்ய சஞ்சாரமற்ற வனங்கள், மலைகள் கூட, பிரயாசமான அடர்ந்த காடுகளிலும் மலைக் குகைகளிலும், மனிதர் நுழையாத பள்ளத் தாக்குகளிலும்கூட அசோகனுடைய சேவகர்கள் இப்பொழுது தேடிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பௌத்தர்களாகவும், இராஜேந்திரனைத் தேடுவதற்காக பூமண்டல முழுதும் நல்லோராய்ச் சுழன்று வரப் பின்வாங்கமாட்டார்கள்."

"இப்படி இளைப்புக் களைப்பில்லாமல் தேடுவதிலிருந்தால் அவரும் அகப்பட்டேவிடுவான்."

"அதற்கென்ன செய்வது? அதற்காகத்தானே நாம் துக்கப்பட வேண்டியிருக்கிறது."

"ஆனால் தேடுவதையே பௌத்தர்கள் நிறுத்திவிட்டாலோ?"

"அவர்கள் தேடித் திரிவதை நிறுத்திவிடுவார்களென்பது சொப்பனத்திலும் நடவாது."

உற்சாகம் பொங்கும் விழிகளால் தன் தாயார் முகத்தைப் நோக்கிப் பிரணயினி கூறினாள்—

"அவர்கள் தேடுவதைத் தாமாகவே விடப் பார்க்கென்று நாம் ஏன் எதிர்பார்த்திருக்க வேண்டும்? அதை நாமே வசப்படுத்திக் கொண்டால்?"

இராணி இந்துமதி—"கண்ணே, அப்படி வழியில்லையென்று நிராசையாய் இருப்பதுபோல் இப்படிப்பட்ட வார்த்தைகளை வாயிலிருந்து கொட்டாதே."

"அம்மா, நிராசையால் பயந்தாவது வெறுப்படைந்தாவது நான் இதைச் சொல்லவில்லை. என் முகத்தைக் கொஞ்சம் நன்றாய்ப் பார். அது எவ்வளவு ஜொலிப்போடும் மலர்ச்சியோடும் விளங்குகிறது பார். நிராசையும் துக்கமும் ஆகிய இவற்றின் ஒரு துளியாவது உனக்கு இதில் தோன்றுகிறதா? நான் சொல்லுவதைத் திர யோசித்தே சொல்லுகிறேன். என்னுடைய புத்தியும் சக்தியும் எல்லாம் சரியாகவே இருக்கிறது."

இந்துமதிக்கும் சியாமசுந்தரனுக்கும் பிரணயினியின் வார்த்தைகள் பின்னும் ஆச்சரியத்தை விளைத்தன.

"இளவரசன் இராஜேந்திரனைத் தேடுவதை நிறுத்தும்படி அசோக மகாராஜாவை வசப்படுத்திவிடலாமென்றா நீ சொல்லுவது?"

"ஆம், அப்படித்தான்."

"ஜாலவித்தை காட்டியா அல்லது மோகனமந்திரம் பிரயோகித்தா நீ அவனைத் தொடாமல் வசியம் பண்ணிக்கொள்ளப் பார்க்கிறாய்? அவனை பயமுறுத்தி இளவரசனைத் தேடும் முயற்சியை ஒழித்துவிடும்படி செய்ய வல்ல அவ்வளவு சைனிய பலம்கூட நம்மவரிடத்தில் இல்லையே." இவ்வாறு சொல்லி இந்துமதி ஆச்சரியத்துடன் பிரணயினியை உற்று நோக்கிய வண்ணமாயிருந்தாள்.

"ஜாலவித்தை காட்டுவதும் மோகன மந்திரம் பிரயோகிப்பதும் கற்பனை யுலகத்தில் மனோராஜ்யம் செய்யும் மூளை கலங்கியவர்கள் கையாளும் உபாயங்களாகும். மகாராஜாவை எந்த விஷயத்திலாவது வசியப்படுத்துவதென்பது இன்று பாதகண்டத்தில் எந்த ஒரு சேனையாலாவது ஆகக்கூடிய காரியமல்ல." இவ்வாறு பேசிக்கொண்டிருந்த பிரணயினியின் கம்பீரத் தோற்றத்தைப் பார்த்து இராணி இந்துமதி சியாமசுந்தரன் இவர்களின் இருதயத்து ஆசைவிளக்கில் முளை கிளம்பத் தொடங்கியது. அவர்கள் இருவரும் ஒரே மூச்சில் பேசினார்கள்—

"அப்படியானால் இராஜகுமாரி எந்த உபாயத்தைக் கொண்டு காரியம் சாதிக்கப் போகிறாள்?"

"தன் மேனியழகை உபயோகித்து—"

இந்த மறுமொழியைக் கேட்டதுமே இராணி இந்துமதியின் உள்ளத்தில் எழுந்த ஆசையின் புது முளை எரிந்து சாம்பலாய்ப் போய்விட்டது. அவள் கண்களுக்கெதிரில் சற்றைப்பொழுது மின்னற் கொடி பளிச்சிட்டது போலவும், பிறகு நாற்புறமும் இருள் சூழ்ந்து கொண்டது போலவும் தோன்றியது. அவள்—"இன்றைக்கென்ன இவள் வாயில் வந்தபடிக்கெல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கிறாள்?" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு பிரணயினியை நோக்கி—"பிரணயினி, நீ என்ன இப்படிப் பேசுகிறாய்?" என்றாள்.

தன் வார்த்தைகளுக்குத் தன் தாயார் வேறு விதமாகப் பொருள் கொண்டதாகப் பிரணயினிக்குத் தெரிந்துவிட்டது. அவள் ஆக்கிரகத்துடன் சொன்னாள்—"அம்மா, நான் என்ன சொன்னேன்? ஜிதேந்திரன்னுவைப் போலவே நான் அதேசாயலாய்க் காணப்படுகிறேனு இல்லையா? நான் இந்த வேஷத்தில் முற்றிலும் யுவராஜனைப் போலவே காணப்படுகிறேனென்று நீயே சொல்லியிருப்பதுண்டே".

"அது சரிதான்; ஆனால் உபாயத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்".

பிரணயினி—"அதுதான் சொன்னேனே. என்னுடைய மேனிபழகை உபயோகித்து யுவராஜனைத் தேடுவதை நிறுத்தும்படி செய்து விடுவேன்'.

இராணி இந்துமதி சோகக்குரலில் கூறினாள்—"கொஞ்சம் நிதானமாய்ப் பேசு. உன்னுடைய இந்த வேதசூத்திரங்களின் —விடுகதைகளின்— கருத்து இன்னதென்று யாருக்குப் புரியும்?"

"யுவராஜா ஜிதேந்திரனுடைய முகமும் வடிவமும் கொண்ட மற்றொருவன் தன்னை யுவராஜன் என்று சொல்லிக்கொண்டு அசோகனுடைய கைதியாய் விட்டால், ஜிதேந்திரன் பிடிக்கப்பட்டானென்றே அரசன் எண்ணுவான். ஆகவே அவன் அந்தப் போலி ஜிதேந்திரனைச் சிறை செய்து யதார்த்த ஜிதேந்திரனைத் தேடும் முயற்சியை நிறுத்தி விடுவான்."

"ஆனால் ஜிதேந்திரனுடைய முகமும் வடிவமும் கொண்ட அப்படிப்பட்ட செயற்கை ஜிதேந்திரனை நாம் எங்கிருந்து கொண்டு வருவது? அப்படி ஒருவன் கிடைத்தாலும் அவன் பௌத்தர்களின் கோபாக்கினியில் விழ எப்படி இசைவான்?"

"அம்மா, ஜிதேந்திரனுடைய பிரதிரூபம் போன்ற நான் இதோ உன் எதிரில் இருக்கிறேனே. மேலும் நான் சகோதர வாஞ்சையை முன்னிட்டு, என்னுடைய ஜிதேந்திரன்னுவின் பொருட்டு, பௌத்தர்களின் சிறைபெழும் கோவத்தில் பாய்ந்து விழச் சந்தோஷத்துடன் சித்தமாயிருக்கிறேன்".

இப்பொழுது இராணி இந்துமதிக்கும் சியாமசுந்தரனுக்கும் விஷயம் விளங்கியது. பிரணயினியின் சகோதர வாஞ்சையைப் பற்றி அவர்களுக்கு வியப்பு உண்டாயிற்று. இந்துமதியின் மனதில் உண்டாயிருந்த சம்சயமும் நீங்கி விட்டது. அவள் தலையிலிருந்து ஒரு பெருஞ் சுமை இறங்கி விட்டதாக அவளுக்குத் தோற்றியது. அவள் தன் மகளை மார்புறத் தழுவிக் கொண்டு தழுதழுத்த குரலில் கூறினாள்—

"கண்ணே, 'என் மேனிபழகைக் கொண்டு' இன்று நீ மொழிந்ததற்கு நான் மிக இழிந்த பொருள் கொண்டு சற்று நேரம் உன் ஒழுக்கத்தைப் பற்றி ஒரு கெட்ட எண்ணம் என் உள்ளத்தில் உண்டாயிற்று. அந்த அபசாரத்துக்காக என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். உன்னுடைய சகோதரவாஞ்சையைக் கண்டு உன்னைப்போன்ற பெண்மணியின் தாயாராய் இருப்பதைப்பற்றி நான் மிகப் பெருமை பாராட்டுகிறேன்."

"அம்மா, அதிகமாய்ப் பேசுவதற்கு இது சமயமன்று. யுவராஜனைச் சடுதியில் பிடித்து விடுவார்களென்கிற பயம் க்ஷணத்துக்கு க்ஷணம் வளர்ந்து வருகிறது. இந்த நிலைமையில் எவ்வளவு சீக்கிரமாகக் கூடுமோ அவ்வளவு சீக்கிரமாக நான் பிடிக்கப்பட்டுப் போனால் நல்லது."

இராணி இந்துமதி—"அது எப்படியாகும்?"

"ஏன், நான் சாக்ஷாத் ஜிதேந்திரன்னுவைப் போலவே தோன்றவில்லையா?"

இந்துமதி—"ஆனால் நீ பெண்பிள்ளையாய் இருக்கிறாயே".

சியாமசுந்தரன்—"மேலும் உன்னை ரக்ஷிப்பதே எங்களுக்கு எல்லாவற்றையும்விட முதன்மையான கடமையாகுமே".

"இராஜகுமாரி பிரணயினியை ரக்ஷிப்பது உங்களுடைய முதன்மையான கடமையல்ல. வைதிக ஆரியர்களின் வைதீக தர்மத்தைக் காப்பதும், கலிங்க ராஜ்யத்தை மீண்டும் கைப்பற்றுவதுமே உங்களுடைய தலைமையான கடமைகளாகும். இராஜகுமாரி பிரணயினி அவ்வளவு பலமற்றவளல்ல. தன்னொழுக்கத்தை—நிறையை—எப்படிக் காத்துக்கொள்ள வேண்டுமென்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். சமயம் வரும்போது தன்னுடைய தூய்மையைக் காக்கவல்ல இந்த உயிர்த்துணை கூடவே இருக்கிறது," என்று சொல்லிப் பிரணயினி ஒரு பளபளப்பான டோரியைத் தன் கஞ்சுகத்துக்குள்ளிருந்து எடுத்து, இராணிக்கும் சியாமசுந்தரனுக்கும் எதிரில் வைத்து, மீண்டும் மொழியலுற்றாள்—'சகோதரவாஞ்சையின் பொருட்டும், என் பிதாவின் சிம்மாசனத்தின் பொருட்டும், வைதிக தர்மரக்ஷையின் பொருட்டும் என்னைப்போன்ற ஓர் அற்பப் பெண்ணின் பிராணன் ஆபத்துக்கு உள்ளாவதனால் உண்டாகும் தீமை என்ன? யுவராஜன் க்ஷேமமாயிருந்தால் கலிங்க ராஜ்யத்தை மீண்டும் ஸ்தாபிக்கலாம்; அமிழ்ந்து போய்க் கொண்டிருக்கும் இந்த வைதிக தர்மமாகிய கப்பலையும் கரை சேர்த்துத் தன் வம்சத்தின் கீர்த்தியையும் ஓங்கச் செய்யலாம்."

"அதெல்லாம் வாஸ்தவமே. நீ நிச்சயமாய் ஜிதேந்திரனைப் போலவே காணப்படுகிறாய். நீ ஜிதேந்திரனல்லவென்று சம்சயம் கூட பௌத்தர்களுக்குத் தட்டாது. மேலும் உன்னுடைய ஒழுக்கத்தையும் நீ தக்கபடி காத்துக் கொள்ளுவாய் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. ஆனால் —"

"இன்னும் என்ன பாக்கி இருக்கிறது? அம்மா, இந்த 'ஆனால்' என்ற தடைச்சொல்லைப் போட்டு நீ என்னை இந்தப் புண்ணிய கர்மத்திலிருந்து திருப்புவதான போராட்டத்தில் விழ வேண்டாம். என்னுடைய உறுதிப்பாடும் தளர்ச்சியடையப் போகிறதில்லை."

"ஆனால், என் கண்ணே, அந்த துஷ்ட பௌத்தர்கள் உன்னைத் தங்கள் மதத்தில் சேர்த்துக் கொண்டு விட்டால்?"

"இஷ்டத்துக்கு விரோதமாய் எவனையும் பலாத்காரமாகத் தன் அதிகார வரம்புக்குள் அகப்படுத்தக் கூடிய சக்தி உலகத்தில் எந்த மதத்துக்கும் இல்லை. விதி வசத்தால் நான் மதப் பிரஷ்டமாய் விட்டதாக வைத்துக்கொள்வோம். அதனால் விளைந்துவிடும் நஷ்டம் என்ன? ஆனால் நான் மதப் பிரஷ்டமானாலும், சமஸ்த பாரதவர்ஷத்தின் தர்மத்துக்கும் பாதுகாப்பு ஏற்படுமே; அந்த லாபம் கொஞ்சநஞ்ச மல்லவே. வீணான காரணங்களைப் பன்னிப்பன்னி அடுக்கி என்னுடைய சங்கல்பத்தைத் தடுக்க வேண்டாம். இந்தப் போலி ஜிதேந்திரனை அசோக பூபதியின் வசமாக்கி விடுங்கள். யதார்த்த ஜிதேந்திரன் இருப்பிடத்தைத் தேடிப் பிடியுங்கள். அதன் மேல் கூடுமானால் ராஜ்யத்தை மீண்டும் அடைந்த பிறகு இந்தப் பிரணயினியின் விடுதலைக்காகப் பிரயத்தனம் பண்ணுங்கள். எப்பொழுது நான் ஒரு முறை ஜிதேந்திரனென்று பெயர் தாங்கி மகததிபதியின் சமூகத்தை அடைந்தேனோ, அப்பொழுதே யதார்த்த ஜிதேந்திரனைத் தேடுவது

நின்று விட்டதென்றே நினைந்துக் கொள்ளுங்கள்".

இவ்விதமாக இவ் விஷயத்தைப் பற்றி இன்னும் அதிக ஆலோசனை நடந்தது. கடைசியில் இராணி இந்துமதிக்குத் தன் மகளின் தீர்மானத்தையே பெருந்துயரத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டிவந்தது. இப்பொழுது இந்தச் செயற்கைஜிதேந்திரனை எவ்விதமாய் அதிகாரிகள் கையில் பிடிபடும்படி செய்வதென்ற கேள்வி ஒன்றே எஞ்சி நின்றது. அதைக்குறித்துப் பிரணயினி பேசலானாள்—

இது விஷயத்தில் எனக்கு ஒரு சிறந்த சூழ்ச்சி தோன்றுகிறது. செட்டியார் உபகுப்தனுக்கு இப்பொழுது பண முடை உண்டாயிருக்கிறது. அவனைப் பிடித்துக்கொண்டு போக அவருடைய கடன்காரன்—அந்த லேவாதேவிக்காரன்—தயாராயிருக்கிறான். ஆகையால் செட்டியார், இதோ இவன் தான் ஜிதேந்திரன், இவனை பௌத்த சைனிகர் வசம் ஒப்பித்து விடுங்கள் என்று சொல்லிவிட்டால், செட்டியாருக்குப் பதினாயிரம் பொன் இனாமாகக் கிடைக்கும். அவருக்கும் கஷ்டம் தொலையும், நம்முடைய காரியமும் நிறைவேறிவிடும். இந்த சமயம் இக்கிரமத்திலிருந்து அவருக்குப் பணம் வருவித்து உதவுவது ஆகாத காரியம்."

பிரணயினி சொல்லிய இந்த உபாயம் இராணிக்குப் பிடித்தது. அவள் சியாமசுந்தரனைக் கொண்டு உபகுப்தனை அழைப்பித்து—"இந்தப் பிரேதாதன் யாரோ காக்கன் போக்கனல்ல. இவன் கலிங்க நாட்டின் இளவரசன்," என்று கூறினாள். அதைக் கேட்டதும் உபகுப்தனும் "இப்படிப்பட்ட சிறுவனையார் இந்தக் குடிசையில் பொன்னடி சாத்தியது என் பாக்கியமே," என்றுரைக்க, இராணியும்—"தாங்கள் இவனை பௌத்த சைனிகர் வசம் ஒப்பித்துவிட்டு வெகுமதி பெற்றுக்கொள்ளுங்கள்," என்று வற்புறுத்தினாள்.

இதைக் கேட்டதும் உபகுப்தன் செட்டியார் அத்யந்த துக்கமடைந்து, "தங்களுக்கு இன்னும் என் ஸ்வபாவம் தெரியவில்லை," என்றார். பிரணயினியும்—"நான் சுயமாகவே அவர்கள் கைவசமாகிவிட விரும்புகிறேன். தாங்கள் பிடித்துக் கொடுத்தால் தங்களுக்குற்றிருக்கும் இந்த சங்கடத்திலிருந்து தாங்களும் தப்பலாம்," என்று அவரிடம் வலிந்து சொல்லியும், பரமார்த்திகரான உபகுப்தனார் அதற்கு எள்ளளவும் இசையவில்லை. அவர் தாமே பத்தினியை அன்பு நிறைந்த விழிகளால் ஒருமுறை நோக்கிவிட்டு, அவ்விருந்தினரைப் பணிவுடன் வணங்கி, அப்படியே விரைந்தத்துடன் தம் கடன்காரனிடத்திலும் இராஜாங்க உத்தியோகஸ்தரிடத்திலும் தம்மை ஒப்படைத்துக்கொண்டார். அவருடைய பத்தினியாகிய குந்தசுந்தரி இதையெல்லாம் துக்கம் நிறைந்த மனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அதிகாரிகள் அவரைப் பிடித்துக் கொண்டு உடனே அங்கிருந்தே புறப்பட்டுச் சென்றனர்.

அதன் பிறகு உபகுப்தனது பத்தினியாகிய குந்தசுந்தரியைப் பிரணயினி நயந்து கேட்டுக் கொள்ள, அவள் வெகுமதியைப் பெறவேண்டுமென்ற பேராசையாலன்றி, பதிப்பிரேமையின் ஆட்பட்டு, பிரணயினியைப் பிடித்து பௌத்த பிக்ஷுக்களின் வசம் ஒப்பித்துவிடத் தயாராய் விட்டாள். பிரணயினி தன் தாயாரிடம் மிக்க அன்புடன் சொல்லிக்கொள்ளத் திரும்பினாள். சகோதரர்களை ததும்பும் அப் பெண்மணி தன் தாயாரிடத்தும் சியாமசுந்தரனிடத்தும் தான் போய்வருவதாய்ச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு, சகோதரனுடைய க்ஷேமத்தின் பொருட்டுத் தன் சரீரத்தை அர்ப்பணம் செய்யக் கங்கணங்கட்டி நின்றாள். சற்று நேரத்துக்குள் குந்தசுந்தரி நாணிய முகத்துடன் பௌத்த சைனிகர்களைக் கூட்டிக்கொண்டு அங்கே வந்தாள்.

பிரணயினியோ தன்னை ஒப்புக்கொடுக்க ஸர்வ சித்தமாய்க் காத்திருந்தாள். இராணி இந்துமதி சோகாகுலமான மனத்துடன் வீட்டின் நடுக்கட்டின் ஒருமூலையில் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தாள். ஜிதேந்திரவேடம் புனைந்திருந்த போலிபுருஷனைப் பார்த்தவுடனே அந்த பௌத்த சைனிகர்களுக்கு இதுதான் எதிர்பார்த்த ஜிதேந்திரன் என்ற விசுவாசம் உண்டாய்விட்டது. அது விஷயத்தில் அவர்களுக்கு எள்ளளவும் சந்தேகம் ஜனிக்கவில்லை. அப்பொழுதே குந்தசுந்தரியின் எதிரில் பதினாயிரம் பொன்நிறைந்த பைகள் வந்துவிழுந்தன. செயற்கை ஜிதேந்திரன் சைனிகர்களின் அதீனமாய் விட்டான். அவனைக் கூட்டிக்கொண்டு அவர்கள் அந்த க்ஷணமே பாடலிபுத்திரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

குந்தசுந்தரி இரண்டாயிரம் பொன் செலுத்திவிட்டுச் சற்று நேரத்திற்குள் தன் பதியை விடுவித்துக்கொண்டு வந்தாள்.

தனக்கு இந்தப் பேருபகாரம் புரிந்தது யாரென்று உபகுப்தனுக்குப் பெருந் தியக்கம் உண்டாயிற்று. வீட்டுக்கு வந்தவுடனே அங்கே யுவராஜன் இல்லையென்று அவருக்குத் தெரிந்தது. அதன்மேல் பெருஞ் சந்தேகமுற்று அவர் தம் பத்தினியை யுவராஜன் எங்கே என்று கேட்க குந்தசுந்தரி பாக்கியுள்ள எண்ணாயிரம் பொன் நிறைந்த பைகளைச் சுட்டிக்காட்டி நடந்த சங்கதிகளையெல்லாம் சொல்லிக் கேட்பித்தாள். செட்டியார் தமது வாழ்க்கையில் முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் கோபம் பொங்கும் பார்வையுடன் தம் பத்தினியை நோக்கி, அப் பணப்பைகளைத் தன் வன்மை முழுதுஞ் செலுத்தி ஒரே உதையாய் உதைத்துத் தள்ளினார்.

ஓவியம் அல்லது சித்திரம் வரைதல்

———[ı]———

(ஸ்ரீ க. அமுதன் எழுதியது)

"பாலபாரதி" என்னும் மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் பிறந்துவிட்டது. அதன் நோக்கங்களை "நமது பத்திரிகை" என்னும் தலை அங்கத்தின் கீழ் படித்தேன். ஒரு புதிய நடை, ஒரு புதிய நோக்கம், ஒரு புதிய வழி, ஒரு புதிய ஒளி, ஒரு புதிய 'உயிரின் இயக்கம்—நம் அளப்பரிய பெரும் பண்டைத் தமிழ் நாட்டில் உண்டாக லாம்—நிச்சயமாய் உண்டாகப் போகின்றன என்னும் நம்பிக்கை "பாலபாரதி"யின் முதல் இலக்கத்தைக் கண்டவுடன் என் உள்ளத்தில் பிறந்தது. புதிய ஒளி, புதிய வழி, புதிய நோக்கம், புதிய நடை, புதிய பாவனை முதலியவை காவியங்களிலும் கதைகளிலும், சிற்பங்களிலும், ஓவியங்களிலும், வாழ்க்கையின் பல போக்குகளிலும் ஒளிரும் புதுமைகளை தன்னகத்தடக் கொண்டு தரும் என்பது திண்ணம்; அதைப் புதிய ஒளி பண்டையாம் புது

மையினில்—அன்றன்றும் நவ நவ எழில்களுடன் இலங்கக்கூடிய பண்டையாம் தமிழகத்தாயிரில் எவ்வாறு பாயும்? தாமரை வானை நோக்கி நிமிர்ந்து விரிந்து பரிதியின் உயிரொளியைப் பருகுகின்றது; அது போலவே மனிதனும் தன் அகக் கமலத்தை மேனோக்கி விரியச் செய்தால் எண்ணிறந்த கிரணங்களையுடைய நித்தியமான ஞான சூரியனுடைய செறியும் உயிர்ச் செல்வ ஒளி அதன்மீதும் உள்ளும் பாவிப்பாயும். தமிழகக் கமலம் அவ்வாறு செய்ய முயல்கிறதா? என் கருத்துப்படி இன்ன முயலவில்லை. என்? ஒரு நாட்டோரினுடைய உயிரின் வல்லின்னொலி இலக்கியம், உயிரின் வல்லின்னுருவம் ஓவியம். இவ் விரண்டினும்— இலக்கியத்தில் கனிசென்கிற இன்னிசையை நான் இன்னமும் கேட்கவில்லை; ஓவியத்தில, ஓவியமென்கிற சப்தமே தமிழகத்தில் தற்போது இல்லாத பொழுது அதைப் பற்றி என்ன சொல்வது? அகவொலியாகிய இலக்கியத்திலும், அகம் உருப்படவெளியாகும் ஓவியத்திலும் புதுமைகள் தோன்றிய காலத்து, நாமகத்தில் புத்தொளி பாய்ந்துவிட்டதென ஐயமறக் கூறலாம். இலக்கியத்தில் பல வகைப்பாண்டித்தியமும், ஓவியத்தில் இரவிவர்மனை யொத்த திறனும் புத்தொளியின் அறிகுறிகளாகமாட்டா. நான் இங்கு எடுத்துச் சொல்ல வந்தது ஓவியமானதால் இரவிவர்மன் திறன் எவ்வாறு புத்தொளியின் சின்னமல்ல வென்பதையும், ஓவியத்தின் இலட்சியம் அல்லது ஆதர்சம் என்ன என்பதையும் பற்றி இவ்வுரையில் எனக்குத் தெரிந்தவரை கோடி காட்டிவிடுவதாக இருக்கிறேன்.

படம் பிடித்தல் அல்லது "போடோகிராப்" எடுத்தலுக்கும் ஓவியம் வரைதற்கும் உள்ள வித்தியாசம் என்ன? வெளிப் பொருள் எதை வேண்டுமாயினும் படம் பிடித்துவிடலாம்; ஆனால் வெளிப் பொருள்களின் உள்ளுணர்ச்சிகளை ஓவியன் ஒருவனேயே வரைந்து காட்டமுடியும். 'ஒளி சிகரங்களைப் படம் பிடிக்கும்' கருவியால் மூர்த்தியும் பிடித்துக் காட்ட முடியாது. வெளிப்புலனாகும் ஆகவுலகின் சாயை அல்லது நிழல் என்பது ரிஷிகள் கண்டறிந்து நுகர்ந்த உண்மை. ஒவ்வொரு வெளிப் பொருளும் நாமறிந்த அல்லது அறியாத அல்லது பாதி அறிந்த ஏதோ ஒரு அகவியற் பொருளைக் கூவி அல்லது சொல்லி நிற்கிறது. பல் வகைப்பட்ட வெளிப் பொருள்கள் எண்ணிறந்த கோடி வகைகளில் இசைந்து நிற்கும் மொழிகளை கல்லிற் கட்டி நிறுத்துபவன் சிற்பி; கோட்டால் வரைந்து காட்டுபவன் ஓவியன்; சொல்லால் முழக்கிக் காட்டுபவன் கவி. இவர்களில் ஒவ்வொருவரும் எவ்வளவு தூரத்திற்குத் தங்கள் தங்கள் பல் வித திறனால் அனந்தகோடி வகைகளில ஆழ்வமுதமாய்த் திகழ்ந்து நிற்கும் அந்தரியாமியை அந்தப் பொருள்களாகிய கல்லிலும், இலையிலும் ஒலியிலும் அனந்தகோடி வகைகளிற் பிடித்துக் கட்டிக் காண்பிக்கிறார்களோ அவ்வளவு தூரத்திற்கு அவர்கள் தங்கள் நாட்டின் உணர்வில் நிலைத்து விடுவார்கள். இதைச் செய்ய முதலாக இறைவன் அருள் வேண்டும்; பிறகு அதன் பயனாக அகப்பார்வையை அடைதல் வேண்டும். இவ்விரண்டையுங் கொண்டு, சிற்பி உளியினாலும், ஓவியன் தூரிகையினாலும் இலக்கியன் எழுத்தாணியினாலும் தங்கள் தங்களுக்கு, வெளிப்புலனாலோ அல்லது உள்ளுணர்வாலோ அகப்பார்வைக்கெட்டிய காட்சியை செதுக்கியும், வரைந்தும், எழுதியும் முறையே காட்டுகிறார்கள். சிற்பமும், ஓவியமும், சொல்லும் எவ்வளவிற்கெவ்வளவு ஆத்மானுபவ இன்பத்தால் தூண்டப்பட்டு நடைபெறுகின்றனவோ அவ்வளவிற்கவ்வளவு அவைகள் உன்னத சிறப்பைப் பெறும். சிறப்பு, புகழை உடனே கூட்டிக் கொடுக்குமென்று சொல்லுதல் இயலாது. கலைகள் இன்பக் கேளியினின்றுதித்

தவை; அபலார் இன்பத்தை எதிர் பார்த்து உயர்ந்த சிறந்த செய்கைகள் ஒருக்காலும் செய்யப்படுவனவல்ல. புற உலகை மறந்து தன்னிலாழ்ந்த தன்னின்பக்கேளித் தாண்டவத்தில் பிறந்தவைகளே சிறந்த கலைகள். பிற்பாடே இவைகள் சிறிது சிறிதாக மற்றோரால் களித்து ருசிக்கப் படுகின்றன; ஆத்மானுபவ ஆனந்தத்திலுதித்த பெரும் பொருள்களுக்கு எவ்விதமாயாவது வடிவங்களை வலியுறத் தூண்டி தங்களிடமிருந்து வழியெழும் பேரின்பத்தை ஏற்கச் செய்யும் சக்தி உண்டு.

மேற்காட்டிய நோக்கத்தை ஒத்துக்கொண்ட பிறகு, உருவங்களனைவை ரூபாரூபமாகிய ஆத்மாவின் சொற்களென்பது நன்கு விளங்கும். இங்கு "சொல்" என்பதற்கு விளக்கம் அல்லது வாய்மையெனப் பொருள் கொண்டுள்ளேன். ஆத்மாவின் அனந்த கோடியான மௌன மொழிகள் எவ்வாறிந்து உருவங்களால் ஓவியச் சிலைகளிலும் சிற்பக் கற்களிலும் அமைப்பட்டு வெளியாகின்றனவோ அவ்வளவிற்கே உருவங்களுக்கு மகிமையுண்டு. இலக்கியங்களில் கலையற்ற பொருளும், பொருளற்ற சொல்லும், சொல் மாண்பற்ற நடையும் எவ்வாறுண்டோ அவ்வாறே ஓவியங்களிலும் சிற்பங்களிலும் பொருள் சொல் நடை முதலியன அமைவு, எழில், மாண்பு அற்று காணப்படுவது சகஜமே.

உடலில் கட்டழகு, உயிரில் ஓட்டத்தின் அழகு, ஆத்மாவில் ஒளியழகு—என அழகை மூவகையாகப் பிரிக்கலாம். இவற்றில் முதற் சொன்ன எழிலை ஓவியன் எளிதில் சமைப்பான்; ஆனால் பின் சொல்லப்பட்ட இரண்டும் செயற்கைச் செம்மையும், கையில் திறனும், உள்ளத்தில் பார்வையுமுள்ள ஓவியன் ஒருவனேயே செய்து காட்டமுடியும். மேற்சொல்லிய, உருவங்களின் மூவகை அழகுகளையும் சிற்றுக் கோர்களினாலும், பரப்பினாலும், கனத்தினாலும் செய்து காட்ட வல்லவர்கள் ஓவியர்கள், சிற்பர்கள். இவர்களிற் சிறந்தோர் செய்யும் வேலை மிக்க அற்புதமானது. கீழ் நாட்டோராகிய இந்தியர்களும் சீனர்களும், ஜப்பானியர்களும் தங்கள் தூரிகை அல்லது ஓவியக் குச்சுப்பிடித்த கைவிச்சினால் அனந்த பொருளின் அனந்த கலைகளை எழிலுடனும், ஒளியுடனும், பொற்புடனும், பல ஒப்பினைகளுடனும், வலியுறச் செறியும் பொலிவுகளுடனும் வளர்ந்து வளர்ந்து ஆனந்தத்தை அள்ளி விளக்கும் கோடுகளால் வரைந்து காட்ட வல்லார்கள். சீனர்களும் ஜப்பானியர்களும் கோடுகளால் கட்டழகுடனமைப் பெற்ற உயிரின் இயங்க வழகையே காட்டுகிறார்கள். அதற்கப்புறம் அவர்களால் செல்ல இயலவில்லை. ஆனால் பாரத நாட்டு ஓவியர்கள் ஆத்ம ஒளி அழகை கோடுகளினால் மிகவும் அழகாய் அமைத்திருக்கிறார்கள்—அஜந்தாக் குகையில் காணப்படும் ஓவியங்கள் இதற்குச் சான்று. கனத்தில் உடல் அழகைப் பெரிதும் செம்மையுடன் காட்டியவர்கள் கிரேக்க நாட்டுப் பண்டைச் சிற்பிகள். இத்தாலியாவில் மைக்கல் ஏஞ்சிலோ போன்ற சிற்பர்கள் தாங்கள் செதுக்கிய சிற்பங்களில் உயிரின் இயல்பழகை நன்கு வெளிப்படுத்தியுள்ளார்கள். ஆயினும் ஆத்மாவின் இயலொளிப் பண்பிறங்களை அளவு மீறிக் கல்லில் செதுக்கியும், செம்பில் வார்த்தும், மண்ணில் கட்டியும் வைத்தவர்கள் பாரதவர்ஷத்துத் தென்னாட்டோராகிய தமிழர்களே, இவை துறையில் சிறந்.

மேனாட்டாராகிய ஐரோப்பியர்கள்— முக்கியமாக இத்தாலியர்களும் டச்சுக்காரர்களும் —ஆங்கில நாட்டோர் ஓவியத்திலும் சிற்பத்திலும் ஒரு விதமாவது கடக்கிறவர்களல்ல, தனியில் அரசாய ருசர்கள்— பாரின் ஓவியத்தை அமைக்க மிக வல்லவர்கள். இவ்விடத்தும் இவர்களால் இருவகை ஆத்ம

திறமையைக் காட்டித்தர முடியவில்லை. மேற் சொல்லியவர்கள் பல்வகைப்பட்ட இயற்கை யழகை பரப்பில் பல நிறங்களில் வரைதலும் தனிப் பெயர் வழிகளின் உருவங்களை அவர்களின் குணவியல்பமைய நன்கு வரைவதிலும் மிக்க திறன் பெற்றிருந்தார்கள். உதாரணமாக, வேனிஸ் நகரத்தில் கி. பி. பதினாறாவது நூற்றாண்டில் வாழ்ந்த, டிஷியனின் மாணவனாகிய டின்டோ ரெட்டோ என்னும் ஓவியக்காரன் வரைந்த இரண்டொரு படங்களைப் பார்த்தில் நான் சொல்லுவது புலனாகும்: அவன் எழுதிய "மால்டா வீரன்", "பால்வீத மண்டலம்" முதலிய படங்களைப் பார்வையிடவும். பொருள்கள், இயற்கை, மனிதன், புராண இதிகாச வீரர்கள், சாதுக்கள் முதலியவைகளை குணவிசேஷங்களுடனும், குணபேதங்களுடன், இயற்கைநெறி' செயற்கைநெறி முதலியவற்றுடனும் ஓவியச் சீலைகளில் பரப்பி அமைப்பதில் மேற்சொல்லிய மேனாட்டோர்கள் வெகு சாமர்த்தியவான்கள். ப்ராஞ்சிஸ்கோ பொட்டி செல்லி, லியோனார்டோ டாவின்சி, ரெம்பிராண்ட், ஹால்ஸ், வெலாஸ்கே முதலானோர் மேனாட்டு ஐரோப்பாவில் மிகப் பெயர் வாய்ந்தவர்கள். இவர்கள் இவர்களின் ஓவியங்களில் பொருள்களின் நெருக்கம் தூரம், நிற வேறுபாடுகள், அமைப்பு வேற்றுமைகள் முதலிய பலவற்றை மிக்க அதிசயிக்கத்தக்க சாதுர்யத்துடனும் கௌசலங்களுடனும் பிரயோகஞ் செய்திருக்கிறார்கள். இவர்கள் ஐரோப்பாவில் ஓவிய மகான்களாய் இருந்தும்;

இவர்களுடைய ஓவியங்களும் சிற்பங்களும் தற்கால ஐரோப்பியர்களுக்குப் போதுமான இன்பத்தைத் தரமாட்டோமென்கின்றன. உடலின் கட்டழகும் பிடித்த இன்பத்தைத் தரமாட்டாதவைகள். கொஞ்சகாலம் ஆனவுடன், மேற் சொல்லிய அழகுகள் தெவிட்டலைத் தரும்.

ஆகையினால் இன்று ஐரோப்பாவில் புதிய தோரணையில் ஓவியம் தோன்ற முயல்கின்றது — தற்சமயம் ஐரோப்பிய ஓவிய முறையில் இரண்டு வகைகள் தோன்றியுள்ளன — Cubism and Futurism இவை இரண்டையும் என்னால் இரசிக்கவும் முடியவில்லை. நவீன ஐரோப்பா வளர்த்த ஓவியத்திற்கும், சிற்பத்திற்கும், இலக்கியத்திற்கும் இந்தியாவின் புறமாக அவைகள் பின்கையுடன் முகத்தைத் திருப்பி நிற்கின்றது. பாரத நாட்டுப் பண்டை ஓவியத்தின் தொடர்பாக, சென்ற சில ஆண்டுகளாக வங்க நாட்டில் ஓவியத்திற் புத்துயிர் தோன்றி ஒளியுடன் பெருகி வெடித்திருக்கிறது. இது எத்தன்மையது என்று சொல்லுமிடத்து, இரவிவர்மாவினுடைய ஓவியம் எவ்வகைத்தானது என்பதையும் சொல்லுவதாக இருக்கிறேன்.

புராதன ஓவியம், பௌத்த காலத்து ஓவியம், இராஜபுதனத்து ஓவியம், மொகலாய ஓவியம் முதலியன நம் பாரத நாட்டில் இன்றும் காணப்படுகின்றன. மேற்சொல்லிய ஒவ்வொரு ஓவியத்தின் வரம்பைப் ([illegible]) பொறுத்து ஒவ்வொன்றிலும் தொடக்கம், வளர்ச்சி, தேய்வு, இறுதி என்பன எவ்வாறு இயங்கின என்பதானது ஒவ்வொன்றின் பல படங்களை ஆராய்ந்து பொழுது நன்கு தெரியவருகின்றன. இவைகளைப் பற்றிப் பின்னொரு சமயம் எழுதுவதாக இருக்கிறேன். விழிப்படைந்த வங்க நாட்டில் சிலர் மேற்சொல்லிய ஓவிய வகைகளின் வாய்மைகளை நன்கு படித்தறிந்து தங்கள் விழிப்புற்ற உயிரின் இயல்புக்கேற்றவாறு நாட்டில் ஓவியத்தை புத்தொளியின் எழிலுடன் சமைக்கத் தொடங்கினார்கள். இந்த ஓவியக் கூட்டத்தாரின் இயக்கத்திற்கு உயிராக இருந்து வருபவர் ஸ்ரீமான் அவனீந்திரநாத தாகூர் எனப்படுபவர். ஓவியம் வரைவதில் வல்லவன்; மிகப் புகழ் வாய்ந்தவர்

39

மிகவும் போற்றப்படுபவர். இவரிடம் பாடங் கற்று, நேர்த்தியிலும், சிறப்பிலும், திறனிலும் இவருக்கு இப்பொழுது சற்றேறக்குறைய ஈடாக விளங்குபவர் நந்தலால்வஸு எனப்படுவோர். இவருடன் சேர்ந்த இன்னும் சிலரும் ஓவியத்தின் வகைகளின் பல துறைகளில் பெயர் வாய்ந்தவர்கள். ஐரோப்பாவிலும் மேற்சொல்லிய இருவர்களின் சிறப்புப் பெருமையால் இவர்கள் முடிசூட்டப்பட்டிருக்கிறார்கள். இவர்கட்கு எதனால் சிறப்பு என்பதைச் சற்று கவனிப்போம்.

இரவிவர்மா வரைந்த எந்தப் படத்தை எடுத்துக் கொண்டபோதிலும் — சரஸ்வதி, லக்ஷ்மி, சிவபெருமான், இரமை, மேனகை, சகுந்தலை முதலிய எதுவாயினுஞ்சரி — படத்தைப் பார்த்தவுடனே அவைகளினின்றெழும் உயிரற்ற ஒரு மனிதத் தன்மை நமக்குப் புலனாகின்றது. உதாரணமாக "சரஸ்வதியை" எடுத்துக் கொள்வோம். ஜாஸ்தியாகவுள்ள இரண்டு கைகளும், அவளை எப்படி ஒரு தாமரைப்பூ தாங்கி நிற்கிறதென்பதையும் சற்று நீக்குவோமாயின் அப்படமானது ஒப்பனைகளணிந்த, சதை மணம் வீசும் ஒரு நங்கையின் "போடோ" படம் போல யாருக்கும் தோற்றுமென்பதில் ஐயமேயில்லை. ஜாஸ்தியாகவுள்ள இரண்டு கைகளும் தாங்க முடியாதென விருக்கும் தாமரையும் அடியோடு பொருந்தாது காணப்படுகின்றன. கையில் வீணையும், சுவடியும் ஜபமாலையும் இருந்தாலும் அப்படத்திற்கு சரஸ்வதியின் வாய்மை தோன்றிவிடாது. படம் சொல்லமாட்டாத அருவருப்பைத் தருகிறது. நம் புராணங்கள் கூறிய பூமகளுக்கும் இரவிவர்மன் வரைந்த சரஸ்வதிக்கும் உள்ள பேதா பேதங்களை என்னென்றுரைப்பது? ஒன்று ஆக்கப் பொருள், மற்றது இகழ்ச் சொல்லுக்கும் எற்காத பொருள். கடைசியாக ஒரே பேச்சு இரவிவர்மனால் நமது அகச்சுவையை எழுப்பி அதற்கேற்ற உணர்வைக் கொடுக்க முடியவில்லை. இரவிவர்மன் எழுதிய எந்தப் படத்திலும் இந்த மூலக்குறை காணப்படுகின்றது. இரவிவர்மன் மேனாட்டோரின் படமெழுதும் "ஸ்டைல்"ப் பின் பற்றினன்; இதனால் ஐரோப்பியருடைய சிறப்பையும் பெறவில்லை, ஓவியத்தில் ஒரு வழியிலும் சிறப்புறாது போயினன். இவனுக்கு நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பெரும் புகழ், இவனுடைய ஓவியச் சிறப்பால் உண்டானதல்ல — நாட்டில் ஓவியம் காணக் கிடைப்பதற்கு அரிதாயிருந்ததாலும், நம்முடைய அகப்பார்வையில் உறக்கமும் மாசும் படிந்திருப்பதாலுமே இவனுக்குப் பெரும் புகழ் தோன்றிற்று. இவன் படைத்த அனைத்திலும் அடியோடு பாரத நாட்டுத் தெய்வதம், பாரத நாட்டு பிரதிமை முதலியன இல்லவே இல்லை — இவன் எழுதிய படங்களின் பெயர்கள் மட்டிலும் நம் நாட்டுப் பெயர்கள்!

இதற்கு மாறாக, அஜந்தாக் குகைச் சுவர் ஓவியங்களையும், எல்லோராவின் குகைப் பெருமைகளையும் மகா பலிபுரத்துக் கற் செதுக்கல்களையும், தென் நாட்டுத் தமிழ்க் கோயில்களையும், செப்பு வெங்கலம் முதலிய உலோகங்களில் வார்த்த விக்கிரகங்களையும், சென்னைக் காட்சி அரங்கில் காணப்படும் நடராஜ விக்கிரகத்தையும், பாரத நாட்டில் அங்கு மிங்கு மெங்குமாகக் காணப்படும் "தியான புத்த" கற் சிலைகளையும், இராஜபுதனத்து ஓவியங்களையும், மொகலாயர் காலத்துச் சின்னஞ்சிறு சித்திரம் வரைபவர்களின் படத்தையும் பார்க்குங் காலத்து பாரத நாட்டு பிரதிமை பிரேரணை, தெய்வதம் முதலிய என்னவென்றும் இரவிவர்மனுடைய இழி சொல்லிற்குக் கூட இணங்காத பாட்டுச் சுவைகள் என்னவென்றும் தெள்ளெனப் புலப்படும். தற்காலத்தில் வங்க நாட்டில் தோன்றியுள்ள ஓவியமானது கதியில்

ஓட்டம் மின்னேறுப்பது, நம்பழம் பெருமாதனாட்டுப் பிரதிமையினுடைய உயிர்த் தெழுந்த தொடர்ச்சியே யாம். ஒவ்வொரு விடத்திலும் அவ்வவ்விடத்தின் இயல்குகளுக் கேற்றவாறு அனேகம் வகைகளில் ஓவியமானது உயிர்த் தெழுந்து இனி சோபிக்கும்; அதாவது தமிழகத் தொரு மாதிரியும், தெலுங்கு தேசத்தில் இன்னொரு விதமாயும், கூர்ஜரத்தில் மற்றோர் விதமாகவும் பாரத வர்ஷத்தினுடைய அந்தியாமியின் பிரதிமையானது பல துறைகளில் பலவாறு திகழும். ஏனைய நாடுகள் வங்கத்தினின்று பிரதி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது தவறு. இன்று வங்கம் வழி காட்டியாய் சிறப்பதை நன்றியுடன் ஒத்துக்கொள்ள வேண்டும். சிறந்த,

இனி நான் மேற்குறிப்பிட விரும்பும் வங்க நாட்டின் புதிய ஓவியச் சிறப்பை நேயர்கள் சித்திரங்களுடன் படித்தால்தான் தெளிவாகு மென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். கல்கத்தாவிலுள்ள "மாடர்ன் ரெவ்யூ'. ஆசிரியர்கள் இதுவரை பத்துப் பதினைந்து புதிய ஓவியத் தொகுதிகளை புத்தக உருவமாக அடித்து அச்சிட்டுள்ளார்கள்; இதையும், ஸ்ரீயுத அர்த்தேந்திர குமாரகங்குலியென்பவர் வருஷம் நான்கு முறையாக வெளியிடும் "ரூபம்" என்னும் சித்திர சகிதமான ஓவியப் பத்திரிகையின் பிரதிகளையும் நேயர்கள் அருகில் வைத்துக்கொண்டு இந்தக் கட்டுரையை வாசிப்பார்களாயின் எனது முயற்சி ஒருவாறு பயனை அளிக்கும். சோமாதேவி குருகுலத்திற்கு மேற் சொன்னவைகள் சிறந்த அணிகலன்களாக வேண்டுமென்பது—அங்கு இல்லாவிடின்—எனது உள்ளார்ந்த பெரும் கோரிக்கை.

ஸ்ரீயுத அவனீந்திரநாததாகூர் வரைந்த "கஞ்சி நிருத்தம்" என்னும் படமானது முதன் முதலாக நாலைந்து வருஷங்களுக்கு முன்னே எனது அகக் கண்ணைத் திறந்து ஓவியத்தின் மர்மமாகத் திரும் பிற்று. இப் படத்தில் கார்காலத்து நாட்டியத்தையும் கானத்தையும் உருவாக்கி அவனீந்திரர் வர்ணித்திருக்கிறார். இப் படத்தின் மூலமாக நாட்டிய பாவத்தையும், மௌனச் சங்கீதவின் மூலமான கானத்தின் இன்னிசையையும், சிற வேறு பாடுகளின் வாயிலாக கார்காலச் சிறப்பையும் அவனீந்திரர் அழகுமாக எடுத்துக்காட்டியிருக்கிறார். படத்தை ஒரு தனி அல்லது பரியாயமாக வைத்துக்கொண்டு பொருள்களின் பாவங்களை ஒப்பற்ற அழகுடன் உருப்படுத்திக் காட்டுவதில் இவருக்கு இவரே நிகர்—அஜந்தா குகையின் சுவர்களை சித்தரித்தவர்கள் நீங்கலாக. M.V. துரந்தர் என்னும் மராட்டிய ஓவியன் வரைந்த "நாட்டியக்கன்னி" என்னும் படத்தையும், அவனீந்திரர் வரைந்துள்ள "மஹாகாலக் கோயிலின் தேவதாஸி" என்னும் படத்தையும் ஒத்திட்டுவோமாயின் பின் சொல்லியவரின் பெருஞ் சிறப்பு விளங்கும். முதற் சொல்லியவர், ஒரு சாதாரணமாக நம் நாட்டில் இன்று நடமாடி வரும் ஒரு மகமதிய நாட்டியக் கன்னிகையை பொருள் படாத வ்ருத்தி வாக்கியம் போலவும், தெளிவில்லாத அசிங்கம் போலவும் வரைந்திருக்கிறார். இதற்கு நேர்மாறாக அவனீந்திரர் வரைந்துள்ள "தேவதாஸிக்கு" துரந்தரின் நாட்டியக் கன்னியைப்போல் அவ்வளவு ஆபரணங்களில்லை; ஆயினும் இவருடைய படம் பெரும் அர்த்தமுள்ள கருத்துகள், உணர்ச்சிகள், உணர்த்தற்கரிய பாவங்கள் முதலியவைகளின் "கொள்கலமாக" இலங்குகிறது. எங்கோ எட்டமுடியாத தூரத்தில் உள்ள எதிர்கால உள்ளுறையில் மறைந்தொளிரும் இறைவனுக்கு இத் "தேவதாஸி" யின் சிறந்த கீதங்கள், இறந்தகாலத் திட்டத்தினைச் சேவையின் மூலமாக ஊடுருவிப் பார்த்து வந்தனை வழி பாடு செய்கின்றன. இவள் நமதகத்தில் ஒரு விதமான நினைக்கும் இச்சையும் எழுப்புகிறதில்லை. இவள் உடலினின்று ஒரு சுத்தமான எழில் வெளிப்படுகிறதைக் காண்கிறோம். உயிரின்

இயக்க அழகுகளினின்று தோன்றியெழுகின்றது. சந்திய சிறப்புகளை நேயர்களே இ.பி. தாகூர் ஆண்டு ஜனவரி மாதத்து வெளி வந்த ரூபத்தில் கண்டு களிக்கட்டும்.

ஸ்ரீயுத நந்தலால் வசு என்பவர் சிவ பெருமானை பிரதானக் கதைகளுக்கேற்க பலவிதத்தில் வரைந்து கீர்த்தி பெற்றிருக்கிறார். இவருடைய சிவபெருமானைக் காண்பி தான் பல நடைகளில் தியானத்தில் ஆழ்ந்ததாகண்டு. இவர் ஓவியக் கூர்கோல் கொண்டு வரிகள் வரைந்து அனந்ததை அழைத்துக் காட்டிக் களிக்க வல்லார். சித்திரத்தால் சிவபெருமானின் சிறப்புகளை இவ்வாறு பாரத நாட்டில் இவ்வளவு கௌரவத்துடன் எழுதிக் காட்டினதில் ஒப்பாரும் மிக்காருமில்லை. இவர் எழுதிய படங்களில் "பார்வதி உயிர் விட்ட காலத்து சிவபெருமான் வருத்தியது", "சிவபெருமான் கஜாசுரனை அழித்தது", "நடராஜ தாண்டவம்", "மௌன கவி", "ஸதி", "சமாதி யோகமாக", "சபரி ஸ்ரீராமபிரான் வருகைக்காக காத்திருத்தல்" முதலியவைகளைப் பார்வையிட்டால் இவருடைய பெருமையும் சிறப்பும் இன்ன தென அறியும். உதாரணமாக, நந்தலாலும் சிவனின் தாண்டவத்தைப் பொழுது அவனுடைய சிறப்புகள் எவருடைய மனதையும் கொள்ளை கொள்கின்றன. அப்படம் முழுமையிலும் இலங்கும் பொலிவையும், பொற்றிடைப் பொலிவையும், அழைக்கும் கூட்டங்களின் இன்னெளிச் செறிவுகளையும், தன்னேரில்லாத காரண காரியத் தொடர்ச்சியுடன் பொருளமைய பொருத்திய மெல்லிய வரிகளும், தயக்கமின்றி வளர்ந்து செல்லும் இனிய நிறங்களையும் யாரால் வருணிக்க முடியும்?—ஆசிரியர்கள் படைத்த ஆதிசேஷனுருவாலும் முடியும். விண்மதியின் கிரீடத்தின்கீழ் விரும்பட்டிட்ட பாசி இலங்குகிறது, அழுவற்ற அமைதியுடன் அனந்த வரிசையை கண்களின் இமைக்கொடு பொருந்திய இரண்டு மெல்லிய வரிகளுடைய பிடித்துக் கட்டிக் காட்டக் கூடியவரும், அவ்விதம் காட்டியவரும் நந்தலால்வசு ஒருவரே யாம். இரவிவர்மன் வரைந்த சிவனை என்னவென்று மதிப்பது? இது பற்றியே "பாரத வர்ஷத்தின் புனர் ஜன்மம்" என்னும் உரையில் ஸ்ரீ அரவிந்தர் "the preposterous Ravi Varma interlude was doomed to sterility by its absurdly barren incompetence" என்று எழுதியுள்ளார்.

ஒவ்வொரு படமாக அதனதன் சிறப்புகளை எழுதிக் கொண்டே போவதாக இருந்தால், உரைக்கு முடிவு ஏற்படாதெனக் கருதி இக் கட்டுரையை இத்துடன் முடிக்கிறேன். இவ்வாறு யினின்று நேயர்கள் ஓவியத்தின் நோக்கம் அல்லது அர்த்தம் என்னவென்பதை அறிய வேண்டுமென்பதே என் முக்கிய கருத்து.

புராதன காலத்து வித்தியார்த்திகள்

——[o]——

இந்தியாவில் பூர்வ காலத்தில் இந்திய மாணவர்கள் குருகுலத்தில் எவ்வாறு வசித்துக் கல்வி கற்பிக்கப் பெற்று வந்தார்கள் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இந்தியாவில் பூர்வத்தில் மனிதர்கள், பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கிற ஆசிரமங்களை வகித்து முறைபெற அனுஷ்டானத்திற் கொண்டு வந்திருந்தார்கள். இக்காலத்தில் இவ்வனுஷ்டானம் பெயர் மாத்திரையிலிருந்து வருகிறது.

தழைகளினாலும், மரக் கொம்புகளினாலும், மரம் அடர்ந்த தோப்புகளிலும், காடுகளிலும் வீடுகள் செய்து கொண்டு பெரியவர்கள் முற்காலத்தில் வசிப்பதையே ஆசிரமம் என்று கூறிவந்தார்கள். ஆசிரமம் என்றதற்கு உண்மையான பொருள் வீடு அல்லது குடிசையென்று சொல்வது பொருத்தமானதாகாது. 'ஆசிரமம்' என்ற வடமொழிப் பதம் மிக்க சிரமமேற் கொண்டுழைப்பது என்று பொருள் படுகிறது. ஒவ்வொருவரும் தத்தம் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு ஒருவழியில் கஷ்டப்பட்டுழைப்பதற்கே, ஆசிரமம் என்று சொல்லப் பெறுவதாகும்.

மனிதன், கர்மம், யோகம், ஞானம் என்ற மூன்று வகைகளில் கஷ்டப்பட்டுழைக்கிறான். ஒருவன் செய்யும் கர்மமே தர்மமாகும். மற்றொரு விதத்தில் கவனிப் போமானால் தர்மமே கர்மமாகும். மனிதன் தன் சக்தியை விருத்தி பண்ணுவதற்கு யோகம் செய்கிறான். சந்நியாச ஆசிரமம் மேற்கொண்டு மனிதன் தன் ஞானத்தைப் பெருக்கிக் கொள்ளுகிறான். ஆகவே, கர்மம், தர்மம், ஞானம் என்னும் மூன்றினையும் பெற மனிதன் பிரமசரிய ஆசிரமத்தில் சிரமமேற்கொண்டுழைக்க வேண்டியவனாகின்றான்.

பிரமசரியாசிரமம்.

பிரமசரியம் என்னும் பதத்திலுள்ள பிரமம் என்னும் பதம் தத்துவம் என்று பொருள்படும். தத்துவம், உண்மை சத்தியம் என்னும் சொற்களெல்லாம், ஒரே அர்த்தத்தைக் கொடுக்கும். உண்மையான தத்துவப் பொருளையறிய பிரமசரியாசிரமமே அடிப்படையானதாகும். பூர்வ காலத்து மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரே உண்மைப் பொருளையே அறிய விரும்பிக் குருகுலத்திற் புகுந்து, ஆசாரிய சுசுரூஷை மேற்கொண்டு ஒரே பொருளை அறிந்து கொள்வதிற் பெரிதும் முயன்றார்கள். தற்போதைய படிப்பு இப்படிப்பட்டதன்று. வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்டவை என்பது தெளிவாயிருக்கிறது. ஆகையால் பூர்வ குருகுலவாசப் படிப்புக்கும் இக் காலத்துப் படிப்புக்கும் இடையில் ரொம்ப வித்தியாசங்களிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. முற்காலத்தில் குருகுலத்தில் ஆசாரியர்களாக வந்த மஹான்கள் இயற்கையிற் சிறந்த உபாத்தியாயர்களாகவே இருந்தார்கள் என்னத் தடையில்லை. ஒவ்வொரு உபாத்தியாயரும் தாய் கற்பிப்பதுபோல் நிதானமாய் நடந்து காட்டுவார்கள். தற்காலத்து உபாத்தியாயர்கள் தமக்கேயன்றிப் பிறருக்கே உபாத்தியார்களாவார்கள். பூர்வ காலத்து மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தினை ஐயந்திரிபற அறிவதிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்திப் பயன் பெற்று வந்தார்களென்பதற்கு உபநிஷத்துவாக்கியானங்கள் பலவிருக்கின்றன. அவற்றில் இரண்டொன்றை விளக்குவாம்:

உபகோசலனுபாக்கியானம்

உபநிஷத் காலத்தில், உபகோசலன் என்னும் அந்தணனொருவன் கல்வி கற்கவேண்டி, ஸத்தியகாமன் என்னும் ஆசாரியனிடம் சென்றான். ஆத்ம ஸ்வரூபத்தின் தன்மை ஒன்றினை மட்டும் அறிவதற்கே இவ்வந்தணன் ஆசாரியனிடம் அணுகி, அதனை அறிய நெடுங்காலம் காத்திருந்தான். நெடு வருஷ காலமளவும் காத்திருந்த சிஷ்யனுக்கு, அதன் தன்மையைப்பற்றி

சத்தியகாமன் சொல்லவேயில்லை. இருந்தும் சிஷ்யன் குரு சுசுரூஷையில் கொஞ்சமேனும் குறைவில்லாமல் பக்தியுடன் நடந்து வந்தான். பொறுமையுடன் காத்திருந்த சிஷ்யன், சத்தியகாமன், பொருள் சம்பாதிப்பதற்காக ஒரு சமயம் வெளியே செல்லப் புறப்பட்ட போது, ஆசாரியனையணுகி, தான் அறிய வந்த தத்துவப் பொருளைப் பற்றி விசாரித்ததும் அவர் பதில் சொல்லாமல் வெளியே போய்விட்டார். இதன் மேல், உபகோசலன் வருத்தங் கொள்ளவில்லை. இதைக்கண்ட ஆசாரியபத்தினி, சிஷ்யனின் மீது அநுதாபங்கொண்டு தன்னுடைய புருஷனுக்குச் சிஷ்யனைப்பற்றிச் சிபார்சு செய்ததும், அவர் அவ்வம்மை கூறியதையும் கேட்காமல் வெளியே போயினர். மாணவனும் அக்கினியின் சந்நிதானத்தில் விசாரமுற்று உட்கார்ந்திருக்கையில், கம்பிரம்மா, கம்பிரம்மா; பிராணோ பிரம்மா என்ற மூன்று வாக்கியங்கள் எழுந்தன. பிராணனே ஆத்மா, ஆகாசமே ஆத்மா என்றவை முதல் இரண்டு வாக்கியங்களின் பொருளாகும். மூன்றாவது வாக்கியமாக அசரீரியின் வாக்கிலிருந்து எழுந்த கம்பிரம்மா என்றதற்குச் சிஷ்யனுக்குப் பொருள் சிறிதும் விளங்கவில்லை. இந்த வாக்கியத்தின் பொருளைக் கூட அசரீரி பின் வருமாறு கூறியது: "ஆகாசமே ஆநந்தம்; ஆநந்தமே ஆகாசம்" இது நிகழ்ந்த பிறகு பகல் ஒருமணி சுமாருக்கு வெளியே போயிருந்த ஆசாரியர் மீண்டும் ஆசிரமம் வந்து சேர்ந்தார். சிஷ்யனைக் கண்டார். அவன் முகவிலாச முற்றிருப்பதை உற்று நோக்கினார். அவன் முகத்தில் ஸத்தியம் விளங்கியிருப்பதைக் கண்டு, அதற்குக் காரணம் என் எனத் தன் சிஷ்யனை வினவினார். சிஷ்யனும் தாமதிக்காமல் தான் உபாஸிக்கும் அக்கினி முகத்தில் உட்கார்ந்திருந்தபோது, அசரீரி சொன்ன வாக்கியங்களை எடுத்துச் சொன்னான். அதற்கு ஆசாரியர் பின்வருமாறு சொன்னார்: உனக்கு அசரீரி உலகங்களைப் பற்றியே சொல்லியது; நான் உனக்கு ஆத்மாவின் ஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்', எது கம் அல்லது சுகம், சுகம் ஆநந்தம் என்பவை ஒரு பொருள் குறிக்கும் பதங்களாம். உலகத்திலுள்ள சகல ஆத்மாக்களிலும் நிரம்பி உள்ளேயிருந்து எவன் பார்க்கிறானோ, அவன்தானே ஆத்மாவாகிறான் என்று ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையான தன்மையை அறியப் பெற்று உபகோசலன் ஆசாரியனிடமிருந்து விடைபெற்றுத் தன இல்லம் சென்றான்.

உலகத்தின் உண்மை

சத்தியகாமன் என்று மேற்கூறிய ஆசாரியனே ஒரு காலத்தில் தன் வாலிபதசையில் கௌதமன் என்னும் சிறந்த ஆசாரியனைத் தேடி, அவரிடமிருந்து பிரபஞ்ச சத்தியம் என்னும் ஒருண்மையை யறியப் போனான். கௌதமரும், பிரபஞ்சத்திற் சத்தியத் தன்மையைச் சிஷ்யனுக்கு அறிவிக்க வேண்டித் தன்னிடமிருந்த ௪௦௦ பசுக்களைசிஷ்யனிடம் கொடுத்து, அவற்றை இரண்டாயிரமாகப் பெருக்கிக் கொண்டுவரக் கட்டளையிட்டார். சத்தியகாமனும் குருவின் கட்டளையினைச் சிரமேற்கொண்டு அவர் பணித்தவாறே செய்து பிரபஞ்ச சத்தியத்தை அழகுபெற அறிந்து சென்றான் என்பது உபநிஷத்தில் கண்ட கதையாகும். இப்படி சத்தியம் ஒன்றினையே ஆசாரியர்களிடம் போய் அறிந்து வர பிரயாசைப்பட்ட மாணவரின் சரிதைகள் இன்னும் பல உள்ளன.

பூர்வகுலபதிகளும் குருகுலங்களும்

பூர்வ காலத்தில் மாணவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்வதற்கென்றே கங்கணம் கட்டிக்கொண்டு நின்ற ஆசிரியர்கள் குலபதிகள் என்றழைக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட குலபதிகள் பலர் பல்லாயிரம் மாணவர்களின் சங்கியைகளைத் தம் கீழ்கொண்டவர்களாய் இடங்கள் தோறும் இருந்தனர். கிரகஸ்தர்கள் பலபேர் நெருக்கமாய் வசிக்கும் கிராமங்களின் எல்லையின் ஒதுக்குப் புறத்திலேயே பூர்வ குருகுலங்கள் ஸ்தாபிதம் அடைந்திருந்தன. தற்காலத்திய படிப்புக்கேற்பட்ட பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்ட ஏராளமான தொகை செலவாவது போல் பள்ளிக்கூடக் கட்டடம் கட்டத் தொகை அதிகம் வேண்டியிருந்ததில்லை. தற்கால கல்விச் சாலைகளுக்கென்று வேண்டும் மூலதனம் போல் அக்காலத்திய குருகுலங்களுக்கு மூலதனம் ஏராளமாய் வேண்டியிருந்ததில்லை. பூர்வீக காலத்தில் குலபதியின் அல்லது குருகுலத்தின் ஆசாரியனின் சத்தியமே அக் குருகுலத்திற்குற்ற பெருத்த மூல தனமாயிருந்தது.

குருகுலத்தில் பயிலும் பிள்ளைகளும் இக்காலத்துக் கல்விசாலைப் படிப்புக்குச் செலுத்தும் விசேஷமான கட்டணம் போல் கட்டணமும் செலுத்தத் தேவையாயிருந்ததில்லை. ஒவ்வொரு குடும்பத்தினின்றும் மாணவர்களைக் குருகுலத்திற்கு அனுப்பியே தீரவேண்டுமென்னும் கட்டுப்பாடும் அக்காலத்திலிருந்தது. தகப்பன் பிள்ளைக்குத் தேவையான யோக்கியதை யுடையவனாயிருப்பினும் அவனும் தன் பிள்ளையை அவசியம் குருகுலத்திற்கே யனுப்பவேண்டுமென்ற நியதி அக்காலத்திலிருந்து வந்தது. குருகுலத்தில் படிக்கும் பையன் அரசன் மகனாயினும் ஏழையின் மகனாயினும் ஒரேவிதமாகவே நடத்தப் பெற்று வந்தான் என்பதற்கு ஆதாரங்கள் வேத புத்தகத்தில் காணக் கிடைக்கின்றன. குருகுல வாஸியான வித்தியார்த்திகள் எவராயினும் பிக்ஷை யெடுத்துக் குருவிவேதனம் செய்து, அவருத்தரவு பெற்று உண்ண வேண்டுமென்ற நியமம் அக்காலத்திய குருகுலங்களில் ஏற்பட்டிருந்தது. ஆகவே அக்காலத்துக் குருகுலங்களில் ஏற்பட்ட மாணவர்களின் போஜன விடுதிகளின் பொருட்டு பணச்செலவு ஏற்பட்டதில்லை. கிரகஸ்தர்கள் வசிக்கும் கிராமங்களுக்கருகே குருகுல பாடசாலைகள் ஏற்பட்டிருந்தபடியால் மாணவர்கள் தம் முனைவிற்சென்று கஷ்டப்படாமல் பிக்ஷையேற்றுக் குருகுலங்களிற் கொண்டு வந்து வயிறு நிறையச் சாப்பிட்டுக் கவலையில்லாமல் கற்று வந்தார்கள். இதன்றிக் குருகுலங்கள் ஒவ்வொன்றிற்கும் எண்ணிறந்த பசுக்கள் உண்டு. இப் பசுக்களின் பால் தயிர் நெய் முதலியன இக்காலம் போல் பணம் சம்பாதிப்பதற்கென்று மாற்றப்படுவதில்லை. பசுக்களினின்று கிடைக்கும் பால் தயிர்களெல்லாம் மாணவர்களைப் போஷிப்பதற்கே உபயோகப்பட்டு வந்தபடியால், அக்காலத்திய மாணவர்கள் தேகக் கட்டுடையவர்களாயும், பூர்ண புஷ்டியுடையவர்களாயும் மூளை பலமுள்ளவர்களாயும் தம்மாசிரியர் போற்றும் குணமும், கல்வியும் நிரம்பப் பெற்றவர்களாயுமிருந்ததாக அறியக்கூடியதாயிருக்கின்றது. உத்தாலகன் என்னும் அருணி யென்னும் பெயர்பெற்ற ஆசாரிய சிரேஷ்டன் கல்வித்துறையிற் கரை கண்டவர் என்று உபநிஷத்து வாக்கியங்கள் கூறுகின்றன. இவருக்கு சுவேதகேது என்ற திருக்குமாரனொருவனிருந்தான். அக்குமாரனை உத்தாலகன் தன்னிடமே வைத்திருந்து கல்வி கற்பிக்காமல் மற்றொரு ஆசிரியனிடமே கல்வி கற்க அனுப்பித்தான் என்று அறிவதிலிருந்து குருகுலத்தில் ஒவ்வொரு பிள்ளையும் குருகுலத்திலேயே கட்டாயம் போய் பயின்று வர வேண்டும் என்று நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்ததென்பது தெளிவாய்த் தெரிகிறது.

பிரமசரிய வாழ்க்கை

குலம், இனம், மந்தை, கூட்டம் இவையாவும் ஒரு பொருள் குறிக்கும் பதங்களாகும். பிராணிகளின் கூட்டத்தை மந்தை யென்கிறோம். பட்சிகளின் கூட்டத்தைப் பட்சிஜாலம் என்றழைக்கிறோம். அப்படியே மாணவர்களின் கூட்டத்தை, மந்தையை, அல்லது இனத்தைக் குருகுலம் என்றழைக்கிறோம். உலகத்தின் சேவைக்கு இக் கிரமக் கூட்டங்களில்லாமல் முடியாது. இக் கிரமக் கூட்டங்களெல்லாம் பிரமசரிய ஆசிரமத்தை மேற்கொண்டவர்களாயிருந்தார்கள். உலகத்தில் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய கஷ்டகாலங்களைச் சகித்து காரியங்கள் செய்யத் தக்கவாறு இம் மாணவர்கள் குருகுலத்தில் தகுந்த பயிற்சி பெறுகிறார்கள். உலகத்தில் மன்பதைகளுக்கு ஏற்பட்ட வியாதிகளைத் தீர்க்க இவர்கள் குருகுலத்தில் பயிற்சி பெறுகிறார்கள். கஷ்டப்படுபவர்களைக் காப்பாற்றவும், ஆறுதல் சொல்லவும் அசாத்தியமான காரியங்களைப் புத்திவன்மையைக் கொண்டு சாத்தியமான காரியமாகச் செய்யவும், இவை போன்ற பிறவற்றிலும் இவர்கள் செவ்வையாய்ப் பயிற்சி பெறுவதனால் இவர்கள் குருகுலம் விட்ட பிற்காலத்தில் உலக உபகாரிகளாய் மாறுகிறார்கள். இப்படிப்பட்ட பிரமசாரிகளையே, இக்காலத்தில் இச்சா சேவகர்கள் (வாலண்டியர்கள்) அல்லது வாலிப சாரணர்கள் என்னும் பெயர் கொடுத்தழைக்கிறோம். இப் பிரமசாரி ஆசிரமத்தினை மேற்கொண்டவர்கள் ௮ வயதிலிருந்தோ அல்லது பன்னிரண்டு வயதிலிருந்தோ ௨௫ வயது வரையிற் பழகவேண்டும். பிரமசரிய விரதம் பூண்டவர்கள், தினந்தோறும் காலையில் ௪ மணிக்கு எழுந்திருக்க வேண்டும். எழுந்திருந்து அவசியமான காலைக்காரியங்களைப் பார்த்தபின் ௫-இ மணி சாவகாசமாவது, தம்முடைய சக்தியைப் பெருக்கிக் கொள்ள வேண்டி ஆயிரம் காயத்ரீக்குக் குறையாமல், ஜெபம்

செய்யவேண்டும். பின் சுமார் ௬-இ மணிக்குத்தான், இம் மாணவர்கள், தம் ஆசிரியரிடம் சென்று கல்வி ஆரம்பிக்க வேண்டும்.

குருகுலக் காலவரையறை.

பூர்வீக காலத்தில் குருகுலத்தில் மாணவர்களெல்லாரும் சுமார் ஐந்துமாத காலவளவுதான், தாம் ஆசாரியரிடமிருந்து கல்வி பயின்று வந்தார்களென்ன வேண்டியிருக்கிறது. மீதியான எ மாஸ காலங்களையும் பிரமசாரிகள் தமது இல்லங்களில் பெற்றோர்களுடன் வேறு காரியங்களைப் பார்த்து வந்தனர் என்பது தெளிவாயிருக்கிறது. பூர்வகாலத்துக் குருகுலங்கள் யாவும் சிராவண மாஸம் என்று சொல்லப் பெறுகிற ஆடி, ஆவணி, மாஸங்களில் பூர்வீக அனுஷ்டானமாகிய பௌர்ணமி தினத்தில் திறக்கப் படுகின்றன. இவ்விஷயத்தை ஞாபகப் படுத்துவதற்காகவே தான், தற்காலத்தில் பிராமணர்கள் சிராவண உபாகர்மத்தை வைத்துக் கொண்டாடி வருகிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இப்படிச் சிராவணபௌர்ணமியில் திறந்த வேதபாடசாலை மூடும் தினம், அடுத்த தைமாதத்தில் வரக்கூடிய புஷ்ய நக்ஷத்திரம் சேர்ந்த 'பௌர்ணமி தினம்' என்று வேதத்திலிருந்து காணும் ஆதாரத்தினாலறிகிறோம். ஆனால் தற்காலத்தில் வேதாரம்பம் செய்யும் தினத்தைப் பிராமணர்கள் கொண்டாடுவதை நாம் பார்க்கிறோமேயொழிய, பள்ளிக்கூடம் மூடும் தினமாகக் கருதப்படுகிற தைபுஷ்ய பௌர்ணமி தினத்தைக் கொண்டாடப் பார்த்ததில்லை. இதிலிருந்தும், தற்காலத்தில் பிராமணர்கள், சிராவண பௌர்ணமியிலேயே பள்ளிக்கூடத்தைத் திறந்ததாகப் பாவனை பண்ணி, அன்றைய தினமே மூடும் அனுஷ்டானத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்களெனத் தெரிகிறது. தற்காலத்து ஆசாரியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வேதனம்போல் பூர்வீக ஆசிரியர்கள் வேதனம் பெறவில்லை. குருகுலத்தை மூடி மாணவர்களுக்கு ரஜாக் கொடுத்த ஏழுமாத காலத்தில், ஆசிரியர்கள் வருஷத்திற்குத் தேவையான வருமானத்தைக் கிரகஸ்தர்களிடமிருந்து பெறுகிறார்கள். ரஜாவில் குலபதிகளிருக்கும் ஏழுமாஸகாலமும், தேவதைகள் விழித்துக் கொண்டிருக்கும் உத்தராயண காலமாகையால், தேவதைகளைத் திருப்தி பண்ணிவைக்க வேண்டி, அநேக யாகங்களும் யக்ஞங்களும் புண்ணிய காரியங்களும் நடைபெறும். இச் சமயத்தில் ஆசிரியர்கள் தம் குடும்ப ரக்ஷணத்திற்கு உரிய பொருள்களைத் தேடிக்கொள்வார்களாகவே, உபாத்தியாயர்கள் அக்காலத்தில் தனியாகவே தனம் யாதொன்றும் பெறவில்லை.

விவாக காலம்.

பிரமசாரிகள் ௮ முதல் ௨௫ வயது வரையில் குருகுலத்தில் வித்தியாப்பியாசம் பண்ணவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தபடியால், இந்த வயது வரையில் மாணவனுக்குக் கலியாணமாவதில்லை. அக்காலத்தில் பிரமசரிய-ஆசிரமம் கழிந்தே கலியாணம் செய்விக்கும் விதி நிர்ப்பந்தமாயிருந்ததனால், பால்ய விவாகம் என்பதிருந்ததில்லை. குருகுலவாஸத்தைச் செவ்வையாய் முடித்து, ஆசாரியரிடமிருந்து உத்தரவு பெற்றவன், ஸ்நாதகன் என்னப் படுவான். ஸ்நாதகன் என்னும் பதம் ஸ்நானம் பண்ணினவன் என்று பொருள் படும். இவ்வாறு பிராமணர்கள் குருகுலத்தில் வித்தியாப்பியாசத்தை முடித்து, ஸ்நாதக விரதத்தைப் பூர்த்தி செய்யும் வழக்கம் பிரமசாரியின் கலியாண காலத்தின் பூர்வாங்கமாக அனுஷ்டிக்கப் படுவதை நாம் இன்றும் பார்க்கிறோம். இதிலிருந்தும், பழைய சம்பிரதாயத்தில் பூர்வீகர்கள் அனுஷ்டித்து வந்த விரதம் மறந்து போகாமல், இன்றும் கொண்டாடுகிறாற் போல் தோன்றுகிறது.

பிரம ஸ்திரீகள்.

வாலிபர்கள் பூர்வ காலத்தில், குருகுலத்திற் சேர்ந்து வித்தையிற் பயிற்சியடைந்ததைப் போன்று, பிரமஸ்திரீகளாகப் பெண்களும், அதே குருகுலங்களில் பூர்வ காலத்து ஸ்திரீகளும் பிரமசாரிணிகளாக விருந்து ஆசாரியரிடமிருந்து கல்வி பயின்று வந்தார்கள் என்பதற்கு வேதத்தில் பிரமாணங்கள் பலவற்றைக் காணலாம். புருஷர்களுக்கு பிரமசரிய ஆசிரமத் தலைக்கத்தில், யக்ஞோபவீதம் தரிப்பித்து உபநயனம் செய்வித்ததைப்போல், வேதகாலத்தில் பிரமசாரிணிகளும் நடத்தப்பட்டார்கள் என்று வேதங்களில் சொல்லப் பட்டிருக்

கின்றன. வேதகாலத்தில், ஸ்திரீகளுக்கு இப்போது நாயகனே ஆசாரியனாகும் வழக்கம்போல் ஏற்பட்டிருந்ததில்லை. ஸ்திரீகளும் உபநயனம் செய்விக்கப் பட்டுப் பெற்றோர்கள் வீட்டில் தமக்குத் தக்க வரன்கள் அகப்படும் வரையிலும் கலியாணமில்லாமல் வேதாப்பியாசம் செய்து வந்தார்கள் என்பதற்கு வேதத்திலிருந்து எண்ணிறந்த ஆதாரங்கள் கிடைக்கின்றன. வேத காலத்தில் பிராமண ஸ்திரீகள் புளர் உபநயனம் செய்விக்கப் பெற்றுக் குருகுலவாஸத்தை விஸ்தாரமாய்ச் செய்து மேம்பட்டிருக்கிறதன்மையை, ருக்வேத மந்திரத்ரஷ்டாவாகிய ஆம்பிரிணி போன்ற சிறந்த ஸ்திரீகளின் பெருமையிலிருந்தும் அறிய இடமிருக்கின்றது. ருக்வேதத்தில் மட்டும் மந்திரத்ரஷ்டாக்களாகப் பன்னிரண்டு நாரீ மணிகள் இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே கலகாகரீகம் மிக்க தற்காலத்தில், ஸ்திரீகளுக்கு உபநயனத்தையும் பிறவற்றையும் விவாக காலத்தில் செய்து எல்லாக் காரியங்களுக்கும் ஸ்திரீக்குப் புருஷனே ஆசாரியனாக நியமிக்கும் தற்போதைய விதிக்கு வேதத்தில் சிறிதும் ஆதாரமே யில்லை. ஆகவே பூர்வ காலத்திய ஸ்திரீ சுதந்திரம் ஏற்பட்டு, பிரமசாரிகள் போல் ஸ்திரீப் பிரமசாரிணித்துவம் ஏற்படுகிற வரையில், ஸ்திரீகளின் பால்ய விவாகத்தைத் தடுக்க இடமேற்படாது.

உபநயனத்தின் பொருள்.

உபநயனம் என்ற ஸம்ஸ்கிருத பதம், ஒரு மாணவனுக்குப் பூணூலைத் தரிப்பது என்ற பொருளைக் கொடுக்காது. உபநயனம் என்பது, அவயதுக்கு உட்பட்ட மாணவனைக் கல்வி கற்க வேண்டி, அவனை ஆசிரியனருகில் கொண்டு சேர்ப்பதாகும். பூர்வீகத்தில் மாணவன் கல்வி கற்கத் தொடங்கு முன் சிற்சில ஸம்ஸ்காராதிகளை ஆசாரிய முகமாய்ப் பெறவேண்டி உபநயன கர்மாவை முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வுபநயன கர்மாவை, இக்காலத்தில் செய்யும் வழக்கம் போன்று ஊரை ஒன்று கூட்டிப் பணச் செலவுடனும் விசேஷ ஆரவாரத்துடனும் செய்து கடன் பட்டவர்களில்லை. உபநயனம் செய்வித்தல் என்றால், மாணவனின் பெற்றோன், தன்னுடைய குமாரனை அழைத்துக் கொண்டு குருகுல ஆசிரியனைச் சமீபிப்பதாம்! ஆசாரியன் சமீபம் சென்ற மாணவன் உவர்த்தமைதை அல்லது விறகை மரியாதையாக அவர் வசம் விடுகிறான். ஆசாரியன் அந்த ஸமித்தையை ஆதரத்துடன் பெற்று, தன் முன்னே ஜ்வலிக்கும் அக்னிமீது மந்திர உச்சாரணத்துடன் வைக்கிறான். இந்தக் கிரியை முடிந்து, ஆசிரியன் மாணவனுக்கு ஒரு பூணூலை அடையாளமாகத் தரிப்பித்துக் காயத்திரி மஹாமந்திரத்தை உபதேசிக்கிறான். பூணூலை இப்படித் தரிப்பித்து ஆசாரியன் தன்னருகில் சேர்த்து மாணவக் கூட்டத்தில் அவனை ஒருவனாக்கிக் கொள்வதையே உபநயனம் என்கிறார்கள். உபநயனம் என்றால் அருகில் சேர்ப்பது என்று பொருள் படும். ஆசாரியனருகில் மாணவனைச் சேர்த்து அங்கீகரிப்பதே உபநயனம் என்ற பதத்தின் அர்த்தமாகும். வாலிப சாரணர் கூட்டத்தில் சேர்க்கச் சில வாக்குறுதிகள் வாங்கியபின் அக் கூட்டத்தில் சேர்ந்தவனுக்குப் பிறர் நினைக்க, சிவப்பு நிறத் துணியினாலான கழுத்துப்பட்டை தரிப்பிப்பது போன்றதொரு அடையாளமே, பிரமசரிய மாணவனுக்குப் பூணூலை அடையாளமாகத் தரிப்பித்தது என்று கொள்ளினும் தவறாகாது.

பூர்வ காலத்தில் ஸ்திரீ புருஷர்களுக்கு ஒருசேர பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற மூன்று ஆசிரமங்களையும் அனுஸரிப்பதற்கு அனுகுணமாகச் சகல வித்தைகளையும் ஆசாரியர்கள் குருகுலத்தில் இவர்களுக்குக் கற்பித்து வந்தார்கள்: பிரமசரியம் தவிர பின் மூன்றுள்ள ஆசிரமங்களில் முயன்று சித்தி பெறுவதற்குப் பிரமசரிய ஆசிரமமே அக் காலத்தில் அடிப்படையான ஆசிரமமா யிருந்தது. மூன்று பிற ஆசிரமங்களுக்குத் தேவையான சகல விஷயங்களையும் பூர்வகாலத்து மாணவர்கள் பிரமசரிய ஆசிரமத்திலேயே பழக்கம் பெற்று வந்தார்கள். பிறருக்கு உபகாரம் செய்வதற்கும், ஊரில் ஆரப்பிக்கும் வர்தால் நீக்குவதற்கும், நோயாளிகளுக்குப் பரிகாரம் செய்வதற்கும், முன் ஆலோசனையுடன் மந்திரிகள் போல் காரியங்கள் செய்யப் பழகுவதற்கும் அடிப்படை ஆசிரமமா யிருந்தது பூர்வ காலத்துப் பிரமசரிய ஆசிரமமேயாகும். ஆனதால் தான் சிறந்த குருகுலவாஸத்தில் பூர்ண காலமிருந்து பயின்று கிரகஸ்தம் முதலிய ஆசிரம மேற்கொண்டவர்கள் திடகாத்திர சரீரர்களாயும் ரோகமில்

லாதவர்களாயும், சத்திய சீலம்பன்னராயும், பூர்ண புருஷர்களாயும், ஆசாரியனைப் போலும் அவருக்கு மேலும் புத்திவன்மையில் திவ்யமுள்ளவராயும் இருந்ததாகக் காண்கிறோம். இப்படிப்பட்ட புண்ணிய புருஷர்கள் அரசாங்கத்தில் பூர்வ காலத்திலிருந்து பெருங் காரியங்கள் செய்தார்கள் என்று பிரசித்தியாய்ச் சொல்லுவதிலிருந்து, இவர்கள் பிரமசரிய ஆசிரமத்தில் பெற்ற பயிற்சி இத்தன்மைத்தென்பது தெளிவாய் அறியக் கிடக்கின்றது. இப்படிப்பட்ட பிரமசரிய ஆசிரமத்தைக் கிரமமாய்க் காப்பாற்றி உலகத்திற்கு உபயோகமாக்குவதைக் காட்டிலும் சிறந்ததொன்றுமில்லை. வாலிப சாரணர்கள் போன்ற பூர்வ குருகுலவாஸத்தில் பயின்ற பிரமசாரிகளே உலகத்திற்குப் பலவிதத்திலும் வழிகாட்டிகளாக வேண்டும். இந்த வகைப்பட்ட பிரமசாரிகளே, அஸ்பர்சியத்துவம் என்ற தீண்டாமையை யொழித்து வரும்சந்ததியார்கள் சௌக்கியமாய் வாழ வழிதேடவேண்டும். பூர்வ காலத்து மாணவர்களும் மாணவிகளும் பூர்வ காலத்தில் தமக் கேற்பட்ட குருகுலத்தில் மேற் கூறியவாறு நன்கு பயின்று மேம்பட்டு விளங்கினார்கள் என்றறிகிறோம்.

வீர விளக்கான வ. வெ. ஸு. ஐயர்

எழுதவும் நடுங்குகிறது! சொல்லவும் தழுதழுக்கிறது! கருதவும் நெஞ்சு துடிக்கிறது! கேட்கவும் மூச்சடைக்கிறது! நாடிகள் தளர்கின்றன! ஆ! எனது தெய்வீகத் தோழர்! ஆரியநாட்டின் சீரிய மைந்தன், ஆணரி வெட்டும் அழகுறு வீரன் பிள்ளை. நெஞ்சினன் பெருமைச் செயலோன், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், தமிழும் நாடும் தவமிருந்தற்றோன், தன்னயந்துறந்த தவமணியான, வீரனையோ இழந்தோம்! அந்தோ! அந்தோ! கண்ணருவி பாய்ச்சிக் கல்லென நிற்கிறது உலகமுழுதும்! ஐயர் இறந்தார்! என்னே காலம், என்னே ஊழ்வலி. தமிழ்நாடு ஒரு தவப்புதல்வனை யிழந்தது! என்று இடிவிழுந்த நாகம் போல் உலகெல்லாம் தியங்கித் தவிக்க ஒரு வீர விளக்கு அவிந்ததே! அக் குஞ்சர நடையையும், செஞ்சொலி வழுமையும், அக்கண் ஒளியையும் புத்தியின் எழிலையும் என்று மறுபடி காண்போம்! தமிழே, கம்பனே, பாரத தேசமே, குருகுலமே, கல்வியே, நீவிர் காதலோடு நட்ட நின்மலன் பிரிவை எங்ஙனம் ஆற்றுவீர்! ஏ கலியாண அருவியே, உன் வனப்பை வியந்த வஞ்சமில் நெஞ்சினையோ, உன் மடியில் வீழ்த்தி ஆவியையுண்டு எப்பம் விட்டு நிற்கிறாய்! அகஸ்திய மலையினின்று பசி துடிக்கும் ஆயிரம் சிம்மங்கள் போலப் பாய்ந்து வந்து எமது நண்பனையோ உறுயியழைத்து உண்டனை! ஏ நமனே ஒரு பெண்ணுருவாக வந்தோ எனது வீரனைச் சாவின் பற்களில் நிணித்தாய்! ஏ சாவே நீஎனது ஆருயிர் நண்பனின் யாக்கையைப் புழுஞ்சினும், அவன் புகழை அணுகுவையோ? ஏ உலகே என் கண்ணீரில் எழுதுகோலைத் தோய்த்தே இவ் வீரனின் சரிதையை எழுதுகிறேன். உனக்காக உழைத்த இவ் வுத்தமனின் திருவரலாற்றை உன் சரித்திர புத்தகத்தின் பக்கங்களில் விளங்கக் குறித்துக் கொள். அதை அடிக்கடி பார் தாயினும் என் மனதை ஆற்றிக் கொள்ளுகிறேன்! எனது நண்பர் புகழுடலை மனக்கண்ணால் கண்டு தொழுகிறேன்—ஒரு கல்விக்கடல், போராளி, ஆலாசிரியன்,

பத்திரிகாசிரியன், அருங்கலைபாசாரன், வீராவேசன், தேசபக்தன்—இவனே, நான் பேசும் பேறுபெற்ற பெரியோன். நாவலர்களே, சரித்திரக்காரர்களே, நாடகப் புலவரே உமது மணிமொழிகளுக்கு அணிகலமாகும் ஒரு குணமலையின் சரித்திரத்தைக் கேளுங்கள்!

போகச் செல்வமும் தியாகப் பெருக்கும், கல்வி வளமும், ஞானப் பொலிவும், வீரத்திருவும் விளங்கியது நமது பாரதநாடு. ஜெயசந்தன், கோரி முகம்மதை வருவித்து, வீரனை பிருதிவிராஜனைத் தோற்கடித்த பின்னர், நம்நாடு அயலவர் ஆட்சிக்குட் பட்டது. முகம்மதியரும், ஐரோப்பியரும், ஒருவர் பின் ஒருவராக நம் நாட்டைப் பிடித்து ஆண்டனர். முகம்மதியர் நம் கண்டத்தவர். தம் தாய்நாட்டைத் துறந்து இந்தியாவையே தம் தாய்நாடாகக் கொண்டனர். நம் நாட்டின் வருமானத்தை நம் நாட்டவருக்கே இட்டனர். தாசமகால்களையும், மோதி மஹால்களையும் கட்டினர். ஆயினும் இந்தியாவின் வீரத்தனமானது, சிவாஜி, துர்காதாஸ், ப்ரதாப்சிங், குருகோவிந்த சிங் இவர்களுருவெடுத்து வந்து நமது சுதந்திரத்திற்கும், சுயராஜ்யத்திற்கும் பாடுபட்டது. பிறகு ஆங்கில ஆட்சிக்கு ஆற்காடும், பிளாசியும், ஊக்கங் கொடுத்தது. கிளைவும், வெல்லஸ்லியும், டல்ஹௌஸியும், ஆங்கில இந்தியாவைக் கட்டி முடித்தனர். இச்சமயம் நாட்டின் சுதர்ம சுதந்திர உணர்ச்சிகள் எழுந்து, இந்து முகம்மதியரை ஒன்று சேர்த்து, சிருகபலத்தால் ஆங்கிலேயரை முடுக்கி விட்டு, தம் நாட்டைத் தம்மதாக்கிக் கொள்ள அற்புதமாக முயன்றன. அற்புதமான வீரர்களெல்லாம் அப்போது நாட்டில் ஆவேசத்துடன் எழுந்தனர்! ஆயினும் அவர்கள் காட்டிய போர் வரிசைகளை, பகுதியர்ப்பட்டு எதிர்த்து, நமது சீக்கியர் உதவியைக் கொண்டே அடக்கினர். நானாசாஹேபும், தாந்தியாதோபியும், குமாரசிங்கனும், அஹமதுஷா மௌல்வியும், போராங்கத்தில் சண்டமாருத இடிபோலத் தோன்றி, தங்கள் உதிரத்தால் இப் புண்ணிய பூமியைச் சிவப்பாக்கி மறைந்தனர். ௧௮௫௮ம் ஆண்டு, இராணி விக்டோரியாவின் சாசனம் குடிகளைச் சற்று சமாதானப் படுத்தியது. ஆயினும் நம் நாட்டிற்குட்புகுந்த வியாபார அரசாட்சி நம்நாட்டின் செல்வக் கனிமரத்தைக் உலுப்பத் தொடங்கிற்று. அயல் நாட்டுச் சரக்குகளுக்கு இந்தியாவே சந்தையானது. இதற்கு முன் இராட்டினத்தால் வெகு நேர்த்தியாய் நூற்று நெய்யப்பட்டு மிகுந்தமலிவாக விற்ற நம் நாட்டுத் துணிகள், அயல்நாட்டு இறக்குமதிக் குறுவாளியால் அடித்துக் கொண்டு போய் ஒழிக்கப் பட்டன. அதனோடு போட்டி போடத் தக்க ஆதரவின்றி நம் நாட்டு நெசவுத் தொழில் மூலைபிற் பட்டது. இராமர் காலத்திற்கு முன் முதல் நமக்கு ஆடையளித்து வந்த இராட்டினமும் வாட்டமுற்று நின்றது. ஆடைக்கும் நாடு அடிமையானது. அந்நியக் கல்வியை வயிற்றுப் பிழைப்பிற்குச் சீட்டு வாங்கப் படித்து, உத்தியோகச் சிறைகளில் வெகு சிரமப்பட்டு நுழைந்து கொண்டு, பணமே தெய்வம், வயிறே உயிரெனத் திரிந்த நம் நாட்டினர் வீரங்குன்றி சுதந்திர மற்றனர். வறுமைப் பேய், நாகரீக மென்னும் உடைகளுடன், இடம்பம், செருக்கு, அடிமைத்தனம், அனுசாரம் என்னும் குறள்களுடன், குகை போன்ற தன் வாயைத் திறந்து, கொண்டு மக்களின் உட்கவிப்பையுறுஞ்சி வந்தது. நல்ல கல்வி பட்டது. நாட்டில் நாற்பதுக்குத் தொண்ணூற்று நான்கு பேர் இருளில் தடவிக் கொண்டிருந்தனர். சுதந்திரக் கதிர் அஸ்தமித்தது. நாடு இந்த இருளில் உறங்கிக் கொண்டிருந்தது. சோம்பேறித்தனத்தில் அடிமை, வறுமை, இருள் முதலிய மூட்டைப் பூச்சிகள் தம் இரத்தத்தைக் குடிக்க, உறங்கிக் கொண்டிருந்த மைந்தருக்குப் பராசக்தி இரங்கினள். அவர்களைத் தட்டி யெழுப்பச் சில

சோதி மைந்தரை யனுப்பினள். தாதாபாய், பானர்ஜி, திலகர், கோகலே, அரவிந்தகோஷ், மாளவியா, சந்திரபாலன், முதலிய பரிதி மைந்தர் தோன்றினர்.

திருச்சிராப்பள்ளிக் கருகில் காவிரியின் இனிய பாட்டில் மகிழ்ந்து, தென்றலிற் தலையாட்டிக் கொண்டிருக்கும் புலன்களும், கலன்களும், சூழும் வரகனேரி என்னும் ஒரு கிராமம் உள்ளது. அதில் சீரிய ஒழுக்கமும், நேரிய வாழ்வும், ஒரு ஆரியத் தேர்ச்சியுமுள்ள வெங்கடேசய்யர் என்னும் ஒரு அந்தணன் தன் தாயமனைவிகாமாக்ஷியுடன் இல்லறமாகிற நல்லறத்தை நடத்திவந்தான். இவர்கள் வாய்மையையும் தூய்மையையும் எளிமையையும் கண்டு, வீரத்திற்கும், கல்விக்கும், ஒழுக்கத்திற்கும் உதாரணமாகி, உலகோரைத் தன் வீர வாழ்வினாலேயே தட்டி யெழுப்பக்கூடிய எழில் மைந்தனை இவர்களுக் கீந்தான்.

விக்ரம ௵ பங்குனி ௴ ௨௨-ம் ௳ கார்த்திகை நக்ஷத்திரம், துலா லக்னத்தில் முன் சொன்ன குலவிளக்காய் நமது ஐயர் பிறந்தார். தான் பிறந்தது ஏழைக் குடும்பமாயினும் ஒழுக்கச் செல்வமுள்ள தன் பெற்றோரின் நற்குணத்தில் தவழ்ந்து, ஒழுக்கத்தில் நடந்து, ஐந்து வயது மைந்தனானர். வறுமையில் விளையாடிய இப்பையனுக்குப் பொறுமை மிகுந்தது. நெறி உயர்ந்தது. இடம்பம் அற்றது. தன் தகப்பனார் சொல்லித் தரும் கீதசதகம், இராமாஷ்டகம், முதலியவற்றைப் பின்னையே சொல்லிப் பாடம் செய்துகொண்டும், நம் நாட்டிற் பிறந்த சிவாஜிக்கு வீரப்பால் ஊட்டி நின்ற, இராமாயண பாரதக் கதைகளைக் கேட்டு, உணர்ந்து, ஊக்கமிகுந்து இப் பையன் வளர்ந்தான். அருச்சுனன் கதையைக் கேட்டதும் தானும் ஒரு வில் கட்டி அம்பு எய்து பார்ப்பான். தன் தோழருடன் போலி வில் யுத்தம் செய்வான். தன் இளமை ஆடல்களிலேயே பின்னே தான் காட்டிய வீரத்தனத்தின் மூலையைத் தோற்றினன்.

அக் காலத்தில் ராஜ பாஷை யென்று சொல்லும் ஆங்கிலத்திற்குத் தாங்க முடியாத மதிப்பு இருந்தது. ஆங்கிலம் கற்காதவர் என்ன கற்றும் ஏழைகளென மதிக்கப்பட்டனர். ஆதலின் தன் தந்தை யனுப்ப நமது வ. வெ. சுப்ரமண்யன் யோசேப்புக் கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினன். தன் கருமமே கண்ணாயிருந்து தன் பாடங்களை வெகு கவனத்துடன் படித்து உயர்ந்ததுமன்றியில், தன் தேகத்தையும் அதே கவனத்துடன் பழக்கி உறுதிப் படுத்திக்கொண்டான். பரீக்ஷைக் கூடத்திலும், பந்து மேடையிலும், பெரியோர் குழுவிலும் சிறந்து விளங்கினன். நம் நாட்டுச் சரித்திரமும் மேல் நாட்டுச் சரித்திரமும் சொல்லும் வீரரின் வாழ்வை யெல்லாம் தன் வாழ்வில் அமைத்துக் கொண்டான். பஞ்ச பாண்டவர் வன வாசத்தைப் படித்துப் பொறுமை வளர்ப்பான். தேசிங்கன் சரிதையால் வீரத்துள் நிமிர்வான். சிவாஜியின் சரித்திரத்தைச் சிந்தித்து சுதந்திர மெய்துவான். பிரதாபசிங்கை மனக்கண்ணால் பார்த்து தேசாபிமான மெய்துவான். குரு கோவிந்த சிங்கனை எண்ணித் தன் நாட்டின் சுதந்திரமும் சுதர்மமும் அழிவுற்றதைக் கண்டு கலங்குவான். பல பாஷைகள் பயின்று அவ்வப் பாஷைகளில் எழுதப்பட்ட வீரர் சரிதையை மனத்தில் விளக்கச் செய்வான். லத்தீன் பாஷையைத் தனது இரண்டாவது பாஷையாக எடுத்துக்கொண்டு அதில் நல்ல தேர்ச்சி யடைந்தான். அதைத் தவிர ஆங்கிலம் ஆரியம் தமிழ் முதலியவற்றிலும் பயின்றான். தன் நாட்டைக் கல்வியால் சிறப்ப உதித்த இம் மாணவன் பி. ஏ. யில் முதல் தேறினன். நமது ஐயருக்கு இளமையிலேயே பாக்கிய லக்ஷ்மி என்ற பெண்மணியை வதுவை செய்தனர்.

வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர், பி. ஏ., பி. எல்

அக் காலத்தில் பொருளீட்டவும், செல்வாக்கு பெறவும் தகுந்தது வக்கீல் உத்தியோகமே. அதன் பொய் வாழ்வில் பொருளென்னும் மாயைத் திரை போடப்பட்டிருந்தது. அதுவே உயர்வென பொது ஜனங்கள் மதித்தமையால் நமது ஐயர் சட்ட பரீக்ஷைக்குப் படித்துத் தேர்ந்தார். திருச்சியில் சிறிது காலம் தன் வக்கீல் தொழிலை நடத்தினார். பிறகு ஐயர் இரங்கூனில் தன் தொழிலைத் தொடங்கிப் பெரும் பொருள் ஈட்டினார். எனினும் நமது ஐயர் கல்வித் துறையிலேயே தன் கவனத்தை வைத்தார். ஆங்கிலத்தில் நிகரற்ற புலவரானார். லத்தீன் பிரெஞ்சு முதலிய மேனாட்டு பாஷைகளில் மேம்பட்டார். தமிழ், ஆரியம், இந்துஸ்தானி முதலிய பாஷைகளைப் பயின்றார். தாய் பாஷையான தமிழைப் பயிலுவதில் ஒரு ஆர்வம் கொண்டார். குறளின் இருமைப் பருகி வந்தார். கம்பனின் கற்பகச் சோலையில் உலவி இலகினார். மேற்கும் கிழக்கும் பெற்ற மேதாவிகள் எழுதியிருக்கும் உயர்ந்த நூல்களை அவலோடு ஆராய்ந்தார். சட்டத்திலும் நிகரற்ற தெளிவுடன் இலகினார். தனது சட்ட அறிவை இன்னும் உயர்த்திக்கொள்ள இங்கிலாந்து சென்று பாரிஸ்டராக வேண்டுமென அவாவினார். தான் ஈட்டிய பொருளோடு தனது உறவினர் உதவிய பொருளுடன் ஐயர் இங்கிலாந்து சென்று லிங்கன்ஸ் இன்னில் சேர்ந்தார். சட்டங்களில் நன் மதிப்புடன் தேறினார். ரோமன் லாவில் முதன்மையடைந்தார். அக்குடும்பத்தையும் குறளையும் அவர் மறந்ததே இல்லை. லண்டனில் அவர் மனம் வேறு முதன்மையான காரியங்களில் பதிந்ததேனும், தன் வகுப்புப் பரீட்சைகளில் வெகு எளிதாகத் தேறி வந்தார். நமது ஐயருக்கு இப்போது ஒரு புதிய நோக்கமும், நறு கருப்பும்; காரியக் கருத்தும், வீரியப் பெருக்கும் உண்டாயிற்று.

இந்திய விடுதி

இந்தியாவில் நாட்டன்பு அரும்பி மலர்ந்து தன் மணத்தை எங்கும் பரப்பிக்கொண்டிருந்தது. லோகமானிய திலகரின் வீர மொழிகளால் மஹாராஷ்டிரம் எழுந்தது. சிவாஜிக்கும், பாஜிக்கும், கணேசனுக்கும் திருவிழாக்கள் கொண்டாடப் பட்டன. அத் திருவிழாவிற்குக் கணக்கற்ற பொது ஜனங்கள் வந்து தங்கள் மனதன்பை நாட்டன் பால் வற்றிச் சென்றனர். கேசரி மராதி என்னும் பத்திரிகைகளால் பாரத நாட்டின் வீர மெழுந்தது. தனது பாகூசன் கல்லூரியில், பாரத நாட்டு வருங்கால வீரரைத் திலகர் தயார் செய்து வந்தார். இவையெல்லாம் அதிகார வர்க்கத்தினரின் அபார விழிகள் பார்த்தன. ௧௮௯௭-ம் ஆண்டு ராண்டு துரை கொல்லுண்ட விஷயமாகவும், சிவாஜியின் அதிசய நாட்டு அடிமைத் தனத்திற்கு வருந்துவதாக ஒரு பாட்டும் கேசரியில் எழுதியிருந்ததைக் கண்டு, திலகர் பெருமானைச் சிறையிட்டனர். இப்படி வங்காளத்திலும், சென்னையிலுங்கூட, நாட்டன்பு மிகுந்து நல்லோர் மக்களின் சுதந்திரக் கண்ணைத் திறக்கப் பெரிதும் முயன்றனர். இவர்களிற் சிலர் மிருக பலத்தினால் சுதந்திரம் பெறுவதையே மேலெனக் கருதி, வெடி மருந்துகள் செய்வதிலும், அராஜகமான நூல்களைப் பரப்பச் செய்வதிலும், போர்ப் பயிர்ச்சி செய்துகொள்வதிலுமே காலத்தைச் செலவழித்தனர். நமது மஹாத்மாவின் அஹிம்ஸா தர்மம் அப்போது இவர்களைக் கவர்ந்திருக்குமாயின் இச் சிங்கங்கள் நாட்டிற்காக இன்னும் கோடிப் பங்கு வேலை செய்திருக்கலாம். அச் சிங்கங்களில், திலகன் கல்லூரியில் தேறி பி.ஏ. பட்டம் பெற்று, நாட்டின் உய்வுத் திற்கே தன்னைக் கொடுத்தவருமிய விநாயக தாமோதர சவர்க்கார் என்பவரும் ஒருவர். தன்னைப் போன்ற நாட்டன்பு மிகுந்த இளைஞரை இவர்

திரட்டித் தன் சகோதரர் கணேசனுடன் மித்ர மேளம், அபிநவபாரதி என்ற தேசீய சங்கங்களைக் கூட்டி, தேசபக்தியும், தேசாபிமானப் பயிற்சியும் மீந்தார். இவ்விதமாகவே வங்காளத்திலும் அராஜக சங்கங்கள் வலுத்தன. ௧௯௦௬-ம் ஆண்டு ஜூன் மீ சாவர்க்கார் நமது ஐயரைப் போன்று பாரிஸ்டராக்கிக் கொள்ள லண்டனுக்குப் புறப்பட்டார். இன்னும் டாக்டர் இராஜன் தங்கா முதலியோரும் லண்டனில் படிப்பிற்காகக் கூடினர்.

இச் சமயம், கத்தியவாரைச் சேர்ந்த சியாமாஜி கிருஷ்ண வர்மா என்ற தேசாபிமானி லண்டனில் இந்தியா சுய ஆட்சி சங்கம் (Indian Home Rule Society) என்றொரு சங்கம் ஏற்படுத்தி அதன் தலைமை வகித்து, அதன் சார்பாக இந்தியன் ஸோஷியலாஜிஸ்டு என்ற ஒரு பத்திரிகையும் நடத்தி வந்தான். வீரமுள்ள இந்திய இளைஞர்களையும் பல வழிகளில் மேல் நாட்டில் கூடும்படி செய்தான்.

அவர்களுக்குப் பலாத்காரத்தால் சுதந்திரம் வரும் என்று புகட்டினான். தான் முதன்மையாகத் தேர்ந்தெடுத்த வாலிபரில் சவர்க்காரே நாயகமாக விளங்கினான். நமது ஐயர் சவர்க்காரின் வலது கையாக உதவினார்! ௧௯௦௭-ம் ஆண்டு சென்னையில் நடந்து வந்த இந்தியா என்னும் பத்திரிகைக்குப் பல கடிதங்கள் அனுப்பினார். "இந்திய விடுதி" என்றொரு மாளிகையமைத்து அங்கு தங்கள் அராஜகமான கூட்டங்களை நடத்தி வந்தனர். ஒரு இரகசியப் புரட்சி இயக்கத்தைப் போதித்து வந்த இந்திய விடுதியின் மேல் அரசாங்கத்தார் எச்சரிக்கையாகவேயிருந்தனர். தன் பத்திரிக்கை வாயிலாக அராஜக உணர்ச்சியை யுண்டு பண்ணுகிறானென்று அதிகாரிகள் கிருஷ்ண வர்மாவை நாடு கடத்தினர். அவர் பாரிஸுக்குப் போய் அங்கிருந்து தன் இயக்கத்தை இன்னும் தீவிரமாக நடத்தி வந்தான். அவன் பத்திரிக்கையையும் அரசாங்கத்தார் பிடித்துக் கொண்டனர்.

நமது ஐயர் இந்திய விடுதியில் மூவாண்டுகள் தன் வீர தோழருடன் வசித்தார். அங்கேதான் ஐயரின் நாட்டன்பு, திட்டிக் கூர் செய்யப் பட்டது. அன்னிய ஆட்சியின் இன்னலை யுன்னித் தன் பொன்னாட்டை எண்ணிக் கண்ணீர் விடுவார். நாட்டன்பர்கள் தன் தாய் நாட்டில் படும் துயர்களை எண்ணித் தவிப்பார். வங்காள இளைஞர் செய்து வந்த அராஜகக் கிளர்ச்சியைக் கேட்டு ஊக்கங் கொள்வார். அப்போது ராஜ ப்ரதிநிதியாயிருந்து, வங்காளத்தைப் பிரித்துப் பல சட்டதிட்டங்களைத் தன்னிஷ்டப்படி செய்த கர்ஸானை எண்ணி உதட்டைக் கடித்துக் கொள்வார். இச் சமயம் வங்காளப் புரட்சிக்காரர், வங்காளப் பிரிவினை செய்யப்பட்ட நாள் முதல தங்கள் தசைகளை முறுக்கி விட்டுக் கொண்டு வந்தனர். ௧௯௦௮-ம் ஆண்டு முஜாபர்பூரில் கென்னடி என்ற ஆங்கிலரும் அவர் மனைவியும் கொலையுண்டனர். இது சம்பந்தமான கிலவிபரங்கள் கேசரியில் வந்திருந்தன. இச் சமயத்தில் வங்காளத்தில் 'வெடி குண்டுகள்' ஏராளமாகச் செய்யப் பட்டன. ஜுகந்தர் போன்ற பத்திரிக்கைகள் பரவின. இவற்றை அரசாங்கம் பார்த்தது. ௧௯௦௭-ம் ஆண்டின் சுதந்திரப் போரைப் பதினென எண்ணியது. முதன்மையான தேசாபிமானிகளைச் சிறையிலிட்டது. நமது திலகர் பெருமானை ஆறு ஆண்டுகள் தீவாந்திர சிட்சை விதித்து மாண்டேலக்கு அனுப்பியது. இச் சம்பவங்களைக் கேட்ட இந்திய சுய ஆட்சி சங்க இளைஞருக்கு இரத்தம் கொதித்தது. அன்றே தமது உயிரை நாட்டிற்கென ஒதுக்கி வைத்தனர். ௧௮௫௭-ம் ஆண்டைக் கூவியழைத்தார். அவ்வாண்டில் நடந்த சுதந்திரப் போரை "இந்திய சுதந்திரப் போர்" என்ற தலைப்புள்ள புத்தகமாக

53

சவர்க்கார் மராத்தியில் எழுதினார். அதை நமது ஐயரும், வேறொருவரும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டனர். அதைப் படித்தோருக் கெல்லாம் தேசாபிமானத் தீ பற்றியது. ௧௮௫௭-ம் ஆண்டு மனதில் பளிச்சென்று தோன்றி, வீரத்தை ஊன்றியது. அப் புத்தகத்தையே நமது ஐயர் குமாரர்கள் தலை துள்ளப் படித்து ஊக்க மேலிட்டனர். ௧௮௫௭-ம் ஆண்டு நடந்த தம் நாட்டுச் சுதந்திரப் போர் தினத்தைக் கொண்டாடினர். இதற்குச் சுமார் ௱ இந்திய வாலிபர் வந்திருந்தனர். பிறகு பல துண்டுப் பிரசுரங்கள் வெளியேறி எங்கும் பரவின. "ஓ நாட்டிற்காக உயிர் கொடுப்பவர்களே", "முக்கிய எச்சரிக்கை" என்ற பல துண்டுப் பிரசுரங்கள் எங்கும் பறந்தன. இந்தியாவிற்கு ஏராளமான பிரசுரங்களும், "இந்திய சுதந்திரப் போர்" என்ற நூலில் சில பிரதிகளும் வந்தன. ஞாயிறு தோறும் இந்திய விடுதியில் [illegible] கூட்டங்கள் நடந்தன. வெடிக் குண்டுகள் செய்யும் விதமும் போதிக்கப் பட்டன. துப்பாக்கிப் பழக்கங்கள் நடந்தன. இவற்றிற் கெல்லாம் சவர்க்கார் தலைமை வகித்து நடத்தினர். மஜினியின் சரிதையை மராத்தியில் எழுதிப் பரப்பினர். நமது ஐயர் அவருக்கு வலதுகையானார். இவர்களுடைய போக்குகளை அரசாங்கத்தார் கவனித்து வந்தனர். "இந்திய சுதந்திரப் போர்" என்ற புத்தகத்தை உடனே வெளியிடக் கூடாதெனத் தடுத்தனர்.

இச் சமயம் இந்தியாவில் தேசாபிமானக் கிளர்ச்சிகள் வலுத்தன. சிவாஜிக்கு ராமதாஸ் செய்த உபதேசங்கள் ஒவ்வொரு இந்தியன் காதிலும் ஒலிக்கும்படி துண்டுப் பிரசுரங்கள் பறந்தன. நாசிக்கில் சில இளைஞர்கள் வெகு ஊக்கமுடன் கூடிப் புரட்சி செய்தனர். ௧௯௦௮-ம் ஆண்டின் "லகு அபிநவ பாரத மேளா" என்ற துண்டுப் பிரசுரத்தை கணேச சவர்க்கார் விடுத்ததற்காக அரசாங்கம் அவருக்கு தீவாந்திர சிட்சை விதித்தது. இதைக் கேட்ட சவர்க்காருக்கு தேசாவேசம் எழுந்தது. அன்று இந்திய விடுதிக் கூட்டத்தில் பலாத்காரப் பேச்சுகள் பலமாய் நடந்தன. ஆங்கில ஆட்சியை எதிர்க்க ஆவியை யீவதெனக் கங்கணம் பூணப் பட்டது. தாந்தியாதோபியும், நானாசாஹேபும் அவர்கள் மனதைப் பிடித்துக் கொண்டனர். இந்திய விடுதியில் இவர்களுக்கு சமையற்காரனாயிருந்த சதுர்புஜன் என்றவன் மூலம், தந்திரமாக மறைத்து இருபது துப்பாக்கிகள் அனுப்பப்பட்டதென்று அராஜக விசாரணையாரின் அறிக்கை (Sedition committee Report) சொல்லுகிறது.

௧௯௦௯-ம் ஆண்டு ஜூலை மீ ௧-உ இந்திய விடுதியில் நிறைந்திருந்த புகைச்சல் வெடித்து வெளிவந்தது. அவ் விடுதியில் நாட்டன்பும், வீரத் துணிவும் மிகுந்த, மதன்லால் திங்கிரா என்னும் ஒரு காளை, லண்டனில் ராஜ மாளிகையில் கூடியிருந்த ஐரோப்பியப் பிரபுக்களின் கூட்டத்திற்குச் சென்றான். இந்திய விடுதியாளரின் நடவடிக்கைகளைத் துப்பறிந்து அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்கும் கர்சான் வில்லி என்பவன் அங்கு இவன் கண்களை உறுத்தி நின்றான். தன் கைத் துப்பாக்கியின் வாயினின்று தன் கோபத்தினை அவன் மேல் பாய்ச்சினான். கர்சான் வில்லி வீழ்ந்து இறந்தான். உடனே திங்கிராவும் சுட்டுக்கொண்டு இறந்தான். "நான் வேண்டுமென்றே ஆங்கிலேயன் இரத்தத்தைச் சிந்தினேன். இந்திய வாலிபர்களுக்குத் தீவாந்திர சிட்சை விதித்தும், தூக்குப் போட்டும் அதிகாரிகள் செய்யும் செயல்களின் சிறிய மறுப்பாகவே இப்படிச் செய்தேன்" என்ற ஒரு சீட்டை திங்கிராவின் சட்டைப் பையில் கண்டார்கள். இக் கொலைக்கு இந்திய விடுதியினரே காரணமெனக் கண்டனர். உடனே சவர்க்காரைப் பிடித்து விசாரணைக்காகச் சிறையிட்டனர். நமது ஐயருக்கும் பிடிவாரண்டு கொடுக்கப்போகின்றனர். எப்போதும்

நேயரைக் கைவிடாத உண்மையான நமது ஐயர் சவர்க்காரிடம் சென்று "எனது அன்பனே! நெருக்கடியான ஆபத்தில் நேயரை நீங்குதல் நீதியில்லாததலின், யானும் உன்னோடு சிறைப்படுகிறேன். நாம் நாட்டின் சேவையைச் செய்யச் சேர்ந்தோம். அதன்பால் வரும் இடர்களைச் சேர்ந்தே அனுபவிப்போம்" என்று சொன்னார். சவர்க்கார், "சிறைக்குள் வந்து என்ன செய்யப் போகிறாய்? வெளியிலிருந்து நீ தாய் நாட்டிற்குச் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. உன் மீதும் பிடிவாரண்டு பரப்பி விட்டனர். உடனே, உடனே, இத் தீவை விட்டுச் செல்" என்று தூண்டினான்.

ஐயர் இச் சமயம் பாரிஸ்டர் பரிசையில் தேறிவிட்டார். பட்டம் பெறுவதற்கு முன் ராஜ விசுவாசச் சத்தியம் செய்ய வேண்டுமென்ற விதியிருந்தது. இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கு முள்ள தொடர்பையே வேரோடு பெயர்க்கக் கருதும் மனமா இதற்கு உட்படும்! "எனக்கு இப் பட்டம் வேண்டுவதில்லை. அதற்காக யான் கட்டிய பணத்தைக் கொடுத்து விடுங்கள்" என்று கேட்டு அதை உடன் வாங்கிக் கொண்டு சில உடுப்புகளை மட்டும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார். ஐயரின் சாப்பாட்டு விடுதியை நடத்திய பெண் அவர் பயணத்திற்கு வேண்டிய உதவி புரிந்தாள். இதற்குள் ஐயரைப் பிடிக்க அரசாங்கத்தார் வலுத்த வேவுகாரரைக் காவலும் கடிய வேகத்துடன் எங்கும் விடுத்தனர். ஐயர் பாரிஸுக்குப் போவதாகக் கேள்வியுற்று அவ் வழி யெல்லாம் வேவுகாரர் கண்ணில் திரி போட்டுப் பார்த்து நிற்கின்றனர். கப்பல்களி லெல்லாம் கவனமாய்த் தேடுகின்றனர். இவர் [illegible]த்தை யெல்லாம் தோற்கடிக்கும் தந்திரமும், தைரியமும், முன்னறிவும் நமது ஐயருக்கு உண்டென்பதை அறியார்.

விக்கிரமசிங்

பாரிஸுக்குப் போகும் ஆவிவண்டி தப்பிட்டே உலாந்தா தேசத்திற்குப் போக உன்னிக் கப்பலேறி ஒரு வீரன் தாடி வளர்த்துக்கொண்டு கம்பீரமாக அகாலியன் போல உட்கார்ந்திருக்கிறான். அவன் பின்னேயே நிழற் போல ஒரு வேவுகாரன் தொடர்ந்து ஒரு தந்தியை அவசரமாயும் தந்திரமாகவும் கொடுத்தான். அத் தந்தியின் மேல் "வ.வெ.சு.ஐயர்" என்ற விலாசம் இருந்தது. அவ் வீரன் இத் தந்தியைக் கூர்ந்து பார்த்தான், வந்த ஆளையும் அறிந்தான். உடனே தந்தியை உடைக்காது திரும்பிக் கொடுத்து விட்டு, "இது வ.வெ.சு. ஐயருக்கன்றோ? என் பெயர் விக்கிரமசிங். இதை என்னிடம் ஏன் கொண்டு வந்தீர், போம்" என்று சொல்லவே அவன் மன்னிப்புக் கேட்டுச் சென்றான்.

நமது விக்கிரமசிங் ஆம்ஸ்டர்டாம் வந்திறங்கினார். உடனே பாரிஸை நோக்கிப் புறப்பட்டார். பாரிஸில் சியாமாஜி கிருஷ்ணவர்மாவும் ஸ்ரீமதி காமா என்ற மாதும் நமது விக்கிரம சிங்கனை உபசரித்தழைத்துப் பரிபாலித்தனர். இந்தியாவினின்று மற்றும் சில இளைஞரும் அங்கு சேர்ந்தனர். நமது விக்கிரமசிங் பரம ஏழை போல் வசித்தான். காமா அவனை உயிர் போல் நேசித்தாள். நான்கு மாதம் அவ்வாறாக பாரிஸ் நகரத்திலிருந்தார். பிறகு திடீரெனப் பாரிஸ் அரங்கத்தினின்று மறைந்தார். மறுபடி ரோம நாட்டின் இயற்கை வனப்புகளில் களித்துச் செல்ல அவரைக் காண்கிறோம். சில நாளைக்குப் பிறகு கிரேக்க நாட்டில் அதன் வீரரை வியந்த மனத்துடன் சென்று கான்ஸ்டாந்தி நோபிளில் மறுபடி நமது விக்கிரமசிங் தென்பட்டார். பிறகு ஆளைக் காணோம்.

ஒரு பக்கிரி

கான்ஸ்டாந்தி நோபிளினின்று இந்தியா செல்லும் கப்பலில் "அல்லாஹோ அக்பர்! லாஇலாஹி

இல்லல்லா ஹு அல்லாஹு அக்பர்" என்ற தொனி கடல் முழக்கத்தினும் பலமாகக் கேட்கிறது. இச் சப்தம் செய்துகொண்டு நீ-வேளையும் நிமாஸ் செய்யும் ஒரு பக்தி நிறைந்த பக்கிரைக் கப்பலி லுள்ளோர் மரியாதையுடன் வணங்கி வந்தனர். கெய்ரோ வந்ததும் இப் பக்கிரி மறைந்தனன்!

மறுபடியும் இப் பக்கிரி கொழும்பு செல்லும் கப்பலில் ஏறினான். தன் கையில் ஒரு சீட்டு வைத்திருந்தான். உருது எழுத்தில் அதில் அவன் பெயர் அச்சடித்திருந்தது. கேட்ட பேருக்கெல்லாம் அதைக்காட்டித் தான் கல்கத்தாவில் ஒரு பெரிய வியாபாரி என்று சொன்னான். எல்லோரும் "தாங்கள் மதப்பற்றுள்ள வியாபாரியே" என்று மெச்சி மரியாதை செய்தனர். நமது பக்கிரி கொழும்பு வந்ததும் இவரிடம் சந்தேகப்பட்டு சில இரகசிய போலீசார் இவரைச் சோதித்தார். அவர்களுடைய சோதனைகள் பலிக்கவில்லை. பாமரனாகிய நமது பக்கிரியிடம் என்ன சோதிக்க இருக்கிறது. "அல்லாஹோ அக்பர் தான்" இருக்கிறது. இப் பக்கிரி ரயில் மார்க்கமாகப் புதுச்சேரியை யடைந்தான்.

புதுச்சேரியில் ஐயர்

இதற்குள் நாட்டில் புரட்சி இயக்கம் பெருத்தது. வங்காளத்தில் வெடி மருந்து செய்வோரும், ரத்தக்காளியை உபாசிப்போரும், பலாத்காரர்களும் பெருத்தனர். பம்பாயிலும் கனேச சாவர்க்காருக்குப் பிறகு இயக்கம் பலப்பட்டது. தெலுங்கு தேசத்திலும் 'ஸ்வராஜ்' என்ற பத்திரிகை ஜனங்களின் நாட்டன்பைக் கிளப்பி நின்றது. சென்னையிலும் பல இளைஞர் ஊக்கமுடன் துணிந்து நின்றனர். புதுச்சேரியில் நடக்கும் 'இந்தியாப் பத்திரிகையில்' படிப்பவருக்கு தேசவெறி பிடிக்கும்படியான பல விஷயங்கள் வந்துகொண்டிருந்தன! இரகசிய வேவுகாரர் எங்குமிருந்தனர். பல புரட்சிக்காரர் நாடு கடத்தவும் தூக்கப் போடவும் சிறையிடவும் பட்டனர். சாவர்க்கார் தன்னை விசாரிக்க இந்தியாவிற்குக் கொண்டுவரும் கப்பலினின்று தந்திரமாகத் தப்பி அலைகடலையும் நீந்தி பிரான்ஸிற்கு வந்ததும், பிரெஞ்சுக்காரர் அவரை ஆங்கிலேயரிடம் பிடித்துக்கொடுத்ததும் ஹேக்மன்றத்தார், அவருக்கு வழங்கியநீதியும், அவரை அந்தமான் அனுப்பியதும் வ. வெ.சு.ஐயரைத் தேட அரசாங்கத்தார் எங்கும் தந்திகள் பரப்பியிருப்பதையும், ஐயர் எங்கேயோ தப்பி யோடி விட்டதையும், வங்காள வாலிபரின் ஊக்கத்தையும் பற்றியே அன்று நாடு முழுதும் வியப்புடன் பேசிக் கொண்டிருந்தது. இப் புரட்சி இயக்கத்தில் ஆங்கிலேயர் கையில் பிடிபடாது தப்பிப் புதுச்சேரிக்கு வந்து பலர் தங்கியிருந்தனர். இவர்களுக்குள் ஸ்ரீ அரவிந்தகோஷ் புதுச்சேரியிலேயே மன்னி, தன் சக்தியை வளர்த்துக் கொள்ளத் தவம் புரிந்து வருகிறார்.

நாம் முன்னே தொடர்ந்து பார்த்த பக்கிரி இப்போது அரவிந்தரிடம் தன் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். அக் கதையைக் கேட்டு அரவிந்தர் மனந் திடுக்கிட்டு தன் முன்னிருக்கும் பக்கிரியைத் தன் தவ மார்போடணைத்துக் கொண்டு "ஆ! என் வீரனே! வ. வெ. சு. ஐயரே தங்கள் வீரத்தை என்னென்று சொல்வேன். விக்ரமசிங்! தாங்கள் இனி இங்கேயே இருக்கலாம்" என்று ஆரவாரஞ்செய்தார். ஆ! பக்கிரி விக்ரமசிங்கோ! விக்ரமசிங் நமது ஐயரா! என்ன ஆச்சரியமானது ஐயரின் தைரியம்! உலகின் சரித்திரத்தில் யாரும் காட்டாத வீரத்தை இன்று நேரே பார்த்தோமென்று உடலெல்லாம் நரம்புகள் இறுகத் திகைத்து வியந்தது. இனி நமது ஐயரின் புதுச்சேரி வாழ்வைப் பற்றி கவனிப்போம்.

புதுச்சேரியில் நமது ஐயர் தன் குடும்பத்துடன் வசித்தார். ஐயருக்கு முதலில் ஒரு பெண்ணி

ருந்து தவறிப் போயிற்று. பின்பு ஒரு குழந்தை புதுச்சேரிக்கு வந்ததும் பிறந்தது. அக் குழந்தை தான் சுபத்திரா. அதற்குப் பின் ஒரு ஆண் மகவு உண்டாயிற்று. ஐயர் தன் மனைவி மக்களிடம் மிக்க அன்பு பாராட்டி வந்தார். தன் நாட்டினிடம் அருள் பாராட்டி வந்தார். ஐயரின் மனைவி தைரியத்திலும் அன்பிலும் அவருக்கு ஏற்றவளே. பாக்கியலட்சுமி யென்ற பெயருடைய அம் மாதினைத் தன் மனைவியாகப் பெறும் பாக்கியம் படைத்த நமது ஐயர், தன் குடும்ப வாழ்வில், புதுச்சேரியில் களிப்புடனேயே வசித்தார். அவருக் கேற்றபடி கவி-சுப்பிரமணிய பாரதியாரைப் போன்ற பல நட்பன்பரும் அவர் வாழ்விற்கு இனி தூட்டினர். வறுமையில் உழன்றாலும் ஐயர் தன் பெருமையையும் வீரத்தையும் கைவிடவில்லை. ஐயர் கையில் பணமேது! ஆயினும் அவர் முகத்தின் வீரத்திரு வாடவில்லை. மனம் நிமிர்ந்து நின்றது. சற்றும் அடிமை உத்யோகத்தைப் பாவது பாரிஸ்டர் வேலையையாவது எண்ணவில்லை. நமது ஐயரை அறிந்த நண்பர் பலர் அவருக்குப் பொருளுதவி செய்து வந்தனர். ஐயர் தேசத்திற்காகவே வாழ்ந்தார். தன் வயிற்றிற்காக வாழவில்லை. ஆதலின் தன்னைச் சுற்றியுள்ளவருக்கு பிரதாபசிங்கனைப் விளக்கினார். வீரம் புகட்டினார். "தமிழரை சீக்கியர் போன்ற வீரராக்க வேண்டும். நாட்டின் அடிமை நோயை ஓட்ட வேண்டும்! சுதந்திரம் நாட்டில் துலங்க வேண்டும்" என்ற எண்ணமே அவர் கருத்தின் உண்மை. பலாத்காரத்தில் அப்போது ஐயருக்கு நம்பிக்கை மிகுந்ததினால், தன்னை இணையற்ற போர் வீரனாக்கிக் கொண்டார். ஊக்கத்திலும், வீரத்திலும், தைரியத்திலும், தேசாபிமானத்திலும், குருகோவிந்த சிங்கனுக்கே இணை சொல்லக் கூடிய அவ்வளவு சிறப்புடையவரானார். அவனைப் போலவே சண்டிஸ் தோத்திரங்கள் சொல்லிக் கொண்டு காளியைத் தொழு வார். தன் தேசத்தை எண்ணி அவர் மூன் கண்ணீர் சொரிவார். தன் பிள்ளைகளுக்கும் வீர மந்திரத்தை ஓதுவார். தம்மைப் பார்க்க வரும் தமிழருக்கெல்லாம் சிறுமை போய்ப் பெருமை பிறக்க உரிமை பெறும் வழியை உரைப்பார். திலகர் பெருமானுடன் கடிதப் போக்கு அடிக்கடி வைத்துக் கொண்டார். ஐயர் இங்கிலாந்தினின்று தப்பிப் புதுச்சேரிக்கு வந்த செய்தியை ஐயர் மூலமாகவே அரசாங்கத்தார் அறிந்து திடுக்கிட்டனர். இவர் வீரத்தைக் கண்டு வியப்பெய்தினர். ஐயரைப் பிரெஞ்சுக்காரரிட மிருந்து பெறப் பல முயற்சிகள் செய்தனர். அவர் வீட்டை இரகசியப் போலீசார் வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். ஐயரைச் சுற்றி அபாயம் வளைந்து நின்றும் சற்றும் கலங்காது, வீரத்தில் தாழாது இருந்தார். ஒரு நாள் தேர்தல் சமயத்தில் ஐயரைத் தாக்கியே வந்து விடுவதெனச் சிலர் வீட்டை வளைத்துக் கொண்டனர். அப்போது ஐயர் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். "சாகப் போகிற பிணத்திற்குச் சீக்கிரம் சாதம் போடு" என்று வெளியிலிருக்கும் கொடியர் கூவினர். மனைவி பாக்கியலக்ஷ்மி அம்மாள் திடுக்கிட்டாள். இருப்பினும் மலை போன்ற தன் வீரக் கணவன் பக்கத்திலிருக்கும் வரையில் பயமென்னும் பேய் தன்னை அண்டாதென தைரியங் கொண்டாள். நமது ஐயர் தன்னைப் பிடிக்க வந்தவர் செய்யும் ஆரவாரத்திற்கு ஒரு புன்னகையைக் காட்டினார். தன் மனைவியையும் கைக்குழந்தை சுபத்திராவுடன் கூரைமீதேறி வேறு வீட்டிற்குத் தாண்டுவித்தார். கையில் துபாக்கியைப் பிடித்து மாடி மீதில் ஏறி நின்று ஆகாயத்தை நோக்கி ஒரு வேட்டுப் போட்டார்! அது ஆயிரங்காக்கைக் கோர் கல்லாயிற்று! ஆரவாரஞ் செய்தவரின் அடிச்சுவடுகளுங் காணோம்.

அப்போது தென்னிந்தியாவில் நடந்த சில புரட்சிகளால் இவர் மீதுள்ள கோபம் அதிகரி

களுக்கு அதிகரித்தது: கவி—சுப்பிரமணிய பாரதியார் தன் வீரமணங் கமழும் பாட்டுக்களைத் தமிழர் உள்ளத்தில் விதைத்தார். நாட்டன்பு மலர்ந்தது. சந்திரபாலரின் சுதந்திர முழக்கம் தமிழர் நெஞ்சில் ஒரு துடிப்பை யுண்டு பண்ணிற்று.

"நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், அது நமக்கே உரிமை யாமென்பதறிந்தோம். பூமியிலெவர்க்குமினி அடிமை செய்யோம்" என்று வான் பிளக்கச் சங்கு ஊதி, ஜயபேரி முழக்கி ஊக்கமுள்ள வாலிபர் முன் வந்தனர். இந்தியா பத்திரிகை இடி முழக்கத்துடன் சுதந்திர உணர்ச்சியை ஓதி நின்றது. திருநெல்வேலி ஜில்லாவே புரட்சியாளரின் இருப்பிடமாயிருந்தது. ஊக்க மிருந்தது. ஆயுதப் பயிற்சி நடந்தது. பலாத்காரமான பேச்சுக்கள் பரவின! மிருகபலத்தார் கிராமந்தோறும் கிளர்ச்சி செய்தனர். இவர்களுக்கு எங்கிருந்தோ துப்பாக்கிகளும் கிடைத்துக்கொண்டிருந்தன. அயலாரை பலாத்காரமாக நாட்டை விட்டுத் துரத்தத் தூண்டும் பல தூண்டுப் பிரசுரங்கள் எங்கும் பரவின. அபினவ பாரத சங்கமொன்று ஏற்பட்டது. இப்படிப் புகைந்துகொண்டிருந்த தேசாபிமானம் ௧௯௧௧-ம் ஆண்டு ஜூன் மீ ௧௭-௨ அதன் உச்சியை யடைந்தது. மணியாச்சியில் ஆஷ்துரை வாஞ்சி என்பவரால் சுடப்பட்டார்.

நமது ஐயரே இத் தென்னிந்தியப் புரட்சியாளரின் தலைவர், அவரே அனைவரையும் பலாத்கார ராஜீய இயக்கத்திற்குத் தூண்டி விடுகிறார் என்று அரசாங்கத்தார் அவர் மீது சந்தேகித்து ராஜத்துரோக விசாரணைச் சபையார் கூறியிருப்பதாவது:— "வ.வெ.சு.ஐயர் புதுச்சேரியில் இந்திய வாலிபருக்கு துப்பாக்கிப் பயிற்சி கற்பித்தார். ௧௯௧௧-ஆம் ஜனவரி மீ ௨-௨ முதல் மூன்றாம் மீ வரையில் வாஞ்சி ஐயர் வ.வெ.சு. ஐயருடன் சேர்ந்து துப்பாக்கிப் பயிற்சி செய்தார். மற்றவர்களுக்கும் தக்க சமயத்தில் புதுச்சேரியினின்று துப்பாக்கிகள் வரும் என்று வாஞ்சி சொன்னார்" தன் கஷ்டத்திற்கெல்லாம் ஐயர் திண்ணிய நெஞ்சையே காட்டினார்.

௧௯௧௪-ம் ஆண்டு ஜெர்மன் யுத்தம் ஆயிரம் எரிமலைகள் போல் கிளம்பி கண்டத்தைக் குண்டுகளால் நிறைத்து இரத்தவெள்ளமாக்கியது. அப்போது கெய்சரின் மிருக பலத்தை உலகெலாம் புகழ்ந்து அஞ்சி நின்றது. நமது ஐயரும், அரவிந்தரும் ஜெர்மனியுடன் தந்தியில்லாதத் தந்தியில் பேசிக்கொள்வதாக அரசாங்கத்தார் சந்தேகித்தனர். ஐரோப்பாவில், தங்களை நொறுக்கும் ஜெர்மன் குண்டுகளையும், இந்தியாவில் ஓங்கும் புரட்சிகளையும், ஐயரையும் எண்ணஎண்ண அதிகாரவர்க்கத்தின்மனம் திடுக்கிட்டது. பிரெஞ்சு கவர்னர் ஐயரின் கல்வி யறிவையும் வீரத்தையும் வியந்து ஆங்கில அதிகாரிகளை அவரை அணுகாதிருக்கும்படி கண்டிப்பாய் எச்சரிக்கை செய்தார்.

நமது ஐயர் யுத்த சமயத்தில் ஏதாயினும் ஜெர்மனிக்கு சகாயமாகப்புரட்சிசெய்வரெனப் பிரிட்டிஷார் பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரிடம் சொல்லி அவரைத் தம் நாட்டினின்று மொராக்கோவிற்குத் துரத்த வேண்டுமென்றார். இச் சப்தம் பலப்படவே நமது ஐயர் தான் இத்தனை நாள் அருமையாக வளர்த்த தமிழுக்கு ஒரு புகழ் முடி சாற்ற எண்ணி, தன்னை நாடு கடத்தும் நாளை எதிர்பார்த்துக்கொண்டே, தன் தலைமேல் அரசாங்கத்தாரின் கத்தி தொங்கிக் கொண்டேயிருப்பதாக நினைத்து, வள்ளுவர் குறளை ௯-வாரங்களுக்குள் தெள்ளிய ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகிற் கீந்தார். நல்ல வேளையாய்த் தான் தமிழுக்குச் செய்ய நினைத்த தொண்டும் முடிந்தது. பிரெஞ்சு கவர்னர் நமது ஐயரையும் அரவிந்தரையும் அழைத்து "நீவிராக எங்களுக் சொந்தமான ஒரு தீவிற்குப் போய்விடுங்கள்.

உங்களுக்கு வேண்டியதைத் தருகிறோம் என்றார். தங்கள் செலவு திட்டத்தைச் சொல்லி ௨0,000 ரூ. செலவழிக்க முடியுமானால் போகிறோம் என்றார் ஐயர். கவர்னரும் இவர்களுடைய தைரியத்தையும் பெருந்தன்மையையுங் கண்டு புதுச்சேரியிலேயே இருக்கச் சொல்லிவிட்டார். இதன் பிறகு ஐயர் தமிழன்பினால் தூண்டப்பட்டு, "கம்ப நிலையம்" என்ற ஒரு பிரசுரசாலை நிறுவி அதன் மூலமாய் பல தமிழ் நூல்கள் ஆங்கிலத்தினின்று மொழி பெயர்த்தும் சொந்தமாய் எழுதியும் வெளியிட்டார். அவர் மொழி பெயர்ப்புக்களில் குறளும், எமர்ஸனின் தன்னம்பிக்கையும், முதன்மையானவை. மங்கையர்க்கரசியின் காதல், சிறு கதைகள், சந்திரகுப்த சரித்திரம், புக்கர் வாஷிங்டன், கரிபால்டி (அரசாங்கத்தாரால் பிடிக்கப்பட்டது) முதலிய நூல்களையும் இயற்றி இலக்கியத் துறைக்கில் உழைத்தார். இலக்கியமே எம்மிருவரையும் சேர்த்து வைத்தது. ஐயரின் சரிதை ஒரு அற்புத நாடகம். அதன் சுறுசுறுப்பும், உத்யமமும், போர்ச் சுவையும் பனிச் சென்று விறுவிறுப்பும் விரபாசமும் இதோடு முடிந்தது. இதனின்று ஐயரின் சரித்திரம் அடக்கமென்னும் திரையில் சாந்தமென்னும் தூரியத்தால் எழுதப்படும். அதனிடையே தான் தேசபக்தன் பத்திரிகையும், பல்லாரிச் சிறையும் சேரமாதேவி குருகுலமும் தோன்றும்.

ஐயரை எப்படியாவது இந்தியாவிற்கு வரும்படி செய்ய வேண்டுமென்று நாடு கருதிற்று. சில நண்பர் "ஏதாவது நிபந்தனைக் குட்பட்டேனும் வந்துவிடுங்கள் என்றார். ஐயரின் சுதந்திர ஆன்மாவா நிபந்தனைப்படும்? இச் சமயத்தில் மகாத்மா காந்தியின் புகழும், சாத்விகச் சங்கு உலகமெல்லாம் ஊதிற்று. அதன் தத்துவமும் அதைப் பிரயோகித்தால் நாட்டிற்கு விளையும் பெரு நலமும் இவருக்குப் பட்டது. சத்தியமும் பொறுமையும் வெல்லுமென்பதை மகாத்மா தென்னாப்பிரிக்காவிலும் கெய்ராவிலும் மற்றும் பல தடவைகளிலும் காட்டியதைஅறிந்த இவ்வீரனின்மனது எப்படியாவதுநாடுவிடுதலையடையாதா என்க் கருதி அஹிம்ஸா தர்மத்தைச் சரண் புகுந்தது. காந்தியும் புதுவையில் இவருடன் பேசநேர்ந்தது. அவர் அவ்வீரரின் மனதைக் காந்தமெனக் கவர்ந்தார். ஐயர் கத்தியை மறந்தார். ஆத்ம சக்தியை வளர்த்தார். அரசாங்கத்தாரும் வரவர இவருடைய சாத்விகத்தைக் கண்டனர். ௧௯௧௯-ம் ஆண்டு ராஜீயக் குற்றவாளிகளுக்கெல்லாம் பொது மன்னிப்பு ஈந்து அரசர் பெருமான் ஒரு விளம்பரம் விடுத்தார். புதுவையிலுள்ள தேச பக்தர்களும் தடையின்றி ஆங்கில ராஜ்யத்திற்குள் வரலாமென்று சட்ட சபையில் கவர்னர் சொல்லிவிட்டார்.

தமிழ் நாடெங்கும் ஒரு புதிய ஊக்கம் பிறந்தது. "நமது தமிழ் நாட்டுப் பிரதாபசிங்கன் வருகிறான்! தேசாபிமான கேசரி வருகிறான்! பாரத நாட்டு வான்யாத்மன் வருகிறான்" என்று ஆரவாரித்து ஒலி கிளம்பத் தமிழர் ஒலித்தனர். வ. வெ. சு. ஐயர் சென்னைக்கு வந்தார். தேசபக்தன் பத்திராதிபராய் மாதம் ௬00 ரூ. சம்பளம் பெற்று அமர்ந்தார். தன் வேலையை விடுத்த முதல் ஒற்றுமைபாராட்டிய ஐயர், மகாத்மாவின் இயக்கத்திற்காக பத்திரிகையிலும், பிரசங்க மேடையிலும் அரும்பாடு பட்டார். தேசபக்தன் ஒரு சிறந்த தினசரியாக இலங்கியது. தன் மனத்தைத் தமிழ் நாடெங்கும் பரப்பி, தமிழரின் ஊக்கத்திற்கும், தியாகத்திற்கும் பெரிய தூண்டு கோலாக இருந்தது. தொழிலாளருக்காக மிகவும் பாடுபட்டார். காருண்டிக் கோமகன் வந்தபோது தெருத் தெருவாக நின்று பகிஷ்கார இயக்கத்தைப் பரப்பினார். இதுவல்லாமல் தேசபக்தன் ... ழருக்கும் உண்டான புகைச்சலை ... மாகத் தீர்த்து வைத்து ஜாதி ஒற்றுமைக்காக உழைத்தார். ஆயினும் ஐயருக்கு இ...

சகிப்புகள் பல எதிர்த்துநின்றன. தேச பக்தன் சொந்தக்காரர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது. ஐயர் தன் ஆசிரிய பதவியை ராஜிநாமாச் செய்தார். ஏதோ ஒரு மாதத்தில் யாரோ ஒருவர் எழுதிய வியாசத்தை ராஜவிரோதமானது எனக் குற்றம் சாற்றி அரசாங்கத்தார் ஐயரை விஜாரணை செய்தனர். ஐயர் குற்றமொன்றும் அறியார். எதிர் வழக்கிடவும் ஒத்துழையாமைப்படி ஒத்துக் கொள்ளார். இல்லாவிடில் இந்த பாரிஸ்டருக்கு வாதாட வாயில்லைபோ! தேசத்திற்காக வருந்தவே அவர் மனம் தூண்டிற்று. சத்தியமூர்த்தியைப் போல் தன் குற்றத்தை ஏற்றுக்கொண்டு தனக்கு எவ்வளவு தண்டனை வேண்டு மென்றாலும் விதிக்கலாம் என்றார். சர்க்கார் விதித்த ௯-மாதம் சாதாரணச் சிறை வாசத்தை, சொக்ராத்தன் கிரேக்க அரசாங்கத்தார் தனக்கிட்ட தண்டனையை ஏற்றுக்கொண்டது போல், புன்னகையுடன் ஏற்றுக்கொண்டார்.

பல்லாரிச் சிறையில் ஐயர் எழுதிய குறிப்புகளை என்னிடம் அடிக்கடிகாட்டிக் களிப்பார். சுருக்கமாக அவர் அங்கு கம்பனுடனேயேவாழ்ந்து, அங்கிலத்தில் "கம்பன் ஆராய்ச்சி" என்ற சிறந்த நூலை எழுதினர். உமர்கையம், ஷாதி, முதலிய கவிகளும் இவர்சிறையைவசந்தச்சோலையாக்கினர்கள். ௯-மீ தவச்சாலையில் இருந்ததின் பயனாக அவருக்கு நாட்டு இளைஞர்க்காக ஆசிரமம் வைத்துக் கல்வித் துறையிலேயே உழைக்க வேண்டுமென்ற அவல் பிறந்தது. சிறையை நீத்ததும் துங்கபத்திரா ஆசிரமத்திலிருந்த தன் குடும்பத்தை அழைத்துக்கொண்டு வந்து வரகனேரியில் விட்டுவிட்டு கோவில்பட்டியில் நடந்த திருநெல்வேலி ஜில்லா சபைக்குத் தலைமை வகித்தார். அதன் பிறகு கல்லிடைக்குறிச்சி திலகர் வித்தியாலயத் தலைவரானர். அதைச் சார்ந்து ஒரு குருகுலமும் ஏற்படுத்தி நடத்தி வந்தார். அக் குருகுலத்தை நடத்த பரத்துவாஜ ஆசிரமம் என்ற ஒரு நிர்வாகக் குழுவையும் ஏற்படுத்தினர். பிறகு ௧௯௨௪-வது சேரமாதேவியில் ௧௧-ஏகர் நிலம் வாங்கி அதற்கு பாரத்துவாஜ ஆசிரமமும் குருகுலமும் மாற்றப் பட்டது. எனக்கும் ஐயருடன் உடலும் உயிரும் போல் பழகும் பாக்கியம் கிடைத்தது.

(தொடரும்)

நமது சிற்பச் செல்வம்

புஷ்பகிரிக்கோயில்

கடப்பைக்கு வடகிழக்கே பத்துமைல் தூரத்தில் பெண்ணாற்றின் கரையில், புஷ்பகிரி என்னும் ஊர் உள்ளது. இதனருகே புஷ்பகிரி யென்ற [illegible]ள்ளது. இதில் சைவரும், வைணவரும் தொழ ஒரு கோயில் உள்ளது. சைவர் இக் கோயிலை மத்திய கைலாசம் என்றும், வைணவர் இதனை மத்திய அஹோபிலம் என்றும் சொல்லுவர். ஒரு காலத்தில் கருடாழ்வார் தன் தாயாருக்கு அமிருதம் கொண்டு போனர். அதில் ஒரு சொட்டு இவ்விடமிருந்த ஒரு குளத்தில் விழுந்தது. உடனே அக் குளம் அமிருதமானது. அக் குளம் மிகவும் கருவ மடைந்தது. இதை யடக்க பிரம்மாவின் தூண்டுதலால் அனுமார் ஒரு மலையை அதில் போட்டார். அம் மலை புஷ்பம் போல்

மிதந்ததால் அதற்குப் புஷ்பகிரி என்று பெயர் வந்தது என்று நம்பப்படுகிறது.

இம் மலையின் மீது காசி விஸ்வநாதருக்கும், ராகவனுக்கும், வைத்தினாதனுக்கும், திருகோடீச்சுரருக்கும், பீமேச்வரருக்கும், நாகேச்சுவரருக்கும், கமல சாம்பேஸ்வரருக்கும், சிவனுக்கும், வாதனுக்கும் கோயில்கள் இருக்கின்றன. இவை சோழ மன்னர்களால் கட்டப்பட்டவை. புஷ்பகிரிக் கோயில்களில் சிவன் அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் தருவது போலும், பார்த்தசாரதி அருச்சுனனுக்குக் கீதை சொல்லுவது போலும் கல்வெட்டுகள் உள்ளன. இராமாயண மஹாபாரதப் படங்களும் இவற்றில் காணப்படுகின்றன. இக் கோயில்களின் காட்சியைப் படத்தில் காட்டியுள்ளோம்.



புஷ்பகிரிக் கோயில்

சிருங்கேரி.

சிருங்கேரி, மைசூரைச் சேர்ந்த காடூர் ஜில்லாவில் கடல் மட்டத்திற்கு ௨௩௬௬ அடிக்கு மேல், துங்கபத்திரை நதிக் கரையி லுள்ளது. இராமர் காலத்தில் இங்கே சிருங்கரிஷி வசித்தார். இதனருகிலுள்ள சக்கரைப் பட்டணத்தில் ருக்மாங்கதன் ஆண்டதாகச் சொல்லப்படுகிறது. இங்கே தான் மிருகண்டரிஷி தவஞ்செய்து மார்க்கண்டனை யடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

சிருங்கேரியில் பல கோயில்கள் இருப்பினும் அவற்றுள் வித்தியாசங்கராலயமே கீர்த்தியானது. இதன் கல்வெட்டுகளும் சித்திர வேலைகளும் வெகு அருமையானவை. தசாவதாரங்களும், சரஸ்வதியும், லக்ஷ்மியும், சிவனும், பார்வதியும் இதன் தூண்களினின்று பேசுவது போலும். மார்க்கண்டேயர், யமன், மன்மதன், வியாசர், சங்

கார், முதலியோரின் சிலைகளு மிருக்கின்றன. இக் கோயிலில் கற்சங்கிலிகள், தொங்குகின்றன. இவற்றைக் கண்ட அயல் நாட்டார் வியப்புறுகின் றனர். இக் கோயிலில் நவரங்க மண்டபமொன் றுண்டு. அதன் ௧௨ தூண்களிலுள்ள சிம்மங் களின் வாயில் கற்குண்டுகள் உருளுகின்றன. இப் பன்னிரண்டு தூண்களிலும் ௧௨ ராசிகள் செதுக்கப்பட்டுள்ளன. அந்தந்த ராசியின் படியே ஒவ்வொரு மாதமும் வெய்யில் அத் தூண் களின் மேல் படிகிறது! இச் சிற்பச் சிற்பிகளின் திறமைதான் என்னேயது! வித்தியா சங்கரர் கோயிலுக்கு மேற்கே, சங்கர பீடக் குருக்களின் சமாதிகள் உள்ளன. சங்கராசாரியார்களுக்கு இங்கு எல்லா அதிகாரமும் உண்டு. ஹைதரும், திப்புவுங்கூட இவர்களிடம் மிகு வணக்கமுட னேயே நடந்து கொண்டனராம். தன் போர் களில் ஜயமுண்டாகச் சில பூஜைகள் செய்யும்படி யும் திப்பு சங்கராசாரியாரைக் கேட்டுக் கொண் டானாம்.

சிருங்கேரியின் காட்சி படத்தில் உள்ளது.



சிருங்கேரி

ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் மீது சரம கவிகள்

(நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை பாடியவை)

தமிழ் மொழியின் பெருமை தன்னை
உலகறிய எடுத்தறைந்த தனிப்பறையின்
பேரோசை தணிந்ததேயோ;
தமிழுரைத்தக் கவியரசன்
சுவை விளக்கக் கம்பனுக்குத் தூது வந்த
பாதமலை துவண்டவேயோ!
அமிழ்ந்துறங்கும் தமிழர்களை
அடிமையிருள் அகன்றதென அழைத்தெழுப்பும்
கோழி குரல் அடைந்ததேயோ!
குமிழ் துரையின் மலையருவிச்
சுழல் விழுந்துக் குருகுலத்துச் சுப்ரமண்ய
ஐயருடல் மறைந்த கொள்கை!

வருகுலத்துப் பெற்றெடுத்த ஒரு மகனைக்
கரையேற்ற வாவி வீழ்ந்து,
குருகுலத்துத் திருமகவைத் துயர்க் கடலில்
அழுத்தி விட்டாய் குற்றமன்றோ?
மறு குலத்தை இகழ்ந்துரைக்கும் ஜாதிமதம்
அறியாத மனத்தோய்! வீரம்
தருகுலத்துத் தமிழ் நாட்டின் தவமுதிர்ந்து
விழுந்ததெனும் தன்மைதானே.

சுழிந்தோடி மடுக்கள் மிகும் உலகநடைச்
சுழல்கள் பல நீந்தியேறி
வழிந்தோடும் மலையருவிச் சுழல் விழுந்துக்
கரையேற மாட்டாயேனோ?
கொழுந்தோடிப் படர்கலையின் குளிர் ஞானக்
குன்றே யோர் குன்றினின்றும்,
ஒளிந்தோடி மறைந்தனையே உடன் போந்த
சிறுவர்களின் உணர்ச்சியோட.

நீரிடை மூழ்கி அன்னை நிலம்புக விரும்பினையோ
சோறிடும் பொருளை ஆற்றின் துளியில் நின் ஆசை தோய்க்க

ஆறிடும் இடங்களெல்லாம் அறத்துறை கடவா மேன்மை
வீறிடும் தமிழர் வீரம் முளைத்தினி விளைய வேண்டி.

தேனாட்டும் தென் மொழியும் தெருளோட்டும்
வடமொழியும் தெளியத் தேர்ந்து
மேனாட்டின் பலமொழியும் மிகக் கூட்டிக்
கடைந்தறிந்த ஞானமெல்லாம்
தாய் நாட்டின் விடுதலைக்கே தனி நாட்டித்
தவம் புரிந்தத் தகைமையாளா
வானாட்டின் சிறந்த தென்பாய் தமிழ்நாட்டைத்
துறந்து நீபோய் வாழ்வதெங்கே?

குழந்தையை நினைத்தாய் கொல்லோ குருகுலந் தன்னைக் காரேறு!
பழந்தனித் தமிழர் வீரம் பாழ்த்ததற் கிரங்கினையோ
அழுந்திய பாரத நாட்டின் அடிமையில் அயர்ந்திட்டாயோ
விழுந்திடும் நீரில் மூழ்கும் தேகத்தை விட்டபோது!

உன்னிலும் படித்த வல்லோர் உலகினில் பலபேர் உண்டு
உன்னிலும் படித்தவாறு நடப்பவர் எவரோ எங்கோ
பொன்னிலும் போக வாழ்வின் முயற்சியும் மயக்கம் போக்கி
நின்னுடைத் தூயவாழ்வில் நிலைத்தவர் சிலரே ஐயா.

ஐயரெனில் அந்தணராய் அனைத்துயிர்க்கும்
செந்தண்மை ஆள்வோரென்று
செய்யதிரு வள்ளுவனார் செய்த மொழி
ஒரு சிறிதும் சிதை வுறாமல்
மெய்யறிவை யுற நாடி மெய் வருத்திப்
பொய் வெறுத்த மேன்மையாலே
ஐயரெனத் தனியுரைத்தால் உன்னையன்றித்
தமிழுலகம் அறியாதையா.

நீ கண்ட குருகுலத்தில் இகழ்வுண்ட
மனத்தாங்கல் நீங்கவேண்டி
தாய் கண்ட பேரன்பன் தலை மூண்ட
காந்தி யுரை தவறிற்றென்று
பாய்கின்ற சிறு நதியின் படர்கின்ற
வழியோடிப் பரவை சேர்ந்து

காய்கின்ற வடவனலில் கிடந்தவசப்
புரியவதில் கலந்தாய் கொல்லோ!

முழுமதி மயிர்த்தாலன்ன முகந்திகழ் கருணை நோக்கும்
மூர்க்கரும் நேரிற் கண்டால் முகந்திடும் சாந்த வீச்சும்
குழலினும் இனியதாகக் குழந்தையின் மழலைப் பேச்சும்
குவிந்திடும் உதட்டின் மீதும் கூத்திடும் சிறப்பின் கூட்டும்
தழலினும் தூய வாழ்வும் தாயினும் பெரிய அன்பும்
சத்திய நிலையும் முன்னாள் தவமுனி இவனே யென்னப்
பழகிய பேயும் போற்றும் படித்தொரு வடிவந்தன்னைப்
பாரிடை இனிமேல் வேறு யாரிடைப் பார்ப்போமையா!

ஆலோகன அவலோகனம்

"பாலபாரதி"யின் எழில்.

பாலபாரதியைத் தொடங்கி நடத்திய தலைவரான ஸ்ரீ வ. வெ. சு. ஐயர், காலஞ் சென்ற பிறகு அது தொடர்ந்து நடக்குமோ வென்னும் சந்தேகம் சிலருக் கிருக்கலாம். ஐயர் பாலபாரதியை அனாதையாக விடுத் துச் செல்லவில்லை. அதன் பொறுப்பைத் தாங்கக் கூடிய வலிமையுடன் என்னிடம் அதை விடுத்தே சென் றார். ஐயரின் ஸ்தாபனங்களில் குருகுலமும், பாலபாரதி யும் முதன்மையானவை யாதலால் அவற்றை எப்படி யேனும் நடத்துவதாகவே உறுதி கொண்டுள்ளோம். ஸ்ரீமான் ஐயரின் கல்வித்திறனையும், வீரச் செயல்களை யும், தூய வாழ்வையும், தன்னயமற்ற பணிகளையும் தேச பக்தியையும் வியந்து போற்றும் தமிழ்நாடு, அவர் அருமை மகனான பாலபாரதிக்கு இனியும் வேண்டிய ஆதரவைத் தருமெனவே நம்புகிறேன். அழகான வியா சங்களாலும், அமிதமான சத்தாப் பொருளாலும், பால பாரதியை ஒப்பற்ற பத்திரிகை யாசியாக்க நம் தமிழ் நாட்டாருக்குத் திறமை யில்லையோ? வங்காளத்தை மாடேன் ரிவ்யூ, பிரவாசி; முதலிய பத்திரிகைகள் அலங்கரிக்கின்றன. "சாரதா" "பாரதி" என்ற தெலுங் குப் பத்திரிகைகள் ஆந்திரரின் சிறப்புச் செல்வத்தையும், கலைத் திறத்தையும், அறிவுப் பெருக்கையும் தெளிவுடன் காட்டிப் பரப்புகின்றன. நம் தமிழ் நாட்டுச் சிற்பமும் சித்திரமும், நூற் பெருமையும், நாகரிகமும், புலமையும் கவித் திறமும், பாலபாரதியின் மூலம் உலகிற்கு விளங் கும்படி செய்யத் தக்க ஆதரவும், ஊக்கமும் கொண்டு தமிழர்கள் முன் வருவார்களென நம்பியே அதன் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளேன்.

இனி நமது பாரதி, படித்தோருக்கு அமுதூட்டிப் புதிய வனப்புடன் தோன்றுவாள். உலகின் இணையற்ற

வீரர்கள், ஞானிகள், கவிகள், தீர்க்கதரிசிகள், கல்விமான்கள், தேசாபிமானிகள் முதலியோரின் திருவரலாறுகளும்; சிறந்த கவிகளின் திருவாக்குகளும் சிறந்த நூல்களின் சாரமும்; புதிய கல்வித் துறைகள், கலைவளம், மத ரகசியங்கள், அறவழிகள், தேச சரித்திரங்கள் சிறு கதைகள், கற்பனைகள், நாடகங்கள், அறிவு நூல் வியாசங்கள் முதலியன பாலபாரதியில் வரும். புதிதாக, பெண்களுக்குச் சிறப்பாயுள்ள விஷயங்களும், சிறுவர்களுக்குப் பயன்படும்படியான கட்டுரைகளும், அவ்வம்மாதம் தாய் நாட்டிலும், தமிழ் நாட்டிலும், இவ்வுலகிலும் நடக்கும் முதன்மையான சம்பவங்களின் சுருக்கமும் பாரதியில் காணலாம். இடையிடையே வர்ணப் படமும், சிற்பச் செல்வமும் பாரதியை அலங்கரிக்கும். தமிழ் நாட்டின் அன்பும், உதவியும் பெருகக் கிடைத்தால், பாலபாரதியை தமிழ் நாட்டின் வீரப் பெருக்கிற்கும், கலை வளர்ச்சிக்கும், அத்யாத்ம வாழ்விற்கும், கல்வி மறுமலர்ச்சிக்கும் ஒரு பெரிய தூண்டுகோலாக ஆக்கவே உறுதி பூண்டுள்ளேன். தமிழன்பர்களே தமிழ்ப் புதல்வியான, பாலபாரதிக்கு வேண்டிய துணை புரியுங்கள். ஒவ்வொரு வீட்டையும் "பாரதி" அலங்கரிக்கும்படி செய்யுங்கள். உங்கள் பேயர்களைச் சந்தாதாரராகச் சேருங்கள். கைகொடுக்க வாருங்கள்! (ப-ர்)

தமிழ்க் குருகுலம்

இதுவரையில் ஐயர் ஊனுடலில் மனித உருவுடன் குருகுலத்தை நடத்தி வந்தார். இனி அவர் வீர விண்ணினின்று தெய்வ வுருவுடன், எங்களுக்குத் துணைபுரிவாரென்ற நம்பிக்கையுடனேயே, தன்னயம் விடுத்த அன்பர்களைக் கொண்டு குருகுலத்தை நடத்த உறுதி கொண்டுள்ளோம். கல்வியும் தொழிலறிவும் நாளுக்கு நாள் மாணவரிடையே பெருகி வருகின்றன. கல்வியிலும், ஒழுக்கத்திலும், தியாகத்திலும் சிறந்த நமது ஆசிரியரின் திறமையான ஆட்சியில் குருகுலம் நாள் தோறும் மேலும் பெருகி விளங்குகிறது. தமிழ், ஆரியம் ஹிந்தி, ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், பூகோளம் அறிவுநூல், சங்கீதம், நூற்றல், நெசவு, பயிர்த் தொழில் முதலியன முன் போலவே, சிறப்பாக நடந்து வருகின்றன. இவற்றையெல்லாம் ஊனக்கண்ணால் ஐயர் பார்க்கமுடியாதது தான் ஒரு குறை.

ஆனியீ கூ-ட நடந்த ஆசிரமிகளின் காரியசபைக் கூட்டம். அடியில் வருமாறு தீர்மானித்திருக்கிறது. :—

"ஸ்ரீ வ. வெ. ஸு ஐயரவர்களுடைய ஞாபகத்தை நிலை நிறுத்துவதற்கு அவர்கள் தலைமையின் கீழ் ஆரம்பித்து நடத்தி வந்த பரத்வாஜ ஆசிரமம், குருகுலம் பாலபாரதி முதலிய ஸ்தாபனங்களை வளர்ப்பதே மேலான தாதையால், அந் ஸ்தாபனங்களின் அபிவிருத்திக்காக ஸ்ரீ வ. வெ. ஸு ஐயர் ஞாபக நிதியை ஆரம்பித்துப் பொது ஜனங்களின் உதவி கொண்டு பொருள் சேர்க்க வேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று."

தமிழ் நாட்டின் இருளைப் போக்க உதித்த இக் குருகுல விளக்கிற்குத் தமிழர் பொருள் வார்ப்பார்களாக! நாட்டின் வறுமையைப் போக்கிச் செல்வம் பெருகப் பல தொழில்களைப் பரப்பும் நோக்கமுடைய இக் குருகுலத்தை நம் நாட்டார் ஆதரிப்பார்களாக! தமிழ் நாட்டில், ஒரு பஜாஜ், ஒரு பொம்மாஞ்ஜி இல்லையா? குருகுலக் கொடிக்குத் தமிழர் ஆதரவுப்பால் வார்த்து அறிவுக் கனி பழுக்க வைப்பார்களென நம்பியே, எங்கள் முழு ஆயுளையும் இதற்கு அர்ப்பணித்து ஈடு பட்டு மனதைப் பராசக்தியால் வைத்து உழைத்து வருகிறோம்.

அந்தோ தாஸருமா!

அந்தோ ஆறாப் புண்ணில் அம்பு நுழைந்தது! ஒரு சிறந்த வீரனை நேற்றுத்தான் இழந்து வருந்தினோம். அத்துயர் இன்னும் ஆறவில்லை. இன்று காலவேடன் நமது தாஸின் ஆவியையும் உறிஞ்சி விட்டான்! பட்ட காலிலேயே பட்டதே! சுதந்திர தேவியின் இதந்தரு மைந்தன்! பாரததேவியின் வீரிய அன்பன், கல்வியும் செல்வமும் கருணையும் மிக்கோன், தன்னயம் விடுத்த தியாகமூர்த்தியை இழந்து அன்னையே, பாரத தேவியே எப்படிச் சகிப்பாய். அந்தோ பாரத சகோதரர்களே! யாக்கையும் பொருளும் அருட் பணிக்கீந்து, ஈட்டியதெல்லாம் எளியவர்க்கீந்து, எங்கும் புகழும் வங்கச் சிங்கமோ இன்று ஆவி துறந்து அவனியை நீத்தது, மாளிகைச் செல்வம் மாசென விடுத்து, ஏழையின் வாழ்வை இன்புற அணிந்தோய்! தந்தையின் கடனை வலுவில் தந்தே மூத்தோன் குலத்தின் முது புகழ் காத்தோய்! எந்தமை விடுத்து எகினையின்றே! ஒற்றுமையாமையின் ஓசை கேட்டதும், தேடிய செல்வம் சிறிதென விடுத்து நாட்டுப் பணியே நலமெனப் பூண்டு, வீட்டினை நீத்து இராட்டின மெடுத்து, கதரை யணிந்து, சாந்தியைப் பேணி, புன் சிரிப்போடு வெஞ்சிறை புகுந்த, தியாகப் பெருக்கே, தவம்பெறு கனியே, நின்னை யிழந்தோம், நொடித்துய ருழன்றோம்! என்னே வாழ்வு! என்னே வாழ்வு! சட்ட சபையில் தாய் நாட்டிற்கே சாதகமான வாதினைச் செய்தாய்! இரட்டை யாட்சி இலதென ஆக்கினை, நின் பேச்சு வன்மையும் பீடுறு செய்கையும், மூச்செலாம் தேசம் முதன்மை யடையும் பணிக்கே யிட்ட பண்பும் பரிவும், என்னென் றுரைப்பேன்! ஏழைகள் தோழ! என்னுடை யரசே! வீழுடலாக விளங்காயாகிலும், நின் வாழும் புகழுடல் வனப்பை மறப்பமோ! ஆவியுடலோடு அமரர் உலகில் மேவினை! எமக்கு மேனின்று தவிச் சுதந்திரமடையத் துணை புரிவாயே! அருட்பணியாலே யமரருள், திருத்தகு மைந்த உன் தெய்வ ஆவி சாந்தம் பெறுக! சாந்தம் பெறுக!

16224

சிறந்த தமிழ் நூல்கள்!

பாரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சிறும்சிறப்பு மற்று, பரிகாசத்துக்கிடமாய் விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்குமுணவளித்த நாமவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலை யின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இந்நிலையை நீக்கி, முன்போல் உயர் பதம் பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜிய நிலைமை பெற்றுமன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முயல வேண்டும். ஆதலின் தேசச் செல்வ நிலையை நன் கறியவும் நம் ஜன சமூகத்தின்கும் நன்குணர்ந்து தேசத்தொழிலைவிருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

விலை ரூ. க—0—0

மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமான தவச்சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளன் றியாது சாத்வீக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவராலே கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ. 0—அ—0

சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தினுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்து வணிகரான கோவலன் அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் பிறழ்ந்து தவறினும் உயிர் வாழா ரென்பதையும், கற்புடைய மகளிரை மக்களே யன்றித் தேவரும் முனிவரும் கைதொழு தேத்துவ ரென்பதையும் முன்னர் செய்த இரு வினையும் செய்த முறையே செய்தோரை நாடிவந்து பின்னர் உருக்கொண்டு நின்று நுகர்விக்கு மென்பதையும், யாவரு மறிந்துய்யக் கருதி, கதை கூறுமுகத்தானே, இம் மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந் நூற்குச் சிலப்பதிகாரமென்று பெயரிட்டனர். ந. பலராமய்யர் அவர்கள் எழுதியது.

விலை ரூ. க—0—0

மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு விளக்கி ஆதியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. கல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரீகம் நாகரீகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் விஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் மனமயக்கம் நீங்கி, தெளிவு உண்டாகி, தேசாபிமான உணர்ச்சி உண்டாகும். விலை ரூ. 0—அ—0

கிடைக்குமிடம்:-

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டித் தெரு, சென்னை.

பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரீகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள்,
ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன
மிகச் சரசமாகக் கிடைக்கும்.
காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி,
கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

SILK PITAMBAR Co., BENARES CITY

T. B. T. Malays, French Perfumers,
KALAKKADU POST, TINNEVELLY DIST.

(o)

Hair Oil Essence! Cheap Price கூந்தல் தைல வாசனை!

[c]

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் வாசனைகளால் நீங்களே 16- அவுன்ஸ் அளவுள்ள நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாதாமி எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவைகளில் உயர்ந்த கூந்தல் தைலம் தயார் செய்துகொள்ளலாம். கடைகளில் விற்கப்படும் 2-அவுன்ஸ் புட்டிகளுக்கு ரூ 1—0—0 கொடுத்து ஏமாற வேண்டாம்.

NAME			PRICE	NAME			PRICE
ரோஸ்	½ oz	Rs.	1—12—0	கஸ்தூரி	½ oz	Rs.	2— 0—0
மல்லிகைப்பூ	,,	,,	1—12—0	தாமரைப்பூ	,,	,,	1— 4—0
வெட்டி வேர்	,,	,,	1—12—0	தாழம்பூ	,,	,,	1— 0—0
மனோரஞ்சிதம்	,,	,,	2— 0—0	மகிழம்பூ	,,	,,	2— 8—0
சந்தனம்	,,	,,	1— 4—0	குந்தலப்பூ	,,	,,	1— 0—0
ஷிலிடி ரோப்	,,	,,	1— 8—0	சுரங்கி	,,	,,	1— 8—0
சைபர்	,,	,,	2— 0—0	செண்பகப்பூ	,,	,,	2— 8—0
அம்பர்	,,	,,	2— 4—0	நெரோலி	,,	,,	2— 0—0
கருணைப்பூ	,,	,,	1— 4—0	பிச்சிப்பூ	,,	,,	1— 0—0

முக்கிய கவனிப்பு:—எங்களுடைய வாசனைகளில் ஒரே தடவையில் 6-புட்டிகள் வாங்குவோருக்கு ஒரு தங்கப் பவுண்டன் பேனாவும், தைலத்திற்குச் சேர்க்கக்கூடிய கலரும் இனாமாக அனுப்பப்படும். தபால்சார்ச்சு வேறு.

THE KURAL

OR

The Maxims of Tiruvalluvar

Translated by

Acharya V. V. Subrahmanya Aiyar.

Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.

(o)

The difficulty of unravelling the sense out of the cryptic though magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition is beautifully bound and is ready for sale.

Price Rs. 5. V.P.P. charges 8 as.

for copies apply to:—

The Bala Bharati Bookshop, Sheramadevi.

இரண்டு அரிய நூல்கள்

குரு கோவிந்த சிங்கன்

பாரத தர்மத்தை நிலைநிறுத்த அரிய தியாகங்கள் செய்த ஒரு வீரனுடைய சரிதை.

வேண்டுவோர் ருஉ அணா தபால்தலை அனுப்பவும்.

ஜாரதுஷ்டிரன்

ஜொராஸ்தர் என்ற பாரசீக மதகுருவின் திவ்விய சரித்திரமும் உபதேசமும்

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது)

வேண்டுவோர் இரண்டரையணா தபால் தலை அனுப்பவும்.

ஷை இரண்டு புத்தகங்களும் வேண்டுவோர் எஉ அணா தபால்தலைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:—

“பாலபாரதி” புஸ்தகசாலை, சோமாதேவி.

(திருநெல்வேலி ஜில்லா).

சோமாதேவி “குருகுல” அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, ரா. அனந்தகிருஷ்ணனால் பிரசுரிக்கப்பெற்றது.